
சத்தீஸ்கர் தாக்குதல் குறித்து முற்கூட்டியே எச்சரிக்கப்பட்டது
பக். 06


மலேசிய விமானத்தின் மர்மம் தொடர்கின்றது
பக். 07


யூதர்களும் ஈழத்தமிழரும்
பக். 12


தொடரை வென்றது மேற்கிந்தியத் தீவுகள்
பக். 23


இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 107 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 29, வியாழன் 13.03.2014


## திருத்தப்பட்ட அடுத்த வரைவு சனியன்று அமெ. சமர்ப்பிப்பு

### முன்வைக்கப்பட்ட யோசனைகளை உள்ளடக்கப்பட்டதாக வரும்

ஜெனிவா, மார்ச் 13
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால் முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்தின் இரண்டாவது வரைவு நாளை மறுதினம் சனிக்கிழமை முன்வைக்கப்படவுள்ளது. அன்றையதினமே அது சபையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளின் பார்வைக்கு வழங்கப்படவுள்ளது.

அமெரிக்கா முன்வைத்த முதலாவது வரைவு தொடர்பில் தமிழர் தரப்பிலிருந்தும் காட்டமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. போர்க் குற்ற விசாரணை ஒன்றை இந்த வரைவு வலியுறுத்தவில்லை என்று தமிழர்கள் சுட்டிக்காட்டினர். அமெரிக்கா ஏமாற்றிவிட்டது என்று தமிழகத்தில் அரசியல் தலைவர்கள் சிலரும் மாணவர்களும் கொந்தளித்துக் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பில் நிதானமாகக் கருத்துக்களை வெளியிட்டாலும், போர்க் குற்ற விசாரணை தொடர்பில் அழுத்தமான வாசகங்கள் அடங்கிய தீர்மானம் ஒன்றே நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தமது எதிர்பார்பை அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளிடம் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

அதே சமயத்தில் முதலாவது தீர்மான வரைபு தொடர்பில் இதுவரையில், மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் இரண்டு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அவற்றில் மேற்குலக நாடுகள், தீர்மானம் இன்னும் காத்திரமானதாக வரையப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தன. இலங்கைக்கு ஆதரவான நாடுகள் தீர்மானத்தின் வாசகங்கள் இன்னும் மென்மைப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தன.

பொறுப்புக் கூறுவதற்கு இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் அவை கோரிக்கை விடுத்திருந்தன. ஆனால் தீர்மான வரைபுக்கு ஆதரவான நாடுகள் சர்வதேச விசாரணை உள்ளடக்க வேண்டும் என்று கோரியிருந்தன. குறிப்பாக அமெரிக்க தீர்மான வரைபில் உள்ள 8 ஆவது பரிந்துரையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் கண்காணிப்பு மற்

21 ஆம் பக்கம் பார்க்க

## இன்றும் நாளையும் தபால் மூல வாக்களிப்பு

கொழும்பு, மார்ச் 13
மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. இவ்விரு மாகாணங்களிலும் ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 796 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்துள்ளன என தேர்தல்கள் செயல

21 ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளத்தில் எலும்புக்கூடு கண்டுபிடிப்பு

மாங்குளம், மார்ச் 13
மாங்குளம் காட்டுப் பகுதி ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவரின் எலும்புக் கூடு நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
மாங்குளம் - கிளிநொச்சி ஏ-9 பிரதான வீதியில் 225 மைல்கல்லுக்கும் 226 மைல்கல்லுக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள காட்டுப் பகுதியிலேயே இந்த எலும்புக் கூடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலரால் மாங்குளம் வடக்கு மாதர் முன்னேற்றச் சங்கத்துக்கு வழங்கப்பட்ட காணி

21 ஆம் பக்கம் பார்க்க

## இன்று நடக்க இருந்த பேச்சு திடீர் நிறுத்தம்

### இந்தியக் குழு வராததால் வடக்கு மீனவர்கள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச் 13
இலங்கை - தமிழக மீனவர்களுக்கு இடையில் இன்று நடைபெறுவதாக இருந்த இரண்டாம் கட்டப் பேச்சு திடீரென நிறுத்தப்பட்டுள்ளது. இந்திய மத்திய அதிகாரிகள் சிலரால் கலந்துகொள்ள முடியாமல் போனதால் திகதி குறிக்கப்படாமலேயே பேச்சு ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்துச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டும் கூட, இந்தியக் குழுவினர் வராமையால் இன்றைய பேச்சு ஒத்தி வைக்கப்பட்டமை ஏமாற்றமளிப்பதாக இருககின்றது என்று இலங்கை மீனவர்கள் தெரிவித்தனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

## 116 இந்திய மீனவர்கள் படகுகளுடன் விடுதலை

### 32 பேருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்



விடுவிக்கப்பட்ட மீனவர்களில் சிலர்

யாழ்ப்பாணம், மார்ச் 13
இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணச் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 116 தமிழக மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த ஜனவரி 29 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 38 மீனவர்களும், கடந்த பெப்ரவரி முதலாம் திகதி கைது செய்யப்

21 ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டன் செல்வதை தவிர்த்தார் ஜனாதிபதி

### புலம்பெயர் தமிழர் எதிர்ப்பே காரணமாம்

கொழும்பு, மார்ச் 13
பிரிட்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாள் நிகழ்வில் பொதுநலவாய அமைப்பின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கெடுக்காது தவிர்த்துள்ளார். அவருக்குப் பதிலாக வெளிவிவகார அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் கலந்து கொண்டுள்ளார்.
பொதுநலவாய நாளை முன்னிட்டு லண்டனில் உள்ள வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தில் சிறப்பு ஆராதனைகள் நடத்தப்படவிருந்ததுடன், பொதுநலவாயப் பொதுச் செயலர் கமலேஸ் சர்மாவால் வரவேற்பு உபசாரம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.



மஹிந்த ராஜபக்ஷ

பொதுநலவாய அமைப்பின் தற்போதைய தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரிட்டன் மாகா ராணி எலிசபெத்துடன் இணைந்து இந்த நிகழ்வுகளுக்குத் தலைமையேற்கவிருந்தார். எனினும் அவருக்குப் பதிலாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸே நிகழ்வுகளில் பங்கெடுத் திருந்தார்.
கடந்த இரு வருடங்களில்

21 ஆம் பக்கம் பார்க்க

## தமிழருக்கு உரிமை பகிரப்பட வேண்டும்

### ஜெனிவாவில் நிமல்கா பெர்னாண்டோ வலியுறுத்து

ஜெனிவா, மார்ச் 13
தமிழ் பேசும் மக்கள் தங்களது தாயகத்தில் தங்களைத் தாங்களே ஆழ்வதற்கு உரிமைகளை பகிர்ந்தளிக்க வேண்டும். இதனையே நாம் நெடுங்காலமாக வலியுறுத்தி வருகின்றோம். ஆனாலும் மனித உரிமைகள் என்ற பதத்தை இலங்கையில் எங்குமே பயன்படுத்த முடியாத நிலையே காணப்படுகிறது.

21 ஆம் பக்கம் பார்க்க

## பாலியல் வன்முறைகளுக்கு எதிராக நெல்லியடியில் நாளை போராட்டம்

மாங்குளம், மார்ச் 13
வடக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாகத் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களைக் கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை நெல்லியடி நகர பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டமும் கவனவீர்ப்பு போராட்டமும் நடைபெறவுள்ளன.
முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தக் கண்டன ஆர்ப்பாட்டமும் கவனவீர்ப்புப் போராட்டமும் நெல்லியடி நகரில் ஆரம்பித்து கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நிறைவடையவுள்ளது.
வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் ஊடாக வடமாகண, மாவட்ட அரச அதிபாகளுக்கு மனுக்கள் கையளிக்கப்படவுள்ளதுடன், வடமாகண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடமாகண பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கும் மனுக்கள் கையளிக்கப்படவுள்ளன.

21 ஆம் பக்கம் பார்க்க

## பிரேரணை சொற்பதம் அஞ்சுகிறது இலங்கை

கொழும்பு, மார்ச் 13
"சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கு வழிகோலும் வகையிலேயே அமெரிக்கப் பிரேரணை வரைவில் வசனங்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன. இதுவிடயம் தொடர்பில் இந்தியாவின் நிலைப்

21 ஆம் பக்கம் பார்க்க

# வலி. வடக்கு மீள்குடியமர்வுக்கு எண்ணிக்கை ஒரு தடையல்ல

## யாழ். அரச அதிபர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வலி.வடக்குப் பகுதியில் மீள்குடியமர்த்தப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை ஒரு பிரச்சினையே இல்லை. அது குறித்து விவாதிப்பதை விடுத்து மீள்குடியமர்வுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.

வலி.வடக்கு மீள்குடிமயர்வு தொடர்பில் தொடர் சர்ச்சைகள் நிலவி வருகின்றன. மீள்குடியமர்வுக்கான புள்ளி விவரங்கள் ஒவ்வொரு தரப்பினராலும் ஒவ்வொரு விதமாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்.மாவட்டச் செயலகத்தின் மீள்குடியமர்வு தொடர்பான புள்ளி விவரத்துக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் மீள்குடியமர்வு தொடர்பான எண்ணிக்கைக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

யாழ்.மாவட்ட அரச அதிபர் மீளக்குடியமர வேண்டியவர்களின் புள்ளி விவரங்களை குறைத்து வெளியிடுகின்றார் என்று பல தரப்பினரும் குற்றம் சாட்டி வருகின்றனர்.

> “மீள்குடியமர்த்தப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை ஒரு பிரச்சினையல்ல. மக்களின் மீள்குடியமர்வுதான் முக்கியம். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் மேற்கொண்ட பதிவுகளுக்கு அமைய 9 ஆயி ரத்து 34 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளன.

இதுகுறித்துக் கருத்துக் கேட்டபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

### இது பிரச்சினையல்ல

“மீள்குடியமர்த்தப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை ஒரு பிரச்சினையல்ல. மக்களின் மீள்குடியமர்வுதான் முக்கியம். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தெல்லிப்பழை பிரதேசசெயலகத்தில்மேற்கொண்ட பதிவுகளுக்கு அமைய 9 ஆயிரத்து 34 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளன என்று கூறப்படுகின்றது.”

### கற்பனையில்லை

“என்னால் வெளியிடப்பட்ட புள்ளி விவரத்தில் 5 ஆயிரத்து 848 குடும்பங்கள் வலி.வடக்கில் மீள்குடியமர்வதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள் வழங்கிய தகவல்களின் பிரகாரமே நான் அவற்றைத் தெரிவித்தேன். நான் புதிதாக கற்பனையில் அதனைத் தெரிவிக்கவில்லை.

நான் வ[illegible]கிய தகவல்களுடன் தற்போது பிரதேச செயலகங்களில் ஒப்பீடு செய்து பார்த்தபோது 387 குடும்பங்கள் வித்தியாசப்படுகின்றன.

வலி.வடக்கில் மீளக்குடியமர்வதற்கு யாழ்ப்பாணத்தில் 6 ஆயிரத்து 235 குடும்பங்கள் இருப்பதாகவே தெரிவிக்கின்றேன்.”

### வரையறுக்க முடியாது

“இந்த எண்ணிக்கையினர்தான் வலி.வடக்கில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியவர்கள் என்று நான் சொல்லவில்லை. வெளிமாவட்டங்களில், வெளியிடங்களில் இருப்பவர்கள் பற்றி எனக்குத் தெரியாது. யாழ்.மாவட்டத்தில் இவ்வளவு பேர்தான் வலி. வடக்கில் மீளக்குடியமர இருக்கின்றார்கள் என்பதைத்தான் என்னால் கூற முடியும். நாங்கள் வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கின்றபோது, எங்களிடம் பதிவில்லாத அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர், குடியமர வந்தாலும் நாங்கள் அனுமதிப்போம் - என்று தெரிவித்துள்ளார். (ற-5)

# வலி. கிழக்கு பிரதேச சபைக்கு புதிய தவிசாளரை நியமிக்குக

## தேர்தல்கள் ஆணையாளர் கட்சிக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 13

வலி.கிழக்கு பிரதேச சபைக்கு புதிய தவிசாளர் ஒருவரை நியமிக்குமாறு தமிழரசுக் கட்சியின் செயலாளரைக் கோரியுள்ளார் தேர்தல்கள் ஆணையாளர்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரு தடவைகள் தோற்கடிக்கப்பட்டது. அதையடுத்து சபையின் தவிசாளராகப் பதவி வகித்த அ.உதயகுமார் பதவியிழந்தார்.

உள்ளூராட்சிச் சட்டத்தின் பிரகாரம் வரவு-செலவுத் திட்டம் இருதடவைகள் தோற்கடிக்கப்பட்டதால் தவிசாளராகப் பதவி வகித்த அ.உதயகுமார் பதவி விலகியுள்ளார் என்று உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினால், யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் இந்த அறிவுறுத்தல் யாழ்.மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தால் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு, அவரது அறிவுறுத்தலின் பிரகாரமே தற்போது தமிழரசுக் கட்சியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதேவேளை, வலி.கிழக்கு பிரதே சபையின் முன்னாள் தவிசாளர் அ.உதயகுமார் தனது பதவி நீக்கத்துக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். (ற-5-11)

# பாற் பண்ணையாளர்களை சந்திக்கிறார் விவசாய அமைச்சர்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பாற் பண்ணையாளர்களுக்கும் வட மாகாண விவசாய அமைச்சருக்கும் இடையே நாளை மறுதினம் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது என்று கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பில் பாற் பண்ணையாளர்கள், பசுக்களை வளர்ப்பதில் எதிர்நோக்கும் இடர்பாடுகள் மற்றும் பாலின் தரம், பாலின் விலை நிர்ணயம், பால் விநியோகம் போன்றவற்றில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளதால் பாற் பண்ணையாளர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சருடன் கூட்டுறவு தொடர்பாக முதலமைச்சருக்கு அறிக்கையிடும் பொறுப்பிலுள்ள வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், கால்நடை அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-5)

# சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

## வெடிபொருள் வைத்திருந்தமை;

யாழ்ப்பாணம், மார்ச் 13

சி 4 மற்றும் ரிஎன்ரி வகையான சுமார் 72 கிலோகிராம் வெடி மருந்துகளை எடுத்து வந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடித்துள்ளது யாழ்.நீதிமன்றம்.

குறித்த வெடிமருந்துகள் கொழும்புத்துறையில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கடந்த மாதம் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தன. அவற்றுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 7 பேர் கைது செய்யப்பட்டதோடு 3 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. பிரதான சந்தேக நபராகக் கருதப்படும் யாழ்.குருநகரைச் சேர்ந்த ஒருவர் தலைமறைவாகியிருந்தார். பின்னர் சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் பொலிஸாரிடம் சரணடைந்தார்.

இந்தநிலையில் யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில்குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் சந்தேக நபர்கள் நால்வரையும் பிணையில் விடுவிக்குமாறு கோரினர். அவர்களில் நான்காவது சந்தேக நபர் பொலிஸ் தடுப்பில் இருந்து நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். சந்தேக நபர்களைப் பிணையில் விடுவிப்பது தொடர்பில் அடுத்த தவணை பதில் கூறுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிமன்று, சந்தேக நபர்களுக்கான விளக்க மறியலையும் நீடித்ததுள்ளது. (ற-4)


# நல்லூர் பிரதேச சபையில் தொழிலாளர் போராட்டம்

## இருவருக்கு நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி

யாழ்ப்பாணம், மார்ச் 13

இரு ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி தொழிற்சங்க ஊழியர்கள் நேற்று நடத்திய போராட்டத்தால் நல்லூர் பிரதேச சபையின் நடவடிக்கைகள் சிலமணி நேரம் ஸ்தம்பிதமடைந்தது.

நல்லூர் பிரதேச சபையில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் போது இரு பணியாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தே ஊழியர்கள் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள்.

இதுகுறித்து வடபிராந்திய ஐக்கிய தொழிற்சங்கத்தின் நல்லூர் கிளைத் தலைவர் அன்ரனிதாஸ் கருத்துத் தெரிவித்ததாவது:

“நல்லூர் பிரதேச சபையில் கடந்த 18 ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் நூலகப் பணியாளரான தயாளன் என்பவருக்கு நூலகப் பரிசோதகர் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்றும், கோகுலன் என்பவருக்கு மின்னிணைப்பாளர் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று கோரியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இந்த விடயம் தொடர்பாகப் பலருக்கு நாம் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் இதுகுறித்துக் கரிசனை எடுக்க வேண்டும். குறித்த நியமனங்கள் குறித்து 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரதேச சபைத் தவைருக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. எனினும் அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதற்கான தீர்வு பிரதேச சபையால் வழங்கப்படவில்லையானால் எமது போராட்டம் தொடரும்” - என்று தெரிவித்தார்.

அதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மேரி சாந்தசீலன் தெரிவித்ததாவது:

“தொழிற்சங்க ஊழியரான தயாளனை விடவும் 27 பேர் முன்நிலையில் உள்ளனர். அதேபோன்று கோகுலனை விடவும் 3 பேர் முன்னிலையில் உள்ளனர். மின்னிணைப்பாளர் வெற்றிடம் ஒன்றுதான் உள்ளது. மின்னிணைப்பாளருக்கான அடிப்படை தகுதி கோகுலனிடம் காணப்படவில்லை. இந்தக் காரணங்களால்தான் அவர்கள் நேர்முக பரீட்சையில் விலக்கப்பட்டார்கள். அவர்கள் பிரதேச சபையில் பணியாற்றினார்கள் என்ற அடிப்படையிலோ அல்லது மனிதாபிமான அடிப்படையிலோ நியமனங்கள் வழங்குவது அரச விதிகளின்படி சாத்தியமற்றது.

அடிப்படைத் தகைமைகளைக் கொண்டும், நேர்முகத் தேர்வின் முடிவுகளைக் கொண்டுமே குறித்த நியமனங்கள் சரியான முறையில் வழங்கப்பட்டுள்ளன. கடிதங்கள் எல்லோரிடம் இருந்தும் வரும். ஆனால் நியமனம் தகுதியானவர்களுக்கே வழங்கப்பட வேண்டும். இங்கும் அவ்வாறே வழங்கப்பட்டுள்ளது. சபையும் நேர்முகப் பரீட்சையின் முடிவுகளை ஏற்றுக் கொண்டுள்ளது”- என்று தெரிவித்துள்ளார்.

காலை 8.30 மணிக்கு பிரதேச சபைக்கு முன்னால் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தினால் பிரதேச சபைப் பணியாளர்கள் பணிகளுக்குச் செல்வதற்கு சிரமங்களை எதிர்கொண்டனர். அதன் பின்னர் அங்கு அழைக்கப்பட்ட பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதை அடுத்து சபை அலுவலர்களால் பணிகளை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. (ற-7-20-21)

# இரகசியத் தகவல்கள் ஊடகங்களில் எப்படி?

## வடமாகாண பேரவைத் தலைவர் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்தில் இரகசியம் பேணப்பட வேண்டும் என்று அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்.

வடக்கு மாகாணப் பேரவையில் இரகசியமாகப் பேணப்பட்ட தகவல்கள் ஊடகங்களில் வெளியாகியதை அடுத்தே அவர் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகள், அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற வடக்கு முதலமைச்சரின் கோரிக்கையை, அவைத் தலைவர் நிராகரித்திருந்தார். இது தொடர்பிலான தகவல்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்களில் வெளியிடப்பட்டிருந்தன. அதையடுத்தே இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் அவைத் தலைவர்.

“குறித்த தகவல்கள் தனது தனிப்பட்ட மின்னஞ்சலில் இருந்தே அனுப்பட்டது. அது எவ்வாறு ஊடகங்களுக்குக் கசிந்தது? இது பேரவைச் செயலத்தில் உள்ள ஊழியர்களைச் சந்தேகப்பட வைக்கின்றது. பேரவைச் செயலகத்தில் இரகசியம் பேணப்பட வேண்டும். சகல ஊழியர்களும் இதனைப் பின்பற்ற வேண்டும்” என்று அறிவுறுத்தியுள்ளார் அவைத் தலைவர். (ற-5)

# சட்டவிரோத பியர் விற்பனைக்காக செலுத்தினார் ரூ.50,000 தண்டம்

மதுபான விற்பனை நிலையம் பூட்டப்பட்டிருக்கும் நாள்களில் சட்டவிரோதமாகப் பியர் விற்பனை செய்த குற்றத்துக்காக அதன் நடத்துநருக்கு நீதிமன்று 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித் துள்ளது.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் குறித்த வழக்கை யாழ்.மதுவரிப் பிரிவினர் தாக்கல் செய்திருந்தனர். வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குற்றஞ்சாட்டப்பட்டவர் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அதையடுத்து அவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. போயா உள்ளிட்ட நாள்களில் மது விற்பனை நிலையங்களைப் பூட்டவேண்டும். ஆனால் அவ்வாறு பூட்டப்படும் நாள்களிலேயே குறிப்பிட்ட நபர் சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார். (ற-4)

## சாரதி அனுமதிப் பத்திரம் பெற மருத்துவ பரிசோதனை

### முல்லை மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு

முல்லைத்தீவு, மார்ச் 13

முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பான மருத்துவ பரிசோதனை நாளையும் நாளை மறுதினமும் கரை துறைப் பற்று பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெறும்.

மாவட்ட அரச அதிபரின் ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகளும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான மருத்துவ சான்றிதழ் வழங்கும் மருத்துவ நிபுணர்களும் வருகை தரவுள்ளனர்.

நாளை ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளும், நாளை மறுதினம் சனிக்கிழமை கரைதுறைப் பற்று, புதுக்குடியிருப்பு, வெலி ஓயா ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளும் இந்த மருத்துவ பரிசோதனையில் பங்கு பற்றலாம்.

> "ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய், கரை துறைப்பற்று, புதுக்குடியிருப்பு, வெலிஓயா ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளும் இந்த மருத்துவ பரிசோதனையில் பங்கு பற்றலாம்.

மருத்துவ பரிசோதனைக்கு வரும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், மருத்துவ பரிசோதனைக் கட்டணமாக ரூபா 600 என்பவற்றை கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)



ஐ.சி.சி 20/20 உலகக் கிண்ணப் போட்டி இந்த மாதம் 16 ஆம் திகதி பங்களாதேஷில் ஆரம்பமாக உள்ள நிலையில் ஐ.சி.சி 20/20 உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெறவேண்டும் என்று வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் யாழ். போதனா வைத்தியசாலையின் பின்புறத்தில் யாழ். ரசிகர்களின் கைரேகை பதிவுசெய்யும் நடவடிக்கை மொபிடெல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது. இதில் பெருமளவான ரசிகர்கள் இலங்கை அணிக்கு ஆதரவு தெரிவித்து தமது கைரேகை களைப் பதிவு செய்தனர். அவர்கள் எழுப்பிய பெரும் சத்தத்தால் வைத்தியசாலையில் இருந்த நோயாளர்களும் வைத்தியர்களும் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகினர். (வ-21)

## நிலுவையை செலுத்தாவிடில் மின் இணைப்பு துண்டிப்பு

மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தாதவர்களது மின் இணைப்பு நாளை மறுதினம் முதல் துண்டிக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

இது குறித்து மின்சாரசபை அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நிலுவையில் உள்ள மின்சாரக் கட்டணத்தை செலுத்தாமை குறித்து கடந்த மூன்றாம் திகதி முதல் மின்துண்டிப்புக்கான அறிவிப்புப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது. கட்டணத்தைச் செலுத்த தவறுபவர்களது மின் இணைப்புகள் நாளைமறுதினம் முதல் துண்டிக்கப்படவுள்ளன.

இவ்வாறு இணைப்புத் துண்டிக்கப்படும் பட்சத்தில் மீள் இணைப்புக்கு என நிலுவைக்கு மேலதிகமாக ஆயிரம் ரூபா செலுத்தப்பட வேண்டும் எனவும் யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது. (ஐ)

## எழுதுமட்டுவாழ், முகமாலை மக்களுக்கு நேற்று மின்சாரம்

தென்மராட்சி, மார்ச் 13

கடந்த 2011 ஆம் ஆண்டு மீளக் குடியமர அனுமதிக்கப் பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு, முகமாலை வடக்கு ஆகிய கிராமங்களுக்கு நேற்றுமுதல் மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மின் விநியோகத் திட்ட வேலைகள் ஆறு மாதங்களுக்கு முன்னர் முடிவடைந்த போதிலும் மின்மாற்றி பொருத்துவதில் ஏற்பட்ட தாமதத்தால் இது வரை மின்விநியோகம் வழங்கப்படவில்லை. தற்போது எழுதுமட்டுவாழ் சந்தை மற்றும் முகமாலை ஆகிய இடங்களில் மின்மாற்றிகள் பொருத்தப்பட்டு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. மின் விநியோக ஆரம்பம் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், இலங்கை மின்சார சபை உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-9)

## வடக்கு சுகாதார அமைச்சால் திடீர் பரிசோதனைக் குழு அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடமாகாண சுகாதார அமைச்சால் உயர் அதிகாரிகள் அடங்கிய திடீர் பரிசோதனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகள் உட்பட சுகாதார நிறுவனங்கள் தொடர்பாக மாகாண சுகாதார அமைச்சுக்கு பொது மக்களிடமிருந்து பலதரப்பட்ட முறைப்பாடுகள் கிடைப்பதைக் கருத்தில் கொண்டே இந்தத் திடீர் பரிசோதனைக் குழு அமைக் கப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சால் திடீர் பரிசோதனை குழு அமைக்கப்பட்டுள்ள போதி லும், அதன் செயற்பாடுகள் யாழ். மாவட்டத்துக்கு விரிவு படுத்தப்படாமையால் பொது மக்கள் தமது முறைப்பாடு களை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற இடங்களில் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மருத்துவமனைகளில் நிலவும் பின்னடைவுகள் மற்றும் முரண்பாடுகள் தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொள்ள திடீர் பரிசோதனைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## போருக்கு பின்னர் போசாக்கு, கல்வியில் வடக்கு மாகாணம் பின்னடைந்துள்ளது

### பிரான்ஸ் தூதுவருக்கு வடக்கு அமைச்சர்கள் கூட்டாக எடுத்துரைப்பு


கிளிநொச்சி, மார்ச் 13

போருக்குப்பின்னர் வடக்கில் பிள்ளைப்பருவத்தினரின் போசாக்கு மற்றும் கல்வி அறிவு வளர்ச்சியில் மந்த நிலை தோன்றியுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோர் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன்போல்மொன்சு வடக்குக்காக பயணம் மேற்கொண்டிருந்தார். இதன்போது நேற்றுமுன்தினம் அவர் கிளிநொச்சிக்கு சென்று வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போதே மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அங்கு மேலும் வலியுறுத்தப் பட்டதாவது,



பிரான்ஸ் தூதுவருடன் வடக்கு அமைச்சர்கள்

போரின் பின்னர் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார உடல் உளரீதியான பாதிப்புக்கள் மிகவும் அதிகமாக உள்ளன. இவற்றில் இருந்து மக்கள் இன்னமும் மீளவில்லை. குறிப்பாக பெண்கள் குழந்தைகள் மாணவர்கள் எதிர்கொள்ளும் போசாக்கு குறைபாட்டு நிலைமை அதிகரித்துள்ளது.

கல்வி, வைத்தியத் துறைகளில் காணப்படும் வளப்பற்றாக்குறை இந்த நிலைமைகளைச் சமாளிப்பதில் சவால்களை ஏற்படுத்தியுள்ளன.

எனவே போர் காரணமாக பெருமளவில் சிதைந்தும் அழிந்தும் போன வடமாகாண உட்கட்டுமானங்களை மீள கட்டியெழுப்புவதற்கு தேவையான ஆலோசனை நிதி என்பற்றை பிரான்ஸ் அரசு வழங்கி உதவவேண்டும் என்ற வகையில் இரு அமைச்சர்களும் பிரான்ஸ் தூதுவருக்கு எடுத்துவிளக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-18)

**மேலும் 3 குடும்பங்கள் விசா வென்றன**

* சாதனைப் பயணம் தொடர்கிறது.

ஆஸி விசா குடும்பமாக வெல்வது எளிது.
55 வயதுக்குட்பட்டவரா நீங்கள்
விரைந்து வாருங்கள்
நாங்கள் பார்த்துக் கொள்வோம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(45706)(10) www.thisaivisa.com

**மிக மலிவாக 23 இலட்சங்களுடன் கனடாவில் படிக்க, உழைக்க அரிய வாய்ப்பு**

இன்னும் சொற்ப தினங்களுக்கு. மிகச் சிலருக்கு மட்டுமே இந்த சந்தர்ப்பம்.
அரிய வாய்ப்பை கைநழுவ விடாதீர்கள்
(யாவும் நிபந்தனைகளுடன்)

7 நாள்களும் திறந்திருப்போம்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(45707)(10)

# ஆஸியில் பாதிக்கப்படும் இலங்கை அகதிகள்

***மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சட்டத்தரணிகள் தெரிவிப்பு***

ஆஸ்திரேலிய அரசு இலங்கையுடனான நல்லுறவை பேணுவதால், ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கை அகதிகள் பாதிப்படைவதாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சட்டத்தரணிகள் தெரிவித் திருக்கின்றனர்.

இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் இருந்து அகதிகள் வெளி யேறுவதை தடுப்பதற்கு ஆஸ்திரேலிய அரசு இலங்கையுடன் இணைந்து மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கும் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா நோக்கி இலங்கையில் இருந்து வருகின்ற அகதிகள் திருப்பி அனுப்பப்படும் போது அவர்கள் அச்சுறுத்தலை சந்திக்கின்றனர்.

எனினும் இந்த விடயத்தை கருத்தில் கொள்ளாத டொனி எபட் தலைமையிலான ஆஸ்திரேலிய அரசு, சர்வதேச அரசியல் சட்டத்தை மீறி செயற்படுவதாக அதில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (வ)

## இலங்கை மீனவர் சென்னையில் கைது

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறிய இலங்கை மீனவர்கள் ஐந்து பேரை இந்திய கரையோர பாதுகாப்புப் படையினர் சென்னையில் கைது செய்துள்ளனர்.

சென்னையின் வட, கிழக்கு கடற்பகுதியில் குறித்த இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக குறித்த மீனவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மீனவர்களுடன் அவர் களது படகும் கைப்பற்றப்பட் டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் சென்னை பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் . (வ)

# சாவகச்சேரி டிறிபேர்க்கில் சிறுவர் சந்தை நேற்று



*சிறுவர் சந்தையில் வியாபாரம்*

தென்மராட்சி, மார்ச் 13

செலான் வங்கியின் சாவகச்சேரி கிளையின் ஏற்பாட்டில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெற்ற தரம் 1, 2 வகுப்பு மாணவர்களின் சிறுவர் சந்தை நேற்று நடைபெற்றது. தென் மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் சிறுவர் சந்தையைத் திறந்து வைத்தார். (வ-9)

## அமெ. தீர்மானம் நிறைவேற இந்தியா நடவடிக்கை எடுக்குக

***-தா.பாண்டியன்***

ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானம் நிறைவேற இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற போரில் 1ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் இறந்திருக்கலாம் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையம் அறி வித்துள்ளது. ஐ.நா. மனித உரிமை ஆணைய கூட்டத்தில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டுவர உள்ளது.

அதில், இலங்கையில் நடைபெற்ற இன அழிப்பு குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்ற அம்சத்தை சேர்த்து இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறை வேற இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" -என்றுள்ளது. (வ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ: 12 . 05 . 1989

மனம் நெகிழ: 22 . 02 . 2013



### இராஜகுமார் ரவிராஜ்

தீச்சுடராய் மேலெழுந்தாய்
செந்நிறமாய்ப் பரவிநின்றாய்
காரிருள் அது மங்கிடவே
கதிரொளியாய் நீ நிமிர்ந்தாய்

இந்துவின் சாரணியத்தின்
இனியதோர் தலைவனாய்
முடியும் என்ற வார்த்தையிலே எம்
முகவரியாய் நீ முகிழ்ந்தாய்

காலமெல்லாம் ஒருமித்த கற்பனைகள்
கணப்பொழுதில் கரைந்திடவே
கண் கலங்கி ஏங்குகிறோம் உன்
கனவுகளுக்காய் வாழுகிறோம்.

சாரண சகோதரர்கள்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி-யாழ்ப்பாணம்.

(45712)(10)

## ஆயுள்வேத வைத்தியசாலைகள் திறப்பு

அச்சுவேலி, மார்ச் 13

தெல்லிப்பழை துர்க்காதேவி கிராமிய ஆயுள் வேத வைத்தியசாலை திறப்பு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தின ராக வடக்கு மாகாண சுகா தார சுதேச வைத்தியத் துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டு வைத்தியசாலையை திறந்து வைக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், சுதேசவைத்தியத் திணைக்களத்தின் வடக்கு மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி சி.துரைரத்தினம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் க.சித்தார்த்தன், பா.கஜ தீபன் மற்றும் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-11)

* * *

அச்சுவேலி, மார்ச் 13

கொடிகாமம் கிராமிய ஆயுள் வேத வைத்தியசாலை திறப்பு விழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வைத்தியசாலையைத் திறந்து வைக்கவுள்ளார். (வ-11-122)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**உடனடி வேலைவாய்ப்பு**

அனுபவமுள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும் ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. வேதனத்துடன் பயிற்சி பயிலுநர்களும் தேவை.

- கணக்காளர்
- பில் கிளார்க்
- கசியர் (காசாளர்)
- பேக்கரி வேலையாள்கள் கேக் தயாரிப்பாளர்
- ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்
- தூய சைவ உணவு சமையலாள் / சமையல் உதவியாளர்
- வாகனச்சாரதி
- சுவீற் தயாரிப்பாளர், பொதியிடுவோர்
- சப்பிளயர்கள் (வெயிற்றர்)
- அலுவலக உதவியாளர்
- விற்பனை முகவர்கள்

சம்பளம் அனுபவத்திற்கேற்ப பேசி தீர்மானிக்கப்படும்

16.03.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கிராம அலுவலகரின் வதிவிட சான்றிதழ், அடையாளஅட்டை நிழற்பிரதியுடன் கீழ் உள்ள முகவரியில் இரண்டாம் மாடியில் நேர்முகப்பரீட்சைக்கு சமுகம் அளிக்கவும்.

முகாமைத்துவப் பணிப்பாளர்
இல. 369 பருத்தித்துறை வீதி நல்லூர் யாழ்ப்பாணம்.
(நல்லூர் திருவிழாகால சக்தி FM பணிமனை நல்லூர் பின் வீதி)
தொடர்புகளுக்கு : 077 7350826, 077 8689678, 077 7747864

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பாக்கியநாதன்



அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி - பாக்கியநாதன் நேற்று (12.03.2014) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் பூமணியின் பாசமிகு கணவரும் பாரதி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் தெல்லிப்பழை), பகீரதி (கிராம சேவையாளர் - வீமன்காமம் வடக்கு 236), கார்த்திகா (லண்டன்) ஆகி யோரின் அன்புத்தந்தையும் நாகதீபன் (ஆசிரியர் யா/ இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்), சதீஸ்கரன் (லண்டன்) ஆகி யோரின் மாமனாரும் கவின்ஜா, தியானா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.03.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே. 021 5611070

## மரண அறிவித்தல்



### இளையதம்பி வன்னித்தம்பி

(வன்னிக்குட்டி)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், கிளானை கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வன்னித் தம்பி (12.03.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி -நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் பூரணத்தின் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மகாஜனாக்கல்லூரிக்கு அருகில் செருக்கப்புலம் தெல்லிப்பளையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் கீரிமலை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செருக்கப்புலம்,
தெல்லிப்பழை.

தகவல்
குடும்பத்தினர்.

**தேவை**

காற்று ஏற்றப்படும் பாவித்த கொம்பிரேசர் 200 Kgக்கும் 500 Kgக்கும் இடைப்பட்டது தேவை. தொடர்புக்கு :- 0774212747

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

**வேலையாள்கள் தேவை**

யாழ்-கொழும்பு ஆசன பதிவகத்துக்கு ஆசன பதிவாளர் தேவை. கொழும்பில் தங்கி நின்று வேலை செய்வதற்கும் உடன் தேவை.

குறிப்பு: ஆண்கள் மட்டும்.

தொடர்பு: 077 573 6003

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி கந்தையா



தனங்கிளப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான நாகேஸ்வரி கந்தையா (11.03.2014) செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையாவின் அன்புமனைவியும் காலஞ்சென்ற சிறீஸ்கந்தராசா மற்றும் சிறீசற்குணராசா, ஸ்ரீவிக்கினேஸ்வரராசா, வசந்தக்கா, விஜயகுமாரி, இராசகுமாரி, அமிர்தா, கலைச்செல்வி ஆகியோரின் அன்புத்தாயும் சற்குணமலர், யோகராணி, கலாமாலினி, விசயகுமார், கமலநாதன், இராசலிங்கம், இலங்கேஸ்வரன், அன்ரீசன் ஆகியோரின் அன்புமாமியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (15.03.2014) அன்று கனடாவில் உள்ள மலர்ச்சாலையில் மலர் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 16.03.2014 ஞாயிற்றுக்கிழமை தகனக்கிரியைகள் நடைபெறும். இன்றையதினம் அன்னாரின் தனங்கிளப்பு இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும் பிரார்த்தனையில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

தனங்கிளப்பு, சாவகச்சேரி
077 2095018

தகவல்: க. ஸ்ரீவிக்கினேஸ்வரராசா
(மகன் - கிராம உத்தியோகத்தர் - மட்டுவில் வடக்கு)

## ஆனைக்கோட்டை உபதபாலகம் கூழாவடிக்கு மாற்றம்

நவாலி, மார்ச் 13
ஆனைக்கோட்டையில் இயங்கி வந்த உபதபாலகம் தற்போது கூழாவடியிலுள்ள இராணுவ முகாமுக்கு முன்பாகவுள்ள கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த தபாலகத்தில் பொது மக்களால் சேமிப்பில் இடப்பட்ட நிதி மற்றும் மின் பாவனையாளர்களால் மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த நிதி என்பன மாயமாக மறைந்துள்ளன. இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட தபாலதிபர் இடைநிறுத்தப்பட்டு புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-100)

## அபராதம்

தென்மராட்சி, மார்ச் 13
மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 7 அயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதிவான் எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். (வ-9)

## பாடல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ். இந்துக் கல்லூரியின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவைப் பிரி வின் கீழ் இயங்கும் இளசுகள் குழுமத்தின் மூன்றாம் வருட பூர்த்தியை முன்னிட்டு பாடல் வெளியீடு இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற இருக்கும் நிகழ்வில் கல்லூரி அதிபர் வீ. கணேசராஜா பாடலை வெளியிட்டு வைப்பார்.

ஈழத்தின் மூத்த பொப் இசைக் கலைஞரான நித்தி கனகரத்தினம் மற்றும் இளம் இசையமைப்பாளரான மதீசன் தனபாலசிங்கம் ஆகிய இருவரும் இணைந்து 'நாடு திருந்த வென்றால்..' என்று தொடங்கும் பாடலை அமைத்துள்ளனர்.

இந்தப் பாடலை நித்தி கனகரத்தினம் எழுதி மெட்டமைத்து பாடியுள்ளதுடன் மதீசன் இசையமைத்துள்ளார். (வ-10)



உயிருடன் பிடிபட்ட முதலையைப் படங்களில் காணலாம்.

## உயிருடன் பிடிக்கப்பட்டது ஊருக்குள் வந்த முதலை

நாயன்மார்கட்டு பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சுமார் 5 அடி நீளம் கொண்ட முதலை அந்தப்பிரதேச இளைஞர்களால் பிடித்துக்கட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:- நேற்று அதிகாலை ஒரு மணியளவில் செம்மணி குளத்தில் இருந்து நாயன்மார் கட்டு பிரதேசத்திற்குள் நுழைந்த முதலையால் அந்தப்பிரதேசத்தில் ஏற்பட்ட சலசலப்புக் காரணமாக அப்பிரதேச வாசிகள் தேடுதலில் ஈடுபட்டனர். பின்னர் அவ்வித சலசலப்புக்குக் காரணமான முதலை கண்டுபிடிக்கப்பட்டது.

பிடிக்கப்பட்ட முதலை கயிற்றால் கட்டி வைக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வன விலங்கு திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-21-135-288)

# சிறுதானியச் செய்கை குடாநாட்டில் வீழ்ச்சி

### விவசாயிகள் கவலை

அச்சுவேலி, மார்ச் 13
குடா்நாட்டில் கால போக நெல் அறுவடையைத் தொடர்ந்து வயல் நிலங்களில் மேற்கொள்ளப்படும் சிறுதானியம் மற்றும் மரக்கறிப் பயிர்ச் செய்கை பாதிப்படைந்துள்ளது.

> “ காலநிலை முரண்பாடும் கடும் வறட்சி நிலைமையும் விவசாயிகளை எதிர்பாராத பாதிப்புக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகியுள்ளது

மழை பெய்யாததால் கடும் வறட்சியால் வயல்நிலங்கள் பயன்படுத்தப்படாமல் கட்டாந்தரைகளாகக் காணப்படுவதால் சிறுதானியச் செய்கை மேற் கொள்ள முடியாத நிலையில் அவை கால்நடைகளின் மேய்ச்சல் தரைகளாக ஆகியுள்ளன.

எனவே விவசாயிகள் பெருமளவு பொருளாதார நெருக்க டிக்குள்ளாகி இருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

நெல் அறுவடை முடிவடைந்ததும் வயல்நிலங்களை ஈரத்தோடு உழுது அல்லது கொத்தி சிறுபோக பயிர்ச் செய்கையாக பயறு, உழுந்து, கௌப்பி, எள்ளு, சோளம் போன்ற சிறுதானியங்களும், கத்தரி, பாவல், புடோல், பூசணி, வெள்ளரி போன்ற மரக்கறிப் பயிர் வகைகளும் செய்கை பண்ணப்படுவது வழமை.

இதன் மூலம் விவசாயிகள் கணிசமான அளவு வருமானத்தை கடந்த காலங்களில் பெற்றுக் கொள்வது உண்டு.

கடந்த கால போகத்தில் நிலவிய கடும் வறட்சி காரணமாக நெல் விளைச்சலும் பாதிக்கப்பட்டதுடன் நெல் வயல்கள் நில ஈரம் இன்றி வறண்ட நிலையில் காணப்படுவதால் அவற்றை சிறுபோக பயிர்ச் செய்கைக்கும் விவசாயிகளால் தயார்ப்படுத்த முடியவில்லை.

வயல் நிலங்களில் நீர்ப்பாசனத்துக்கு வசதியான நிலையில் கிணறுகள் உள்ள இடங்களில் மட்டும் வயல் நிலத்தை நனைத்து சிறுபோக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், கடும் வறட்சியான காலநிலையும் வெப்ப நிலை வீச்சும் நாளாந்தம் அதிகரித்துக் காணப்படுவதால் சிறுபோக பயிர்களின் வளர்ச்சியோ, விளைச்சலோ குறிப்பிடத்தக்களவு சாதகமாக இல்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காலநிலை முரண்பாடும், கடும் வறட்சி நிலைமையும் விவசாயிகளை எதிர்பாராத பாதிப்புக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கும் உள்ளாகி இருப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (வ-11)

## சிப்பாயின் காதருகே பட்டாசு வெடித்ததில் காதிலிருந்து இரத்தக் கசிவு

தென்மராட்சி, மார்ச் 13
கொளுத்திய நிலையில் பற்றைக்குள் வீசப்பட்ட பட்டாசு, அங்கு மறைந்திருந்த இராணுவச் சிப்பாயின் காதருகே வெடித்ததில் சிப்பாயின் காதிலிருந்து இரத்தம் கசிந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்றது.

காதிலிருந்து இரத்தம் கசிந்த நிலையில் குறிப்பிட்ட சிப்பாய் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனும திக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (வ-9)

## சாவகச்சேரியில் நேற்று சுகாதார வார விழிப்புணர்வு

தென்மராட்சி, மார்ச் 13
சுகாதார அமைச்சின் தேசிய சுகாதார வாரத்தையொட்டி நேற்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள அனைத்துப் பொது சுகாதார பரிசோதகர் பிரிவிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

அந்தந்தப் பகுதிகளில் பொது அமைப்புகளின் கட்டடங்களில் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களால் மக்களுக்கான தொற்றும் நோய்கள் தொற்றா நோய்கள். குறித்த கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. (வ-9)

## எழுதுமட்டுவாழில் மர்மப் பொருள் வெடிப்பு

தென்மராட்சி, மார்ச் 13
எழுதுமட்டுவாழ் பகுதியில் மர்மப் பொருளொன்று வெடித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் ரயில் பாதைக்கு அருகில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தும் பணிக்காக இயந்திரத்தால் குழி தோண்டியபோது மர்மப் பொருள் வெடித்ததாகவும் இத னால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சைக்கிளைத் திருடி தாயாருக்கு அன்பளிப்பாக வழங்கிய மகன்

*சாவகச்சேரி பொதுச் சந்தையில்தான் திருடிச் சென்ற பெண்களுக் கான லுமாலா சைக் கிளைத் தனது தாயாருக்கு அன்பளிப்பாக வழங்கினார் செல்வப் புத்திரன்.*

*நேற்று முன்தினம் ஞாயிறன்று இடம்பெற்ற சைக் கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சைக்கிளைப் பறிகொடுத்தவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் மட்டுவில் பகுதி வீடொன்றில் வைத்துக் குறிப்பிட்ட சைக்கிளை மீட்டதுடன் சந்தேகத்தின் பேரில் இளைஞரையும் பொலிஸார் கைது செய்தனர்.*

*குறித்த இளைஞரை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)*

## தனியார் வைத்திய நிறுவனங்களின் பரப்புரையால் பாடநேரம் பாதிப்பு

### பாடசாலைகள் தோறும் நடைபெறுவதாக பெற்றோர் குற்றச்சாட்டு

தனியார் மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் குறைந்த கட்டணத்தில் சிகிச்சை பெறுவதற்கு வைத்திய நிறுவனம் ஒன்றால் குழுக்களை (பக்கேஜ்) உருவாக்கும் திட்டத்துக்காக வைத்திய நிறுவனத்தின் பிரதிநிதிகள் பாடசாலைகளுக்குச் சென்று ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தலா ஐந்து பேர் கொண்ட குழுக்களை உருவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கை பாதிப்படைவதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

குழுவில் இணைந்து கொள்வோர் 5 பரிசோதனை களை மேற்கொள்ள ஆயி ரத்து 300 ரூபா பெறுமதியான அட்டைகளை வழங்குகின்றனர்.

3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான மருத்துவச் செலவுக்கு ஆசிரியர்களுக்கு சலுகை அடிப்படையில் ஆயிரத்து 300 ரூபாவுக்கு அட்டைகளை வழங்குகின்றனர்.

நோய்கள் இல்லாத ஆசிரியர்களும் பரப்புரையில் மயங்கி ஆயிரத்து 300 ரூபாவை செலுத்துகின்றனர். இந்த விடயம் பெற்றோர் மத்தியில் மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலைக்கு வரும் மருத்துவ நிறுவனப் பிரதிநிதிகள், குறைந்தது 45 நிமிடங்கள் ஒரு ஆசிரியருடன் கலந்துரையாடுகின்றனர். இதனால் ஒரு ஆசிரியரின் ஒரு பாடம் வீணடிக்கப்படுகிறது.

விளையாட்டுப் போட்டிகளால் இரு மாதங்கள் மாணவர்களுக்கு பாடத்திட்டங்கள் முன்னெடுக்கப்படாத நிலையில் ஆசிரியர்களை பாடசாலை நேரத்தில் பாடங்களை நடத்த விடாமல் இவ்விதம் தடுப்பது குறித்துப் பெற்றோர் கவலை தெரிவித்தனர். (வ-9)

## மானிப்பாய் மருத்துவமனையில் அதிகரிக்கும் சைக்கிள் திருட்டு

நவாலி, மார்ச் 13
மானிப்பாய் பிரதேச அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெறச் சென்ற பெண்ணொருவரின் சைக்கிள் மாயமாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை நவாலியைச் சேர்ந்த குறித்த பெண் சிகிச்சைக்காக தனது சைக்கிளில் வந்து குறித்த மருத்துவமனையில் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே சென்றுள்ளார்.

சிகிச்சை பெற்றுக்கொண்டு வீடு செல்வதற்காகத் தனது சைக்கிளை எடுக்கச் சென்றபோது அங்கு தனது சைக்கிள் இல்லாததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

குறித்த மருத்துவமனையில் முன்னர் இரு தடவைகள் இது போன்று நிறுத்தி வைக்கப்பட்ட சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளன. இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் குறித்து எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததாலேயே இத்தகைய திருட்டுக்கள் மேலும் தொடர்கின்றன.

இதேவேளை மருத்துவமனை நலன்புரி சங்கத்தினர் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்றை அமைத்து நோயாளிடம் குறைந்த பணம் அறவிட்டால் இத்தகைய திருட்டுக்களைத் தவிர்க்க முடியும் என்று பொது மக்கள் கருதுகின்றனர். (வ-100)

## பனிச்சரிவில் சிக்கி 11 பேர் சாவு

ஸ்ரீநகர், மார்ச் 13
ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி இரு இராணுவத்தினர் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கடும் பனிப்பொழிவு நிலவுகிறது. இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. கடும் பனிப்பொழிவு காரணமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் பனிப்பாறைச் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர். அதையடுத்துப் பனிச்சரிவு அபாயமுள்ள இடங்களில் இருந்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். (ற)



*இந்தியாவில் அரசியல் கட்சிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு அவற்றுக்கு வாக்குப் போடக் கூடாது என்று வலியுறுத்தி பொது மக்களின் கால்களில் விழுந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றனர் சத்யாகிரகா என்ற இயக்கத்தினர். இதுகுறித்து அந்த இயக்கம் குறிப்பிடுகையில், "கடந்த 10 ஆண்டுகளாக வன்முறை, லஞ்சம் போன்றவற்றை ஒழிப்பதற்காக மக்கள் காலில் விழுந்து வணங்கி மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறோம். தேர்தல் நேரத்தில் மக்கள் பணம் வாங்காமல் வாக்குப் போட வேண்டும். 100 சதவீதம் வாக்குப்பதிவு செய்ய வேண்டும். அதற்காகவே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம்" என்று தெரிவித்துள்ளனர். (ற)*

## ஆந்திராவில் திடீர் மழை; 12 பேர் உயிரிழப்பு

ஹைதராபாத், மார்ச் 13
ஆந்திராவில் நேற்றுமுன்தினம் திடீரென பெய்த கன மழை காரணமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர்.
வாரங்கல் மாவட்டத்தில் 7 பேரும், நிசாமாபாத் மாவட்டத்தில் 3 பேரும், ஆனந்தப்பூர் மாவட்டத்தில் 2 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று ஆந்திரா மாநில அரசு அறிவித்துள்ளது.
பலத்த மழையின் காரணமாக 14 மாவட்டங்களில் விவசாயப் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன என்றும், 1,200க்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் ஆந்திரா அரசுவெளியிட்டுள்ளசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் ஆந்திரா அரசு அறிவித்துள்ளது. (ற)

## பா.ம.கவினர் மீது பொய் வழக்குகள்

*ஜி.கே.மணி குற்றச்சாட்டு*

சென்னை, மார்ச் 13
பா.ம.கவினர் மீது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொய் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அது பற்றி சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழு விசாரிக்க உத்தரவிடவேண்டும் என்று நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார் பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி.
அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,
"தமிழகத்தில் திராவிடக் கட்சிகளுக்கு எதிராக பா.ம.க. செயற்பட்டு வருகிறது. அதனால் அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான ஜெயலலிதா பொலிஸ் துறையைப் பயன்படுத்தி பா.ம.கவை ஒடுக்கி வருகிறார். பா.ம.கவினர் மீது இதுவரை 1037 வழக்குகள் போடப்பட்டுள்ளன. இந்த வழக்குகளைச் சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்து சி.பி.ஐ. விசாரிக்க உத்தரவிட வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ள நீதிமன்றம் இதுகுறித்து தமிழக அரசு விளக்கமளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. (ற)

# வீரப்பன் கூட்டாளிகளுக்கு எதிரான மனு தள்ளுபடி

*மத்திய அரசின் கோரிக்கையை நிராகரித்தது உயர்நீதிமன்று*

**மத்திய அரசு தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவை உயர் நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.**

புதுடில்லி, மார்ச் 13
வீரப்பன் கூட்டாளிகள் உள்பட 15 பேரின் தூக்குத் தண்டனை ரத்துக்கு எதிரான மத்திய அரசின் மறு ஆய்வு மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
கடந்த ஜனவரி 21ஆம் திகதி, வீரப்பன் கூட்டாளிகள் பிலவேந்திரன், சைமன், ஞானபிரகாசம், மாதையா உள்பட 15 பேரின்தூக்குத்தண்டனையை ரத்து செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
இந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு கடந்த மாதம் மறு ஆய்வு மனு தாக்கல் செய்தது.
கருணை மனுக்கள்தொடர்பான குடியரசுத் தலைவரின் முடிவு நீதிமன்ற ஆய்வுக்கு அப்பாற்பட்டது என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.
மேலும், கருணை மனு மீது காலம் தாழ்த்தி முடிவு எடுக்கப் பட்டதைக் காரணம் காட்டி 15 பேரின் மரண தண்டனை ரத்து செய்யப்பட்டிருப்பது ஏற்புடையது அல்ல, அது சட்ட விரோதமானது எனவும் மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்நிலையில், மத்திய அரசு தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவை உயர்நீதிமன்றம்நேற்றுத் தள்ளுபடி செய்தது.
மறு ஆய்வு மனுவை விசாரித்த அமர்வு, மத்திய அரசின் வாதம் ஏற்புடையதல்ல என்பதால் மனுவைத் தள்ளுபடி செய்வதாகத் தெரிவித்தது.

**வழக்கின் பின்னணி:**
வீரப்பன் கூட்டாளிகள் பிலவேந்திரன், சைமன், ஞானபிரகாசம், மாதையா உள்ளிட்ட 15 பேர் தங்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையைக் குறைக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.
இந்த மனுக்களை கடந்த ஜனவரி 21 ஆம் திகதி விசாரித்த தலைமை நீதிபதி சதாசிவம் தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு, அவர்களின் கருணை மனுக்கள் மீது முடிவெடுக்கக் காலதாமதமானதைச் சுட்டிக் காட்டி 15 பேரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது.
இதே காரணத்தின் அடிப்படையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கு குற்றவாளிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனையையும் ஆயுள் தண்டனையாகக் குறைத்துக் கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.
இந்தத் தீர்ப்பை எதிர்த்து மத்திய அரசு சார்பில் ஏற்கனவே மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (கு)

# தரக்குறைவாகப் பேசும் கட்சிகள் இடைநிறுத்தம்

*உயர்நீதிமன்றம் உத்தரவு*

வெறுப்பு, வன்முறையைத் தூண்டும் வகையில் அரசியல்வாதிகள் பொதுக்கூட்டங்களில் பேசுவதைத் தடுக்க நெறிமுறைகளை உருவாக்குவது குறித்துப் பரிசீலிக்குமாறு சட்ட ஆணையத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
ஜனநாயக நெறிமுறைகளை மீறும் வகையில் அரசியல்வாதிகள் பிரசாரங்களில் பேசுவதாகவும்இதனைத் தடுக்கஉயர் நீதிமன்றம் நெறிமுறைகளை வகுக்க வேண்டும் எனவும் உயர் நீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல்செய்யப்பட்டிருந்தது.
தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று தாக்கல் செய்த இந்த பொதுநல மனுவை விசாரித்த நீதிபதி பி.எஸ்.சவுகான் தலைமையிலான அமர்வு, 'வெறுப்பு' பேச்சுக்களைக் கட்டுப்படுத்தும் வழிகாட்டுதலை உயர் நீதிமன்றம் உருவாக்குவதைவிடச் சட்ட ஆணையம் உருவாக்குவதே சரியாக இருக்கும் எனக் குறிப்பிட்டது.
எனவே சட்ட ஆணையம் அத்தகைய நெறிமுறைகளை உருவாக்கி அதனை மத்திய அரசுக்குப் பரிந்துரைக்குமாறு உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது.
மனுவில் மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேச மாநிலங்களில் அரசியல் பிரசாரங்களில் வெறுப்பைத் தூண்டும் வகையில் அரசியல் பிரமுகர்கள் பேசியவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக அக்பருதீன் ஒவாய்ஷி, ராஜ் தாக்கரே ஆகியோரின் பெயர்கள் மனுவில் இடம்பெற்றுள்ளன. (கு)

# ஹிட்லர் - மோடி ஒப்பீடு முட்டாள்தனமானது

*ராகுலைச் சாடுகிறார் வெங்கையா நாயுடு*

பெங்களூர், மார்ச் 13
ஹிட்லருடன் மோடியை ஒப்பிட்டு ராகுல் காந்தி தெரிவித்துள்ள கருத்து முட்டாள்தனமானது என்று கண்டனம் தெரிவித்துள்ளார் பா.ஜ.க. மூத்த தலைவர் வெங்கையா நாயுடு.
காங்கிரஸ் கட்சியின் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியை, முன்னாள் சோவியத் யூனியன் தலைவரான ஹிட்லருடன் ஒப்பிட்டுக் கடுமையாக விமர்சித்திருந்தார் ராகுல் காந்தி.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே வெங்கையா நாயுடு இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"ஹிட்லருடன்நரேந்திரமோடியை ஒப்பிட்டு ராகுல் காந்தி பேசியிருப்பது முட்டாள்தன[illegible]னது. காங்கிரஸ் ஆட்சிக் [illegible] நெருக்கடி நிலையை நடைமுறைப்படுத்தி இலட்சக்கணக்கான அரசியல் கட்சி நிர்வாகிகளையும், தலைவர்களையும் சிறையில் அடைத்தனர். மகாத்மா காந்தி கொலையை ஆர்.எஸ்.எஸ். அமைப்புடன் தொடர்புபடுத்தி ராகுல் காந்தி கருத்துத் தெரிவித்துள்ளார்.
நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த பிறகு மகாத்மா காந்தி வெளிப்படுத்திய முதல் கருத்து, காங்கிரஸை கலைக்கவேண்டும் என்பதுதான்.
காந்தி கூறிய எதையும் அவர்கள் செயற்படுத்தவில்லை. அதைப்பற்றி கவலைப்படுவதும் இல்லை. நரேந்திர மோடி தடுக்க முடியாத தலைவராக உள்ளார். தொட முடியாத கட்சியாகக் காங்கிரஸ் மாறி வருகிறது. காங்கிரசுடன் இருக்க யாரும் விரும்பவில்லை. காங்கிரஸ் கீழ்தரமான, மலிவான அரசியல் செய்கிறது" - என்று தெரிவித்துள்ளார். (ற)

# சத்தீஸ்கர் தாக்குதல் குறித்து முற்கூட்டியே எச்சரிக்கப்பட்டது

*உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே தெரிவிப்பு*



*சுஷில்குமார் ஷிண்டே*

புதுடில்லி, மார்ச் 13
மாவோயிஸ்ட்தாக்குதல் குறித்து சத்தீஸ்கர் அரசுக்கு முன்கூட்டியே உளவுத்துறை எச்சரிக்கை வழங்கியிருந்தது என்று தெரிவித்துள்ளார் மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே.
நேற்றுக் காலை சத்தீஸ்கர் தலைநகர் ராய்ப்பூர் சென்ற உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட மாவோயிஸ்ட் தாக்குதலில் உயிரிழந்த மத்திய பாதுகாப்புப் படையினருக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி னார்.
அதன்பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,
"மாவோயிஸ்ட்கள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று புலனாய்வுத்துறை 3 தடவை எச்சரிக்கை விடுத்திருந்தது. ஆனால் தாக்குதல் நடைபெற வாய்ப்புள்ள இடம் குறித்துக் குறிப்பிடவில்லை. எனினும் புலனாய்வுத் தகவல்களை சத் தீஸ்கர் அரசு அலட்சியப்படுத்தியதாலேயே மாவோயிஸ்ட்டுகளின் தாக்குதலை தடுத்து நிறுத்த முடியவில்லை. பொலிஸார் 16 பேர் உயிரிழக்கக் காரணமான இந்தத் தாக்குதல் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்தும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## பா.ஜ.கவில் ராம்கிருபால்

புதுடில்லி, மார்ச் 13
ராஷ்டீரிய ஜனதா தளக் கட்சியின் மூத்த தலைவர் ராம்கிருபால் யாதவ் புதுடில்லியில் ராஜ்நாத் சிங் முன்னிலையில் பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தார்.
லாலு பிரசாத் யாதவின் மகள் பிஹாரின் பாடலிபுத்ரா தொகுதியில் போட்டியிட எதிர்ப்பு தெரிவித்து ராஷ்டிரிய ஜனதா தளக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுச் செயலாளருமான ராம்கிருபால் யாதவ் கட்சியிலிருந்து விலகினார்.
ராம்கிருபாலைச் சமாதானப் படுத்தும் முயற்சி தோல்வியடைந்துவிட்டது. இந்நிலையில் அவர் பா.ஜ.கவில் இணைவார் எனக் கூறப்பட்டது. (கு)

## சீனாவிலிருந்து பிரிட்டனுக்கு கணித ஆசிரியர்கள்

லண்டன், மார்ச் 13

பிரிட்டிஷ் பாடசாலைகளில் கணிதத் தரத்தை வளர்ப்பதற்கான சிறப்புக் கல்வியை வழங்குவதற்காகச் சீனாவில் இருந்து ஆசிரியர்கள் கொண்டு செல்லப்படுகிறார்கள்.

பிரிட்டனின் கல்வி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படும் ஒரு பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஆங்கிலம் பேசக்கூடிய 60 ஆசிரியர்கள் வரை ஷங்காயில் இருந்து கொண்டு செல்லப்படுகிறார்கள்.

இந்தத் திட்டத்தின் கீழ் சீனாவில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆங்கில ஆசிரியர்கள், கணிதம் கற்றுக் கொடுக்கும் நுணுக்கங்களை மேலும் அறிந்துகொள்வதற்கும் வழி செய்யப்படும்.

சர்வதேச மட்டத்திலான கணிதப் பரீட்சைகளில் ஷாங்காய் மாணவர்கள் மிகவும் அதிகமான பேறுகளைப் பெற்றுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (த)



அமெரிக்காவின் மன் ஹற்றன் நகரில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் உள்ளூர் நேரப்படி நேற்று நண்பகல் பெரும் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் அந்தக் குடியிருப்பு மோசமாக சேதமடைந்துள்ளது. இதன்போது படுகாயமடைந்த நால்வர் மன் ஹற்றன் நகர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த வெடிப்புச் சம்பவம் எதனால் ஏற்பட்டது என்பது குறித்து உடனடியாக தகவல் எதுவும் வெளியாகவில்லை. அமெரிக்க இராணுவத்தின் மீட்புப் படையினர் உடனடியாக அங்கு விரைந்தனர். (த)



இமயமலைத் தொடர்

## இமய மலைத் தொடர் குத்தகைக்கு விடப்படும்

### நேபாள அரசு திட்டம்

காத்மண்டு, மார்ச் 13

இமய மலைத் தொடரில், நேபாளத்திலுள்ள சில ஏறப்படாத மற்றும் தொலைதூரமான மலைச் சிகரங்களைக் கட்டணம் வாங்கிக்கொண்டு தனியார் நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விடுவது என்ற புதுமையான திட்டம் பற்றிப் பரிசீலித்துவருவதாக நேபாள அரசு கூறுகிறது.

அறியப்படாத சில மலைச் சிகரங்கள் மீது மலையேறுவோருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வேளையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் ஈடுபடுவதற்கு வழிவகுக்கக் கூடிய இந்தத் திட்டம் தற்போது விவாதிக்கப்பட்டு வருவதாக நேபாளச் சுற்றுலாத்துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

உலகெங்கும் இருந்தும் ஆயிரக்கணக்கான மலையேற்ற ஆர்வலர்கள் ஒவ்வொரு ஆண்டும் நேபாளம் வருகிறார்கள்.

அவர்களில் பெரும்பான்மையானோர், அதிகம் அறியப்பட்ட எவரெஸ்ட் போன்ற சிகரங்களிலேயே ஏறுவதால், குறிப்பிட்ட சில மலைகளில் கூட்டமும், குப்பைகளும், வாக்குவாதங்களும் சமாளிக்க முடியாத அளவுக்கு அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## விமானத்துடன் மாயமானோரின் உறவினர்கள் கடும் கோபத்தில்

### மலேசிய அதிகாரிகள் மீது தண்ணீர்ப் போத்தல் வீச்சு

கோலாலம்பூர், மார்ச் 13

காணாமற்போயுள்ள மலேசிய விமானத்தில் பயணித்தவர்களின் உறவினர்கள் சிலர் மலேசிய அதிகாரிகள் மீது தண்ணீர்ப் போத்தல்களை எறிந்துள்ளனர். தமக்கு உண்மையைத் தெரிவிக்குமாறு கூறி அவர்கள் போத்தல்களை வீசியுள்ளனர்.

அதிகாரிகளுக்கும் பயணிகளின் உறவினர்களுக்கும் இடையில் பீஜிங்கில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, காணாமற்போன மலேசிய விமானத்தின் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கடைசியாகக் கிடைக்கப்பெற்ற தகவல், 'எல்லாம் சரி, இனிய இரவு' என்பது தான் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவிலிருந்து வியட்நாமின் எல்லைப் பரப்பை அண்மித்தபோது விமானிகளில் ஒருவர் இந்தத் தகவல் பரிமாற்றத்தை மேற்கொண்டுள்ளார்.

இதன் பின்னரே குறித்த விமானம் ராடர் திரையிலிருந்து திடீரெனக் காணாமற்போயுள்ளது.

இதைத் தொடர்ந்து, விமானம் குறித்து பல்வேறு தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இந்த விமானம் விபத்தில் சிக்கியதா அல்லது தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதா எனத் தொடர்ந்தும் குழப்பம் நீடிக்கிறது. (த)



போத்தல் வீசப்பட்ட வேளை...

### விமானத்தை தேடும் பணியில் இந்தியாவும்

புதுடில்லி, மார்ச் 13

காணாமற்போயுள்ள மலேசிய விமானத்தை தேடும் பணியில் இந்திய விமானப் படை இணைந்து கொள்ளவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. (த)

## உக்ரைனில் புதிய படை

கிவி, மார்ச் 13

உக்ரைனின் இடைக்காலத் தலைவர்கள் புதிய தேசியப் பாதுகாப்புப் படையை உருவாக்கியுள்ளனர்.

கிரைமியா பிராந்தியத்தில் ரஷ்யா முன்னெடுத்துள்ள ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கு எதிராக உதவியை வழங்குமாறும் அமெரிக்கா மற்றும் பிரிட்டனை அவர்கள் கோரியுள்ளனர்.

எனினும் கிரைமியா பிராந்தியத்தில் நிலைகொண்டுள்ள ரஷ்ய ஆதரவுப் படையினருடன் போர் செய்வது தொடர்பான அறிவிப்புக்கள் எதனையும் அவர்கள் வெளியிடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரைமியா பிராந்தியம், ரஷ்யாவுடன் இணைவது குறித்த வாக்கெடுப்பு எதிர்வரும் 16ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

ரஷ்யாவுடன் இணைவது குறித்த வாக்கெடுப்புக்குக் கிரைமியா பிராந்தியச் சட்டமன்றம் அனுமதி அளித்திருந்தது.

எனினும் இந்த வாக்கெடுப்பு இரத்துச் செய்யப்படாவிடின் கிரைமியா பிராந்தியச் சட்ட மன்றம் கலைக்கப்படும் என உக்ரைனின் நாடாளுமன்றம் கூறியுள்ளது.

மக்கள் ஆர்ப்பாட்டங்களை அடுத்துப் பதவி கவிழ்க்கப்பட்ட விக்டர் யனுகோவிச், தற்போதும் தாமே உக்ரைனின் சட்டரீதியான ஜனாதிபதி எனவும் ஆயுதப் படைகளின் கட்டளைத் தளபதி எனவும் கூறியுள்ளார். (த)

## மலேசிய விமானத்தின் மர்மம் தொடர்கின்றது

### தேடும் பணிகள் தீவிரம்

மலேசியன் எயார் லைன்ஸ் விமானம் காணாமல் போய் 6 நாள்கள் ஆகிய பின்னரும்கூட அதனைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில், தேடுதல் குழுக்கள் மலாக்கா வளைகுடாவின் இரு பக்கத்திலும், அவற்றின் தேடுதல் பரப்பை அதிகரித்துள்ளன.

வியட்நாமுக்குத் தென்கிழக்கே 300 கிலோமீற்றர்கள் தொலைவில் வானில் ஒரு எரியும் பொருளைத் தான் பார்த்ததாக பெற்றோல் அகழ்வுப் பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்ட வியட்நாமிய விமானங்களால் எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

கோலாலம்பூரில் இருந்து பீஜிங்குக்குச் சென்று கொண்டிருந்த தனது பாதையில் இருந்து அந்த விமானம் திரும்பி வர முயற்சித்ததா என்பதை உறுதி செய்ய முடியாது இருக்கும் நிலையில், மலாக்கா வளை குடாவின் மேற்குப் பகுதிக்கு தமது தேடுதல் முயற்சிகளை மாற்றி உள்ளதாக மலேசிய அதிகாரிகள் கூறியுள்ளனர். (த)



தேடுதல் அணியில் விமானி ஒருவர்.

## கணவரை எரித்துக் கொலை செய்த மனைவிக்கு 20 ஆண்டுகள் சிறை

நியூயோர்க், மார்ச் 13

அமெரிக்காவில் கணவரை எரித்துக் கொன்றதாகக் கூறப்படும் இந்தியப் பெண்ணுக்கு 20 ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவின் தென் மத்திய டெக்சாஸ் பகுதியின் டிராவிஸ் நகரில் வசித்து வந்த பிமல் பட்டேல் (வயது-29) என்பவர் கடந்த 2012 ஆம் ஆண்டு பலத்த தீக் காயங்களுடன் சென் அன்ரனியோ இராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.



சுமார் 6 மாத காலமாக உயிருக்குப் போராடிய அவர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவரது மனைவி ஷ்ரியா பட்டேல் (வயது-27) கைது செய்யப்பட்டார். பெற்றோலை ஊற்றிக் கணவனை எரித்துக் கொன்றதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இது போதுமான சாட்சியங்களின் மூலம் அமெரிக்காவின் டிராவிஸ் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் தனது முழுத் தண்டனைக் காலத்தையும் நிறைவு செய்த பின்னர் அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்படுவார் எனக் கூறப்பட்டுள்ளது. (த)

**மணமகள்தேவை**

✱ 79 இல் பிறந்த 8இல் செவ்வாய் 63 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

✱ 73 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 22½ பாவமுடைய விவாகரத்துப்பெற்ற லண்டன் பிராஜாஉரிமை பெற்றுவந்துள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு: காலக்கண்ணன் திருமணசேவை
இல.435/3, கோயில்வீதி, நல்லூர்.
தொ.பே. 077 607 0862

(45681)(45.3.6)

# தற்கொலை செய்வதில் ஆண்களே முன்னணி

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

இலங்கையில் தற்கொலை செய்துகொள்பவர்களில் 80 வீதமானவர்கள் ஆண்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடத்தில் மாத்திரம் இலங்கையில் 3,461 தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார். அவர்களில் 461 பெண்களும், 3,000 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அவர் கூறினார்.

இதேவேளை, 15 தொடக்கம் 25 வயதுக்குட்பட்டவர்கள் தற்கொலை செய்துகொள்வது அதிகரித்துள்ளது என்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் குணதாஸ பெரேரா தெரிவித்தார்.

ஏற்றுக்கொள்ளும் இயல்பின்மையே தற்கொலைக்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

மன அழுத்தம், பெற்றோரின் கவனவீனம், ஆசிரியர்களின் செயற்பாடுகள் காரணமாகவும் தற்கொலைகள் இடம் பெறுகின்றன என்று அவர் தெரிவித்தார். (ச)

**தேவை**

கல்வியங்காட்டுப் பகுதியில் இயங்கும் சிறுகைத் தொழில் நிறுவனத்துக்கு ஆண், பெண் வேலை ஆள்கள் தேவை. 7km சுற்றாடலில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 418 0185

(45682) (7.6.3)

TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

# அதியுயர் ஊடக விருதுகள் 2013

**சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் 15 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி**

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களைக் அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது. (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.



இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96, கிருல வீதி கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி 10 ஏப்ரல் 2014 ஆகும்.**

(ஆ)

(C/12373)

# காணி தொடர்பான வழக்குகளே நீதிமன்றங்களில் குவிகின்றன

## *காணி உரிமைகளுக்கான உதவி அதிகாரி தெரிவிப்பு*

கொழும்பு,மார்ச்13

இலங்கை நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்குகளில் 65 வீதமானவை காணிகள் சம்பந்தப்பட்டனவாக உள்ளன.

அவற்றில் 50 வீத வழக்கு விசாரணைகள் முப்பது நாற்பது ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இன்னமும் தீர்க்கப்படாதுள்ளன.

இந்தத் தகவலை காணி திணைக்களத்தின் காணி உரிமைகளுக்கான உதவி அதிகாரி கே.எல்.கே.ஜயம்பதி தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணிகள் சம்பந்தமாகப் பல்வேறு சிக்கல்கள்காணப்படுகின்றன. காணிகளை முன்னிலைப்படுத்தி கொலைகள் கூட நடக்கின்றன. மக்களிடையே பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவற்றுக்குத் தீர்வாக அரசு புதிய நடைமுறையொன்றை அறிமுகப் படுத்தி வருகிறது.


காணி உறுதிகளுக்குப் பதிலாக காணிகள் தொடர்பாக உரிமைச் சான்றிதழ் ஒன்றை வழங்கும் நடைமுறையை அரசு ஆரம்பித்துள்ளது. தற்போது இந்த முறைமையானது 75 பிரதேச செயலகங்கள் மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த முறைமையின் கீழ் காணி உரிமையாளருக்கு நிலப் பிரமாணம், நில அளவையாளரொருவரால் அளவீடு செய்யப்பட்டு உரிமைச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படுகிறது.

அவ்வாறு வழங்கப்படும் உரிமைச் சான்றிதழ் இலங்கையின் எந்தவொரு நிதி நிறுவனத்திடமிருந்தும் கடன் பெறுவதற்கு செல்லுபடியாகும் -என்றார். (ச-22)

**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
The Jaffna Education Centre
(செல்லா தியேட்டருக்கு முன்பாக மேல் மாடியில்)
Spoken English With Grammar
Short hand Typing, சிங்களம், ESOL, IELTS
ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 14.03.2014 ஆசிரியை: இ.லோகநாயகி
பாட முடிவில் "சான்றிதழ்" வழங்கப்படும். T.P: 077 6779 340
(45628)(6.3.4)





**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
செல்வன் தயாபரன் தனீஸ்
நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.த.க வித்தியாலய மாணவனும்
Rev.SR I A MARY JEROME A.C.
அவர்களின் மாணவனுமாகிய
செல்வன் தயாபரன் தனீஸ்
Institute of western Music & Speech
என்னும் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் 100 புள்ளிகளைப் பெற்று கடந்த 09.03.2014 கொழும்பு St.Joseph's College இல் கப் பெற்றுள்ளமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பரிசில்கள் பெற வாழ்த்துகின்றோம்.
Congratulations
Best Wishes!
அனோஜன் வார்ப்புத் தொழிலகம்
79, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.
021222 4926
வாழ்த்துவோர்: மாமா குடும்பத்தினர்
(45676)(7.6.3)

# மன்னார் நகரசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2014

மேற்படி விடயம் தொடர்பாக, எம்மால் 08.02.2014ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கு மேலதிகமாக அவ்விளம்பரத்தில் அறிவுறுத்தப்பட்ட அதே சேவை நிபந்தனைகள், அடிப்படைத் தகைமைகள், தெரிவு செய்யப்படும் முறை, விண்ணப்பிக்கும் முறை என்பவற்றின் அடிப்படையில் மேலதிகமாக பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல. | பதவி | சம்பளஅளவு |
|---|---|---|
| 10 | காவலாளி (Watcher) | 11,730-10x120-10x130- 10x145- 12x160- 17,600 |
| 11 | கனரகஇயந்திர இயக்குனர் (Heavy Equipment Operator) | 12470-10x130-10x145-10x160-12x170-18860 |
| 12 | மின்னிணைப்பாளர் (Electrician) | 12210-10x130-10x145-10x160-12x170 - 18600 |

**மேற் குறித்த பதவிகளுக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக, ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் உரிய தகைமையாகக் கருதப்படும். ஒரே தடவையில் 05 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை மன்னார் நகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். தமதுசொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து, செயலாளர், நகரசபை, மன்னார் என்றமுகவரிக்கு பதிவுத் தபாலில் 26.03.2014 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**சேவியர் லெம்பட் றெனால்ட்,**
**செயலாளர்,**
**நகரசபை, மன்னார்.**

(C/12672)(7.6.3)

# ஆழ்கடல் மீன்பிடிக்கான படகு மற்றும் இயந்திர உபகரணங்களை வாடகை ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்தலுக்கான கேள்வி கோரப்படுகின்றது

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத்திற்குச் சொந்தமான பலநாட் படகு மற்றும் இயந்திரம், குளிரூட்டி அறை, தொலைத்தொடர்பு கருவிகள் மற்றும் நவீன மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதான ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடக்கூடிய தகைமையும், திறமையும் உள்ளவர்களிடமிருந்து எதிர்வரும் 01.04.2014 **தொடக்கம் 30.09.2014** வரையான காலப்பகுதியில் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1 நாட்டமுள்ள விலைமனுதாரர்கள் கேள்வி ஆவணங்களை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனம், இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2. கேள்வி ஆவணங்களை **12.03.2014 தொடக்கம் 15.03.2014** வரையான காலப் பகுதியில் அலுவலக நேரத்தில் கேள்விப்படிவத்திற்குரிய மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 5,000/= காசாக செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.

3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூடிய கடித உறையினுள் இட்டு "கூறுவிலை" எனக் குறிப்பிட்டு தலைவர், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூ.ச.ச. சம்மேளனம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் **19.03.2014** அன்று முற்பகல் 10 மணிக்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விகள் கேள்விநேர முடிவில் உடனடியாகத்திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அன்றைய தினம் 9.30 மணிக்கு நேரில் சமுகமளித்தல் அவசியம். நிர்ணயிக்கப்படுகின்ற முற்பணம் தாமதமின்றி செலுத்தப்படல் வேண்டும்.

4. மேலதிக விவரங்களை அலுவலகத்திலோ அல்லது **021 222 2347/ 9797** என்ற தொலைபேசி இலக்கத்தினூடகவோ தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

அ. எமிலியாம்பிள்ளை
தலைவர்,
யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் (வ.து)
இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சி.12674) (45.3.6)

## சுயதொழில் மூலம் பெண்கள் வாழ்வில் முன்னேறவேண்டும்

*கிளிநொச்சி அரச அதிபர் கோரிக்கை*

கிளிநொச்சி, மார்ச் 13
பெண் தலைமைக் குடும்பங்களின் வருமானத்தை உயர்த்துவதற்கு சுய தொழில் நடவடிக்கையே முக்கியமானது. இதனை அனைவரும் உணர்ந்து செயற்பட முன்வர வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன்.
சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள பெண்களின் சுயதொழில் உற்பத்திப் பொருள் கண்காட்சியிலும் விற்பனை நிகழ்விலும் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
போருக்குப் பின்னர் எமது மாவட்டத்தில் பெண்களைத் தலைமையாகக் கொண்ட பெருமளவான குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்கள் பொருளாதார நிலையில் நலிவுற்றே இருக்கின்றனர். எனவே இவ்வாறான குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுயதொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இதன் மூலமே சமூகத்தில் இத்தகைய குடும்பங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ள முடியும் - என்றார். (ஐ-55)

## கிளிநொச்சி வை.எம்.சி.ஏ காணிகளை ஆக்கிரமிப்பிலிருந்து விடுவியுங்கள்

*இராணுவ, பொலிஸ் பிடியில் உள்ளதாக குற்றச்சாட்டு*

கிளிநொச்சி, மார்ச் 13
கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் உள்ள கிளிநொச்சி கிறிஸ்தவ வாலிபர் சங்கத்துக்குரிய காணிகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் கையகப்படுத்தியுள்ளதாக அந்த சங்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
இது குறித்து கிறிஸ்தவ வாலிபர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
எமது சங்கம், கிளிநொச்சி மாவட்ட மக்களின் நன்மை கருதி வாகனச் சாரதிப் பயிற்சி, தச்சுவேலைப் பயிற்சி, மேசன் வேலைப் பயிற்சி, வாழ்வாதார மேம்பாட்டு உதவிகள், ஒட்டு வேலைப் பயிற்சி, தட்டச்சு, தையல் பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை 1962 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தி வருகிறது. எமது சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் 1984 ஆம் ஆண்டு கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகில் ஒரு ஏக்கர் காணி வழங்கப்பட்டது. இதனை அப்போதைய அரச அதிபர் ஜே.ஜெயநாதன் சங்கத்துக்கு வழங்கியிருந்தார். இந்தக் காலப் பகுதியில் உதவி அரச அதிபராக கே.குணராசாவும், கிளிநொச்சி நகருக்குரிய கிராம சேவகராக வேலுப்பிள்ளையும், காணி அதிகாரியாக பஞ்சலிங்கமும் இருந்தனர்.
இந்தக் காணியில் நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்து நாம் தொடர்ந்து மக்களுக்கு சேவை வழங்கி வந்தோம். இந்த நிலையில் குறித்த காணியை பிராந்திய போக்குவரத்து பொலிஸ் பிரிவுக்கு சொந்தமானது என்ற பெயர்ப் பலகையை மாட்டி அபகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது குறித்து பொலிஸாருக்கும் அரச அதிகாரிகளுக்கும் நாம் விரிவாகத் தெரிவித்தோம். இதனை விட கடந்த வருடம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அரச அதிபர், உதவி அரச அதிபர், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்டோருக்கு எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினோம். அப்போது பொலிஸாருக்கு வேறு இடத்தில் காணி வழங்குவதாக வாய் மொழி மூலஉறுதி வழங்கப்பட்டது. எனினும் இது குறித்து எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. மீண்டும் கடந்த மாதம் கிளிநொச்சி அரச அதிபரிடம் இது குறித்துக் கலந்துரையாடினோம். எனினும் இவ்விடயத்தில் இதுவரை முடிவேதும் எட்டப்படவில்லை. இதனால் எமது சங்கம் ஊடாக மக்களுக்கு சேவை வழங்குவது தடைப்பட்டுள்ளது. இதனை அதிகாரிகள் கருத்தில் எடுத்து குறித்த காணியை சங்கத்திடம் மீள ஒப்படைக்க வேண்டும் எனக் கோரி நிற்கிறோம். இதேவேளை பரந்தனில் அமைந்துள்ள சங்கத்துக்குச் சொந்தமான இளைஞர் பயிற்சிக் கட்டடக் காணியை இராணுவத்தின் 681 படைப் பிரிவினர் தம்வசப்படுத்தியுள்ளனர். இந்தக் காணியையும் பொதுத் தேவை அல்லாத இராணுவத் தேவைக்காக கையகப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. எனவே இந்தக் காணியை மீட்டுத்தரவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட வாலிபர் கிறிஸ்தவ சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-18)

## தண்டம்! தண்டம்! தண்டம்!

கிளிநொச்சி, மார்ச் 13
கிளிநொச்சி ஏ- 9 வீதி மற்றும் நகரை அண்மித்த வீதிகளில் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதி முறைகளை மீறியும், உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றியும் வாகனங்களை செலுத்தியவர்களிடம் இருந்து அண்மையில் கிளிநொச்சி நீதிமன்று 11, 500 ரூபா தண்டப் பணமாக அறவிட்டுள்ளது.
கிளிநொச்சி ஏ-9 வீதியில் காப்புறுதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற ஒரு வரை கைது செய்த பொலிஸார் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்தினர் இதன்போது 5,000 ரூபா தண்டப் பணமாக அவரிடமிருந்து அறவிடப்பட்டது.
பூநகரிப் பகுதியில் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 1,500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
பூநகரிப் பகுதியில் உரிய ஆவணங்கள் இன்றி வாகனத்தைச் செலுத்திய ஒருவரிடம் இருந்து 1000 ரூபா அபராதம் அறவிடப்பட்டது.
மஞ்சள் கோட்டுக் கடவையில் நடந்து சென்றவர்களை கவனிக்காததுடன் காப்புறுதிப் பத்திரம் இன்றியும் வாகனம் செலுத்திய ஒருவரிடம் இருந்து 2,500 ரூபாவும், ஏ-9 வீதியில் வீதி ஒழுங்கு விதிகளை மீறி மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவரிடம் இருந்து 1,500 ரூபாவும் தண்டப் பணமாக அறவிடப்பட்டன. (ஐ-55)



கிளிநொச்சி அரச செயலகத்தில், வீதி விபத்துக்களை தவிர்ப்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடலொன்று கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. அதில் அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், பொலிஸார் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். (ஐ-18)

## ஒப்பந்த அடிப்படையில் ஆசிரிய நியமனம்

கிளிநொச்சி, மார்ச் 13
கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் நீண்டகாலமாக நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.
குறித்த பாடசாலையில் தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களுக்கு விஞ்ஞான பாடத்துக்கான ஆசிரியரும், உயர்தர உயிரியல் பாடத்துக்கான ஆசிரியரும் இல்லாத நிலையில் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வந்தனர்.
இவ்விடயம் குறித்து பெற்றோர் துறைசார் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்த போதும், நீண்ட காலமாக ஆசிரிய நியமனம் மேற்கொள்ளப்படவில்லை.
இந்த நிலையில் சமூக நல நோக்கு அடிப்படையில் கல்லூரியின் பழைய மாணவர்கள் இணைந்து ஒப்பந்த அடிப்படையில் இந்த வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை நியமிப்பித்து உதவியுள்ளனர். (ஐ-55)

## மாணவருக்கு தனியார் பஸ்கள் முன்னுரிமை வழங்க வேண்டும்

*உரிமையாளர் சங்கம் அறிவிப்பு*

கிளிநொச்சி, மார்ச் 13
கிளிநொச்சி ஏ- 9 வீதி, ஏ-35 வீதி ஆகிய வழித் தடங்களில் சேவையில் ஈடுபடும் சகல தனியார் பஸ்களும் பாடசாலை மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஏற்றிச் செல்ல வேண்டும் என வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.
கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற வீதி விபத்தை தவிர்த்தல் தொடர்பான கலந்துரையாடலின் போது பாடசாலை அதிபர்களால் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சங்கம் மேலும் அறிவித்துள்ளது.
இவ்வாறு மாணவர்களைப் புறக்கணிக்கும் பஸ்கள் தொடர்பாக அறிவிக்கப்படும் பட்சத்தில் அரச அதிபர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு பரந்தன் வீதியில் உடையார் கட்டு மகா வித்தியாலயம், உடையார்கட்டு ஆரம் வித்தியாலயம், வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயங்கள், கைவேலி கணேச வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் உள்ளன. இந்தப் பாடசாலைகளுக்கு சென்று வரும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் தமது போக்குவரத்துக்கு பஸ்களையே நம்பியுள்ளனர். எனினும் பஸ் உரிமையாளர்கள் பாடசாலை மாணவர் களை ஏற்றாது தவிர்ப்பதால் நெருக்கடிகள் ஏற்படுகின்றன என குற்றச்சாட்டு எழுந்த நிலையிலேயே தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் இந்த முடிவை அறிவித்துள்ளது. (ஐ- 400)

## பாடசாலைச் சூழலில் இராணுவம் இருப்பதால் மாணவருக்கு அச்சுறுத்தல்

*கல்வி அமைச்சரிடம் பெற்றோர் முறையீடு*

பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சூழ இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளதால் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே பாடசாலைக்குச் சென்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து மாணவர்களின் பெற்றோர்களால் வட மாகாண கல்வியமைச்சரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.
மீள்குடியேற்றம் செய்யப்பட்டு நீண்ட நாள்களின் பின்னரே குறித்த பாடசாலையை இராணுவத்தினர் விடுவித்தனர். எனினும் அங்கிருந்து விலகிய இராணுவத்தினர் பாடசாலைக்கு மிக அருகில் முகாம்களை அமைத்து நிலை கொண்டுள்ளதால் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றன. பாடசாலைக்கு மாணவர்கள் அச்சத்துடனேயே சென்று வர வேண்டியுள்ளது. எனவே இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாணவர்களின் பெற்றோர் கல்வியமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-18)

## வவுனியாவில் 'எங்கள் சந்தை'

வவுனியா, மார்ச் 13
**விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் 'எங்கள் சந்தை' என்னும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**
வவுனியா மாவட்ட விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்தையின் ஆரம்ப நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதனை வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர ஆரம்பித்து வைத்தார்.
வாரத்தின் பிரதி திங்களில் வெள்ளி ஆகிய இரண்டு தினங்கள் இந்தச் சந்தை தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

> **"விவசாயிகளின் உற்பத்திப் பொருள் களை சிறந்த முறையில் சந் தைப் படுத்துவதற்கு இது ஒரு களமாக அமையும். தரகர் மூலம் பொருள்களை விற்ப தால் விவசாயிகளுக்கே நட் டம் ஏற்படுகிறது**

இது குறித்து கருத்துத் தெரிவித்த வவுனியா மாவட்ட விவசாய உருவாக்கல் பணிப்பாளர், விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை சிறந்த முறையில் சந்தைப் படுத்துவதற்கு இது ஒரு களமாக அமையும். தரகர் மூலம் பொருள்களை விற்ப தால் விவசாயிகளுக்கே நட்டம் ஏற்படுகிறது. இதனைத் தவிர சந்தை வாய்ப்பு இன்மையால் விவசாய நடவடிக்கைகள் கைவிடப்படுகின்றன. வேறு இடங்களில் இருந்தே எமது பகுதிக்கு மரக்கறி வகைகளை எடுத்து வரவேண்டி உள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளைத் தவிர்த்து உள்ளூரில் உற்பத்தி செய்து உள்ளூரிலேயே விற்பனைசெய்வதன் மூலம்விவசாயத்தை வளர்த்து வருமானத்தை ஈட்ட முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-421)

## வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துக

கிளிநொச்சி, மார்ச் 13
**முல்லைத்தீவு பரந்தன் ஏ-35 வீதி 'காப்பெற்' இடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் அந்த வீதியூடாக கட்டுப்பாடற்ற வேகத்தில் வாகனங்கள் பயணிக்கின்றன. இதனால் வீதியில் பயணிப்பவர்களும், மாணவர்களும் ஆபத்துக்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.**
இந்த நிலைமை குறித்து பொலிஸார் கவனம் எடுப்பதில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இது குறித்து பாடசாலை மாணவர்களது பெற்றோர் கருத்துத் தெரிவிக்கையில்;
முல்லைத்தீவு பரந்தன் ஏ-35 வீதியில் போக்குவரத்து அதிகரித்துள்ள நிலையில் இந்த வீதியில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு முன்பாக அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

> **பாடசாலை தொடங்கும் நேரத்திலும் முடியும் நேரத்திலும் வீதி ஒழுங்குக் கடமைகளில் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவதில்லை.**

பாடசாலை தொடங்கும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் வீதி ஒழுங்குக்கடமைகளில் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவதில்லை. இதனால் உடையார் கட்டு மகாவித்தியாலயம், உடையார் கட்டு ஆரம்ப வித்தியாலயம், வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், புதுக்குடியிருப்பு கைவேலி கணேசா வித்த யாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளின் ம்ாணவர்கள் ஆபத்தை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.
எனவே பாடசாலை ஆரம்பிக்கும் நேரங்களிலும் பாடசாலை விட்டு மாணவர்கள் வெளியேறும் நேரங்களிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனவும் இதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்என்றும்மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-55)

# தமிழ் அரச ஊழியர் விகிதம் கிழக்கில் குறையும் அபாயம்

## தடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்கிறார் மாகாண சபை உறுப்பினர்

மட்டக்களப்பு,மார்ச் 13

கிழக்கு மாகாணத்தில் இன்று 40 வீதத்துக்கும் அதிகமாக தமிழர்கள் வாழ்கின்ற போதிலும் மாகாணத்தில் தமிழ் அரச ஊழியர்களின் விகிதம் குறைவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவில் பாதிக்கப்பட்டவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன் நாங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்; இன விகிதாசாரத்தின்படி ஆள் சேர்ப்பு இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் இந்த நாட்டில் எங்கும் அவ்வாறு இடம்பெறவில்லை.

மத்திய அரசுக்கு உட்பட்ட நியமனங்களுக்கோ, மாநில அடிப்படையில் வழங்கப்படும் நியமனங்களுக்கோ, இன விகிதாசார அடிப்படை பின்பற்றப்படவில்லை.



கருணாகரம்

கிழக்கு மாகாணசபை அபிவிருத்தி உத்தியோகத்தர் -3 இற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக 30.11.2013 ஆம் திகதி இடம்பெற்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறும் நேர்முகப்பரீட்சை என்று நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது இன விகிதாசாரத்தின் அடிப்படையிலான அழைப்பு அல்ல.

இன்று அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இதற்கு முன் முகாமைத்துவ உதவியாளர் நியமனத்துக்கு விண்ணப்பித்தவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் இன்று தமிழர்கள் 40 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கின்ற நிலையில் மாகாணத்தில் தமிழ் அரச உத்தியோகத்தர்களது விகிதம் குறைவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. நாம் எம்மைக் காப்பாற்றுவதற்கு முன் எமது சந்ததியினரைக் காப்பாற்ற வேண்டும்.

எமது சமுதாயம் போராடி அனைத்தையும் இழந்து விட்டாலும் நாம் தொடர்ந்து போராடினால்தான் இருப்பதையாவது காப்பாற்றிக் கொள்ளலாம்- என்றார். (ச)

## லொறி ஏறியதில் உடல் நசிந்து ஒருவர் சாவு

திருமலையில் சம்பவம்

திருகோணமலை,மார்ச் 13

திருகோணமலை, சமன்புர பகுதியில் லொறி ஒன்றின் கீழ் படுத்திருந்த நபரொருவர் மீது குறித்த லொறி ஏறியதில் அந்த நபர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் காலை 5 மணிக்கு இடம்பெற்றுள்ளது.


குறிப்பிட்ட நபர் லொறிக்குக் கீழ் படுத்து உறங்கியமை தெரியாமல் அவரது உறவினர் ஒருவர் அந்த லொறியைச் செலுத்த முற்பட்டதாலேயே விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## அபிவிருத்தி திட்டங்கள் மக்களிடம் கையளிப்பு

அம்பாறை,மார்ச் 13

அம்பாறை, தெஹியத்தகண்டி, பகலகம, மெதகம ஆகிய கிராமங்களில் 113.5 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட மின்சார வசதிகள் மற்றும் வீதிகள் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டன.



உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா மின்சாரத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

ஜப்பான் நாட்டுஅரசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் மெதகம கிரா மத்தில் 107 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட 8.8 கிலோ மீற்றர் நீளமான கொங்கிறீட் பாதை திறந்து வைக்கப்பட்டது.

பகலகம கிராமத்தில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய மின்சார அமைச்சினால் 6.5 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட மின்சார திட்டமும் மக்கள் பாவனைக்காக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா , கிழக்கு மாகாண அமைச்சர்களான எம்.எஸ். உதுமாலெப்பை, விமலவீர திஸாநாயக்க உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)



தேசிய சுகாதார வார நிகழ்வுகளில் ஒன்றாக கல்முனை வடக்கு ஆதார வைத்திய சாலையில் கடந்த திங்கட்கிழமை நோய்த் தடுப்பு விழிப்பூட்டும் வீதி நாடகமும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர். (ச)

## தமிழியல் கருத்தரங்கு

மட்டக்களப்பு,மார்ச் 13

கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறையின் ஏற்பாட்டில் தமிழியல் கருத்தரங்கு திங்கட்கிழமை மாலை மட்டக்களப்பு, வந் தாறுமூலையிலுள்ள பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கு கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவி திருமதி ரூபி வலன்ரனா பிரான்சிஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலக்கியம், நாட்டாரியல், மொழி, மொழி இலக்கணம் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், மற்றும் ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர். (ச)

## நியமனம் வழங்கக்கோரி பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,மார்ச் 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் தங்களை அரச நியமனங்களில் உள்வாங்குமாறு கோரி நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் நகரின் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் நடைபெற்றது.

2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பட்டப்படிப்பை நிறைவு செய்த பட்டதாரிகள் பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள்

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்குச் சென்று அரச அதிபரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றைக் கையளித்தனர். (ச)

## சம்பள நிலுவை கோரி ஊழியர்கள் போராட்டம்



வாழைச்சேனை கடதாசி ஆலை நீர்த் தாங்கியின் மேல் ஏறி போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள்

வாழைச்சேனை கடதாசி ஆலை ஊழியர்களுக்கு கடந்த மூன்று மாதகால சம்பளம் வழங்கப்படாததை கண்டித்து நேற்றுமுன் தினம் செவ்வாய்க் கிழமை இரண்டு ஊழியர்கள் ஆலை யின் நீர்த் தாங்கியின் மேல் ஏறித் தமது எதிர்ப்பை வெளி யிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட தொழில் திணைக்களத்தின் உதவித் தொழில் ஆணையாளர் திருமதி ஜே.திருச்செல்வம் வழங்கிய வாக்குறுதியை அடுத்து ஊழியர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

ஆலையின் குறித்த இடத்துக்கு வாழைச்சேனை பொலிஸார், படையினர் ஆகியோரும் வருகை தந்துள்ளனர். (ச)

## கிழக்கு பற்றி எவரும் சிந்திக்க மாட்டேன் என்கிறார்கள்

### ஜனாதிபதியின் ஆலோசகர் சந்திரகாந்தனுக்கு இப்படி ஒரு கவலை

மட்டக்களப்பு,மார்ச் 13

வட மாகாணசபைக்கு மாத்திரம் அதிகாரம் வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் கூறுகின்றார்கள். கிழக்கு மாகாணத்தைப் பற்றி எவரும் சிந்திப்பதில்லை.

இவ்வாறு ஜனாதிபதியின் ஆலோசகரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு,ஆனைகட்டியவெளி நாமகள் வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற மெய் வன்மைப்போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் வழங்கப்பட்ட அரசநியமனங்களில் ஒன்றுகூட மட்டக்களப்பு மாவட்டத் தமிழருக் குக் கிடைக்கவில்லை என்ற செய்திகள் வெளிவந்துள்ளன.

தமிழ் மக்களுக்கு அரசியல் பலம் இல்லாத காரணத்தினால்தான் இவ்வாறான நிலமைகள் ஏற்படுகின்றன.

இதனை எமது மக்கள் விளங்கிக் கொள்ளும் வரை மக்களின் பிரச்சினைகள் தீரமாட்டாது.

கிழக்கு மாகாணசபையின் செயற்பாடு தற்போது உறங்கல் நிலையை அடைந்துள்ளது.

கடந்தவருடம் 41வீதமானநிதியே கிழக்கு மாகாண சபையால் செலவு செய்யப்பட்டது. மீதமிருந்த நிதி மாகாண சபையால் பயன்படுத்தப்படவில்லை.

2017 ஆம் , 2018 ஆம் ஆண்டுகளில் எமது பிரதேசத்தில் நிலவக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண இப்போதிருந்தே முயற்சிக்க வேண்டும்-என்றார். (ச)

# எதிர்காலத் தலைமுறைக்கு கடன் சேர்த்த அரசு இது

## சரத் பொன்சேகா காட்டம்

கொழும்பு,மார்ச் 13

இலங்கை அரசு, நாட்டின் ஐந்து எதிர்காலத் தலைமுறையினருக்கு கடனைச் சேர்த்து வைத்திருக்கிறது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றஞ் சாட்டியுள்ளார்.



சரத் பொன்சேகா

மாகாண சபைகளுக்கான தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

தற்போதுள்ள அமைச்சர்கள் தங்களின் நாளாந்த வாழ்வியல் செயற்பாடுகள் குறித்து மாத்திரம் சிந்தித்து நாள்களைக் கடத்துகின்றார்கள்.

அவர்கள் மக்கள் குறித்து சிந்திப்பதில்லை என்று அவர் கூறினார்.

தங்களுக்குத் தரகு பணம்கிடைக்கிறது என்பதற்காக அமைச்சர்கள் பிச்சைக்காரர்களைப் போல், வெளிநாடுகளிடம் கையேந்துகிறார்கள். ஆனால் அதன் மூலம் நாட்டு மக்களுக்கு அதிக கடனையே சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# சர்வதேச தலையீட்டைத் தடுக்க சட்டத்தின் ஆட்சியே வேண்டும்

## இலங்கையில் அதற்கு கௌரவம் கிடையாது என்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு,மார்ச் 13

சர்வதேசத்தின் தலையீடுகளைத் தடுக்க வேண்டும் என்றால், ராஜபக்ஷ அரசு, சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப் படுத்த வேண்டும்.

நாட்டிலிருக்கின்ற மதத் தலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஜனநாயகத்துக்கான நெறிமுறைகளை பின்பற்றியிருந்தால் இலங்கைக்கு வெளிநாடுகளின் அழுத்தங்கள் ஏற்பட்டிருக்காது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.



எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் இடையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்களும், அரசும் ஜனநாயக நெறிமுறைகளை உரிய முறையில் பின் பற்றியிருந்தால் இலங்கை தானாகவே ஜெனிவாவில் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

சர்வதேசத்தின் தலையீடுகளை தடுக்க வேண்டும் என்றால், ராஜபக்ஷ அரசு, சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும். தற்போது இலங்கையில் அதற்கு கௌரவம் கிடையாது.

ஐ.நா. மனிதஉரிமைகள் சபையின் தற்போதைய அமர்வில், இலங்கை மீது பிரயோகிக்கப்படும் தேவையற்ற அழுத்தங்களில் இருந்து தப்பிக்க இலகுவான வழி உள்ளது.

நல்லாட்சியை ஏற்படுத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், அனைத்துலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக நடைமுறைகளைப் பின்பற்றுதல் ஆகியனவே அவையாகும்.

சிறுபான்மை மதத்தினரின் வழிபாட்டு இடங்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்படுகின்ற தாக்குதல்கள், ராஜபக்ஷ அரசுக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளால் முன் வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில் முக்கியமான ஒரு குற்றச்சாட்டாக சுமத்தப்பட்டுள்ளது-என்றார். (ச)

# தந்தையின் கையை உடைத்த தனயன்

கொழும்பு,மார்ச் 13

தனது தந்தையின் கையை உடைத்த இராணுவ மேஜர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிருலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த இந்த இராணுவ மேஜரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது, அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. சொத்துப் பிரச்சினை காரணமாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மகன், என்னையும் குடும்ப உறுப்பினர்களையும் கொலை செய்யப் போவதாக எச்சரித்தார் என்று மேஜரின் தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மகனுக்கு உரிய சொத்துக்கள் ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்டன. எனினும் அவர் மேலதிகமாக சொத்துக்களைக் கோரி வருகிறார் என்றும் தந்தை தெரிவித்தார். (ச)

# அடுத்த ஜனாதிபதியாக நாமல் வரவேண்டும்

## ஹிருணிகாவுக்கு வந்த ஆசை

கொழும்பு,மார்ச் 13

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக நாமல் ராஜபக்ஷவே தெரிவாக வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபைக்கான வேட்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசில் இருக்கும் நபர்களில் நான் வெறுப்பது எனது தந்தையைக் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் துமிந்த சில்வாவை மட்டுமே.



ஹிருணிகா

அரசில் இருப்பவர்களில் ஜனாதிபதி, அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, ராஜித சேனாரட்ன, பீலிக்ஸ் பெரேரா, குமார வெல்கம ஆகியோர் எனக்கு மிக விருப்பமானவர்கள்.

எதிர்க்கட்சிநாடாளுமன்ற உறுப்பினர்களான ரோசி சேனாநாயக்க, ஹரின் பெர்ணான்டோ ஆகியோர் எனக்குப் பிடித்தவர்கள். எதிர்க்கட்சியில் இருக்கும் விருப்பமில்லாத நபர்களை விட ஆளும் கட்சியிலேயே நான் விரும்பாத பலர் உள்ளனர்-என்றார். (ச)



வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பொதுநலவாய அமைப்பின் செயலர் கமலேஷ் சர்மாவை பிரிட்டனில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, 2013, கொழும்பு பொதுநலவாய மாநாட்டில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சர்வதேச நாடுகளுக்கு அஞ்சி ஆணைக்குழுக்கள் நிறுவவில்லை

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 13

சர்வதேசத்துக்குஅஞ்சிஆணைக்குழுக்கள் நிறுவப்படவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



மஹிந்த ராஜபக்ஷ

காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழுவும், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் எவருக்கும் அஞ்சி நியமிக்கப்பட்டவைகள் அல்ல என்று அவர் தெரிவித்தார்.


போரால் இடம்பெயர்ந்த மக்களை சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அரசு மீள்குடியேற்றவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

அரசு என்ற ரீதியில் நடந்த சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்துவது அவசியமானது. அதற்காகவே ஆணைக் குழுக்கள் நிறுவப்பட்டன என்று அவர் தெரிவித்தார். (ச)

# பாவனைக்கு உதவாத கொத்தமல்லி மீட்பு

கொழும்பு,மார்ச் 13

பாவனைக்கு உதவாத 21 ஆயிரத்து 750 கிலோகிராம் கொத்தமல்லியை நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.



கோப்புப்படம்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மசாலாத்தூள் தயாரிப்பதற்காக இந்தக் கொத்த மல்லி பதுக்கி வைக்கப்பட்டது என்று கண்டறியப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்டுள்ள மொத்த கொத்தமல்லியின் பெறுமதி சுமார் 35 லட்சம் ரூபாவாகும் என்று நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏற்கனவே தரம் கெட்டுப்போன கொத்தமல்லியைப் பயன்படுத்தி தயாரித்து வைக்கப்பட்டிருந்த ஒருதொகை மசாலாத் தூளையும் நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கொட்டாஞ்சேனை சிவானந்த வீதியில் இயங்கி வந்த உணவு விநியோக மத்திய நிலையம் ஒன்றிலிருந்தே பூஞ்சணம் பிடித்த கொத்தமல்லி மற்றும் அதன் மூலம் தயாரிக்கப்பட்ட மசாலாத்தூள் ஆகியன கைப்பற்றப்பட்டன. (ச)

# ஓய்வூதியர்களுக்கான கடன்களை வங்கி மூலம் வழங்க நடவடிக்கை

## அடுத்த மாதம் முதல் செயற்படுத்தப்படும் எனத் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 13

ஓய்வூதியர்களுக்கு வட்டியின்றி வழங்கப்படும் ஓய்வூதியக் கடனை எதிர்வரும் முதலாம் திகதி முதல் அரச வங்கிகள் மூலம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்தார்.

இந்த வருடம் ஓய்வூதியக் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக 13ஆயிரத்து 200 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்குத் தாமதமின்றி உரிய நேரத்தில் பணத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே அரச வங்கிகள் மூலம் இதனை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளோம் என்று அவர் கூறினார்.

ஓய்வூதியக் கடன் வங்கிகளுக்கூடாக வழங்கப்படவுள்ள போதிலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் இதற்கான வட்டி ஓய்வூதியக்காரர்களிடமிருந்து அறவிடப்படமாட்டாது. இதற்குரிய வட்டியை அரசு பொறுப்பேற்கும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.



ஜோன் செனவிரட்ண

இந்தத் திட்டத்துக்கிணங்க இரண்டுவருடங்களுக்கான ஓய்வூதியப் பணம் வட்டியின்றிக் கடனாக வழங்கப்படும். ஆரம்பகாலம் முதல் இந்தக் கடன் வழங்கும் திட்டம் ஓய்வூதியத் திணைக்களத்தினாலேயே நடைமுறைப்படுத்தப்பட்டது என்று அவர் கூறினார்.

இதற்காக விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் கடன் வழங்கத் தேவையான நிதியை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் ஓய்வூதியக்காரர்கள் ஏமாற்றமடைய வேண்டி நேரிடுகிறது என்று அவர் தெரிவித்தார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காலம் பிந்திய அரசியல் ஞானம் பாதிப்புற்றோருக்கு பயன் தருமா......?

அனைத்துலக விதிமுறைகளை அனுசரிப்பது, ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் கடப்பாடு, பொறுப்பு. கடந்த காலங்களில் எமது நாட்டில் என்ன நடந்தது; இப்போது என்ன நடக்கின்றது என்பது அனைவரும் அறிந்த விடயம். இது தொடர்பில் அனைத்துலக சமூகத்தை, வெளிநாடுகளை எவராலும் கட்டிப்போட முடியாது-

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை எமது நாட்டில் நடப்பவற்றை மிக நீண்ட காலமாகவே அவதானித்த வண்ணம் உள்ளது. எமது தேசத்தில் முகிழ்த்து இங்கேயே வளர்ந்துள்ள பிரச் சினைகளைப் போக்குவதற்கு, தீர்ப்பதற்கு பல தடவைகள் கால அவகாசங்களும் வழங்கப்பட்டன.

ஆயினும் பதவியில் உள்ள அரசு அவற்றைப் பயன்படுத்தத் தவறிவிட்டது. இது மிகுந்த கவலைக்குரியது. அதன் பிரதிபலனாக, நாட்டைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளி விடக்கூடிய, அச்சுறுத்தல் பெரிதாகக் காணப்படுகிறது-

இவ்வாறு இலங்கைக்கு இப்போது ஏற்பட்டுள்ள, பதவியில் உள்ள அரசு திக்குமுக்காடும் நிலையைப் பூடகமாக வர்ணித்துள்ளார், நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா. தந்தை, தாய் இருவரின் வழி நின்று இந்த நாட்டை சுமார் பத்து வருடங்களாக ஆண்டவர் இவர்.

தெற்காசியக் கொள்கை மற்றும் ஆய்வு நிறுவகத்தில், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நடத்திய சந்திப்பின் பின்னர் சந்திரிகா மேற்கண்ட கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்.

மக்கள் ஆட்சிக்கான அனைத்துலக நியமங்களையும், தராதரங்களையும் பின்பற்றி, அவை வழி நின்று ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டும். உள்நாட்டு அரசியல் மேடை போன்று அரசு செயற்படுவதற்கு முனையுமாயின், மிகப் பெரிய நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்ள நேரிடும்-என்றும் முன்னாள் ஜனாதிபதி, எச்சரிக்கைத் தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

நாட்டில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அனைவரும் அதிகாரத்தைக் கோரி நிற்கின்றனர். அரசியல்வாதிகள் சீரழிக்காதிருந்தால் நாடு எப்போதோ முன்னேறி இருக்கும்.....

அனைத்துலக விதிமுறைகளுக்கு ஏற்ப அரசாங்கம் செயற்பட்டால் மட்டுமே, இலங்கைக்கு எதிராக இடம்பெறும் ஜெனீவா பிரச்சினைகளில் இருந்து தப்பிக்கொள்ள முடியும். அடக்குமுறை நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையப் போவதில்லை.....

நாட்டில் மனித உரிமைகளை மதித்து ஜனநாயகத்தினை ஏற்படுத்த வேண்டும்..... அனைத்துலகமும் இதனையே வலியுறுத்துகின்றது.

அனைத்துலக நாடுகள் ஏற்றுக்கொண்ட விதிமுறைகளும், அவர்களின் கோட்பாடுகளும் அனைவரினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன......

ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நியதிகளும், விதிமுறைக் கோட்பாடுகளும் அனைத்து நாடுகளையும் சார்ந்துள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையில் இப்போது அது அனைத்துலக விசாரணைகள் மற்றும் போர்க் குற்றச் சாட்டுகளில் சிக்கித் தவிக்கின்றது. பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமாயின் அனைத்துலக நிபந்தனைகள் மற்றும் அவர்களின் கோரிக்கைகளுக்கு இடமளிக்க வேண்டும்-

அனைத்துலக விதிமுறைகளுக்கு ஏற்ப அரசாங்கமும் மக்களும் செயற்பட்டால் மாத்திரமே ஜெனிவா பிரச்சினைகள் மற்றும் சர்வதேச குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும். இல்லையேல் தொடர்ந்தும் இலங்கை அழுத்தங்களையே சந்திக்க வேண்டி நேரிடும். அதேபோல் அடக்குமுறைகளை மேற்கொண்டு ஆட்சி நடத்தப்படுமாயின் இலங்கையில் ஒருபோதும் அமைதியினை ஏற்படுத்த முடியாது. இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்-

நாட்டில் சகல மக்களினதும் உரிமைகளுக்கும், மனித உமைச் செயற்பாடுகளுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். தனிப்பட்ட ஒரு சமூகத்தினரின் சலுகைகளுக்காகவும் தனிப்பட்ட செயற்பாடுகளுக்காகவும் மக்களின் மனித உரிமைகளை கட்டுப்படுத்தி விடக்கூடாது..... என்றவாறாக முன்னாள் ஜனாதிபதி பொருத்தமான கருத்தை முன்வைத்துள்ளார்.

உயர்பதவியில் அமர்ந்திருக்கும் போது, மக்களினதும் நாட்டினதும் நலன்களைப் புரிந்துகொள்ளத் தவறிய தலைவர்களுக்கு, பதவி இழந்திருக்கும் போது ஒருவகை "ஞானம்" பிறப்பதுண்டு. தமது பதவிக் காலத்தில் உணர்ந்து கொள்ளத் தவறியமை குறித்து தாமே கழிவிரக்கம் கொள்வதால், முந்தைய அரசியல் ரீதியான பழி பாவங்களில் இருந்து மீளமுடியாது என்பது நியதி. அதனை அரச கட்டிலில் இருப்பவர்கள் நினைவில் கொண்டால் ஓர் இனமோ, ஒரு பிரதேச மக்களோ மனதுக்குள் குமுற மாட்டார்கள்.

எங்கள் நாட்டின், தெற்கின் அரசியல் உயர் தலைவர்கள் இதனை உணர்ந்து கருத்தில் கொள்வார்களேயாயின், விவகாரங்கள் ஐ.நா.சபை வரை செல்லும் நிலைமையும் உருவாகாது. உணர்வார்களா அதனை? இனி எப்போது....?

# யூதர்களும் ஈழத்தமிழரும்

சேரலாதன்

உலகிலேயே அதிக இன்னல்களை எதிர்கொண்டவர்கள் யூத இனத்தைச் சேர்ந்த மக்கள் எனக் கூறுவார்கள். இவர்கள் தமக்கென ஒரு தாயகம் இல்லாத நிலையில் உலகின் பல நாடுகளிலும் தங்கி வாழ வேண்டியதொரு நிலை அன்று காணப்பட்டது. இயற்கையாகவே கடின உழைப்புக்கும், புத்திக் கூர்மைக்கும் பெயர் பெற்ற யூதர்கள், தாம் வாழ்ந்த நாடுகளின் அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் முன்னணியில் திகழ்ந்தனர். இதன் காரணமாக சுதேசிகளின் வெறுப்புக்கும் உள்ளானார்கள்.



இந்த நிலையில் 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்தில் எழுந்த தேசியவாத எழுச்சியின் எதிர் விளைவாக யூதர்களின் சியோனிய அரசியல் அமைப்பு உருவானது. மேலும் அவர்களது அரசியல் சிந்தாந்தம் கிறிஸ்தவர்களின் மத நூலான பைபிளை அடியொற்றியதாகக் காணப்பட்டதால் யூதர்களின் புனித நூலான தோரா, கிறிஸ்தவர்களால் அவர்களது மத நூலான பைபிளில் பழைய ஏற்பாடு என்ற பெயரில் இணைக்கப்பட்டது.

கிறிஸ்தவ மதத்தைத் தோற்றுவித்த இயேசு கிறிஸ்துநாதர் கூட யூத இனத்தையே சேர்ந்தவர் என்பது இன்று கூடப் பலருக்கும் தெரியாத ஒரு விடயமாக உள்ளது.

யூத இன மக்கள் உலகின் சகல பாகங்களிலும் பரந்து வாழ்ந்தனர். தமக்கென ஒரு தாயகம் இல்லையே என்ற ஏக்கம் ஒவ்வொரு யூதனின் மனத்திலும் நிறைந்து காணப்பட்டது. ஆனால் அதனை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்பது அப்போது அவர்களுக்குப் புரியவில்லை. அதற்கான பலமும் அவர்களிடத்தில் இருக்கவில்லை. ஆனால் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியையே அவர்கள் தமது தாயகமாக நம்பினர். அங்கு போய் நிரந்தரமாகக் குடியேறுவதே தமது இனத்தின் மீட்சிக்கு உதவுமென்பதை அவர்கள் உறுதியாக நம்பினர். இதனால் உலகம் முழுவதும் நிதிசேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்த நிலையில் ரஷ்யாவில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த சார் மன்னன் யூதர்களுக்கு எதிரான இனப்படுகொலையை நிகழ்த்தினான். இதில் ஏராளமான யூத மக்கள் கொலை செய்யப்பட்டனர். இதனால் பயமும், வெறுப்பும் அடைந்த யூதர்கள் பாலஸ்தீனத்தில் நிலங்களை விலை கொடுத்து வாங்கி அங்கு குடியமர்ந்தனர். புதிதாக உருவாக்கப்பட்ட யூத கிராமங்கள் துரித வளர்ச்சி பெற்றன.

இந்த நிலையில் இரண்டாவது உலக மகா யுத்தமும் ஆரம்பமானது.

ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் தனது வஞ்சினத்தைத் தணிக்கும் பொருட்டு அறுபது லட்சம் யூதர்களைக் கொன்று குவித்தான். இதுவே இஸ்ரேல் என்ற யூதர்களின் நாடு சுதந்திரமாக உதயமாவதற்கு அடி கோலியது.

உலகின் பல பாகங்களிலிருந்தும் லட்சக் கணக்கான யூதர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட தமது தாயகத்துக்கு வந்து குவிந்தனர்.

இன்று இஸ்ரேல் என்ற தேசம் உருவாகி அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது. யூதர்கள் இன்னமும் உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்தாலும் இஸ்ரேல் தமது தாய் வீடு என்று பெருமிதம் கொள்கின்றார்கள். சொந்தமாக நாடு இல்லாது ஏனைய நாடுகளின் ஆதரவில் தொங்கிக் கிடப்பவர்கள் யூதர்கள் என்ற அவலப் பெயர் துடைத்தெறியப்பட்டதில் யூத மக்கள் ஆத்ம திருப்தி அடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதே யூதர்களுடன் ஈழத் தமிழர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தாங்கொணாத வேதனைதான் ஏற்படுகின்றது. அந்நியரின் வருகைக்கு முன்னர் தமிழர்களுக்கென ஆட்சி, அதிகாரங்கள் அமைந்திருந்தன. தாயகப் பூமி வடக்கு, கிழக்கில் நீண்டு விரிந்து கிடந்தது. இது எமது தாய் மண் என்ற உணர்வு தமிழர்களின் மனங்களில் பரவசத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்ததால் யூதர்களின் வாழ்வில் வசந்தம் வீச ஆரம்பித்தது. ஆனால் இதுவே தமிழர்களுக்கு அனலை அள்ளிக் கொட்டுவதற்கு வழி சமைத்துக் கொடுத்தது. 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் அன்றைய தினமே இங்குள்ள தமிழர்களின் கரங்கள் இரும்புத்தளை கொண்டு பிணைக்கப்பட்டு விட்டன. ஆட்சி இழந்து, அதிகாரம் இழந்து, மண்ணையும், மொழி உரிமையும் இழ்ந்து நடுத்தெருவில் விடப்பட்ட அந்த நாள் தமிழர்களால் எப்போதுமே மறக்கப்படக் கூடியதல்ல. தமிழர் ஏனைய மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கவில்லை. மற்றவர்களின் மொழி மீது ஆதிக்கம் செலுத்தவில்லை. ஆனால் ஏனோ இன்று ஆழம் காண முடியாத பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கின்றனர்.




யூதர்கள், தமிழர்களுடன் ஒப்பிட்டுக் கூறும் அளவுக்குக் கூட பொருத்தமில்லாத நிலையில் காணப்படுகின்றனர். தாம் அனுபவித்த துன்பங்களை எல்லாம் மறந்து தம்மை அண்டி வாழும் பாலஸ்தீன மக்களை வதைப்பதிலேயே யூதர்கள் குறியாக உள்ளனர். மேற்குலக நாடுகளின் செல்லப்பிள்ளையான இஸ்ரேல் என்ற நாடு ஏனைய சிறு பான்மை இனங்கள் கொடுமைகளுக்கு ஆளாகும் போது ஒருபோதுமே அனுதாபம் காட்டியதில்லை. எமது நாட்டில் இடம்பெற்ற தமிழ் மக்களின் போராட்டங்களை ஒழிப்பதில் இஸ்ரேலின் பங்கும் கணிசமாக உண்டு. ஆயுத உதவி, இராணுவ நடவடிக்கை தொடர்பான ஆலோசனைகள் என்பவற்றை இஸ்ரேல் அரசு தாராளமாகவே இலங்கை அரசுக்கு வழங்கியது. ஒரு சிறுபான்மை இனம் வதைபடுகின்றதே என்ற சிறு அளவிலான அனுதாபம் கூட யூதர்களிடம் காணப்படவில்லை. தமிழர் பகுதியெங்கும் இராணுவத்தால் மண் அணைகள் அமைக்கப்பட்டமைகூட இஸ்ரேல் இராணுவத்தின் ஆலோசனையின் பிரகாரமே எனத் தெரியவருகிறது.



யூதர்களும் ஒரு காலத்தில் தாம் மோசமாகப் பாதிக்கப்பட்டதை அறவே மறந்து விட்டதாகவே தெரிகின்றது. ஆனால் மேன்மேலும் பாதிப்புக்களை எதிர் கொண்டு வரும் ஈழத்தமிழர்களின் வாழ்வில் யூதர்கள் எதிர்கொண்டதைப் போன்றதொரு வசந்தம் வீசுமா என்பது இதுவரை கனவாகவே காணப்படுகின்றது.

# குழப்பமின்றி இடம்பெறுமா

## பெரும் துடுப்பாட்டப் போட்டிகள்



● விண்ணன்

யாழ். மாவட்டத்தில் வரும் நாள்களில் யாழ்ப் பாணத்தையே அதிரச் செய்யும் பெரும் துடுப்பாட்டப் போட்டிகள் ஆரம்பமாக வுள்ளன.

குறிப்பாக, யாழ். மாவட்டத்தில் நான்கு துடுப்பாட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவது வழமை. பெரு விளையாட்டுப் போட்டிகளின் தந்தை தாயெனக் கூறும் அளவுக்கு பொன் அணிகளின் மோதல் காணப்பட இவர்களின் வாரிசுகளாக உருவெடுத்த வீரர்களின் போரும் மற்றும் இந்துக்களின் போரும் அமைந்துள்ளன.

அண்மைக் காலமாக பாடசாலை மாணவர்கள் வேண்டத்தகாத நடவடிக்கைகள் காரணமாக இத்தகைய போட்டிகளே வேண்டாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை மாற்றும் வகையில் 'மின்னாமல் முழங்காமல்' வீரர்களின் போர் எனக் கூறப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் , தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையேயான போட்டி மிகவும் அமைதியான முறையில் நடைபெற்று முடிந்துள்ளது.

போட்டியின்போது ஆட்டமிழப்பு ஏற்பட்ட போதும் சரி, நான்கு ஆறு ஓட்டங்கள் பெறப்பட்ட போதும் சரி மைதானத்தினுள் ஆதரவாளர்கள், பழைய மாணவர்கள் என எவரும் இறங்கி போட்டியைக் குழப்பும் எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை. இத்தகைய நிலையை ஏற்படுத்திய பெருமை இரண்டு கல்லூரிகளின் அதிபர்கள், ஏற்பாட்டுக் குழுவினர் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் உரியதென்று கூறினால் அது மிகையாகாது.

ரசிகர்கள் ஆடுகளத்தின் வெளியே,-அதே நேரம் மைதானத்தின் உள்ளே எவ்வளவு மகிழ்ச்சி வெளிப் பாட்டில் ஈடுபட்டாலும் தகும். ஆனால் ரசிகர்கள் அப்படி நின்றுவிடுவதில்லை. போட்டிக்கு முன்பாகவே வீதிகளுக்கு இறங்கிவிடும் ரசிகர்கள்-குறிப்பாக மாணவ ரசிகர்கள்-போட்டி அன்று ஆடுகளங்களுக்கும் அடிக்கடி புகுந்து விடுகிறார்கள். வீரர்களின் போர் நடந்தபோது இவை அனைத்துக்கும் தடை விதிக்கப்பட்டது. ஆனால் கடந்த சில தினங்களில் வீதிகளில் ஆடித்திரிவதைக் காணமுடிகிறது.

இன்று பெரும் துடுப்பாட்டப் போட்டியின் மூதாதையரான வடக்கின் பெரும் போர் எனக் கூறப்படும் நூற்றாண்டு கடந்த போட்டி ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெறும் இந்தப் போட்டியானது மிகுந்த கட்டுப்பாடும் ஒழுங்கும் கொண்டதாக ஒரு காலத்தில் நடைபெற்று வந்தது. ஆனால் இத்தகைய நிலைமை அண்மைக் காலத்தில் காணப்படவில்லை என்பது பலருக்கும் வேதனையை அளித்துள்ளது. இந்தப் போட்டியின் போது ஒரு சிலரின் தவறான செயல்களால் பொலிஸார் தலையிடும் நிலைமை குழப்பம் விளைவிப் பவர்கள் கைது செய்யப்படுவதுமாக அதிபர்கள், பொலிஸ் நிலையம் செல்வதும் விரும்பத்தகாத நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இந்த முறை இத்தகைய குழப்பங்கள் குறிப்பாக போட்டியின் போது மைதானத்தில் இறங்குதல், போட்டியைத் தாமதித்தல் ஆகியன நடைபெறாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இரு கல்லூரிகளின் அதிபர்கள், ஏற்பாட்டாளர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பல தரப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இருக்கிறது.

போட்டிகள் ஏதோவொரு முடிவை எட்ட வேண்டும் என்பதற்காக இரண்டு நாள்கள் நடைபெற்ற போட்டியை மூன்று நாள்களாக்கினர், அதிலும் முடிவுகளை எட்ட முடியாமல் செய்யும் வகையில் மைதானத்தில் இறங்கி ஆதரவாளர்கள் நேரத்தை வீணடிப்பது ஏற்கத்தக்கதல்ல. அனைத்தும் வீண் என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

போட்டி நல்லமுறையில் நடக்க வேண்டும், ஏதோவொரு முடிவு எட்டப்படவேண்டும், வீரர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. மேலும் எவரும் மைதானத்தில் இறங்கி போட்டி தடைப்படும் வகையில் செயற்படக்கூடாது.

> போட்டிகள் ஏதோவொரு முடிவை எட்ட வேண் டும் என்பதற்காக இரண்டு நாள்கள் நடைபெற்ற போட்டியை மூன்று நாள்களாக்கியும், அதிலும் முடிவுகளை எட்ட முடியாத நிலையில் மைதானத்தில் இறங்கி ஆதரவாளர்கள் நேரத்தை வீணாக்கினால் செலவிடப்படும் பணம் அனைத்தும் வீண் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பொன் அணிகளின் மோதலும் கூட கடந்த காலங்களில் ஒரு சிலரின் செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும்கூட இந்த முறை யாழ். மாவட்டத்தில் நடைபெறும் பெரும் துடுப்பாட்டப் போட்டிகள் எவையும் பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களைப் பாதிக்கும் வகையில் அமைந்துவிடக் கூடாது என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் விருப்பமாகும்.

மேலும் பெரும் துடுப்பாட்டப் போட்டி மதுப் பிரியர்களின் அட்டகாசத்துக்கு உரிய ஒன்றாக மாறுவதும் தவிர்க்கப்படவேண்டும் இளைய தலைமுறையினரான மாணவ சமுதாயத்தினர் தீய வழியில் செல்வதற்கு இந்தப் போட்டிகள் வழி சமைப்பதாக அமைந்துவிடக்கூடாது.

யாழ்.மாவட்டத்தின் கிரிக்கெட் விளையாட்டுக்கு மகுடம் சூட்டுவதைப் போன்று இந்த முறை நடைபெறவுள்ள போட்டிகள் யாவும் அமைய வேண்டும் என்பதே ரசிகர்களின் எண்ணமும் விருப் பமும் ஆகும்.

இதனை நிரூபிக்கும் வகையில் வீரர்களின் போர் எந்த வகையான குழப்பங்கள், பிரச்சினைகள், தடைகள் இல்லாது நடந்து முடிந்துள்ளது. இதனை ஏனைய துடுப்பாட்டப் போட்டிகளிலும் கடைப்பிடிக்க வேண்டும். அதுவே கிரிக்கெட் விளையாட்டுக்குப் பெருமையும் புகழும் கொடுக் கும் என்பதில் ஐயமில்லை.

---

## தவக்காலச் சிந்தனை

### நன்னயம் வெற்றி தரும்

நாம் தினமும் பல்வேறு விதமான உரையாடல்களை மேற்கொள்கின்றோம். கோபம், பீதி, அதிர்ச்சி, ஏளனம், இன்பம், துன்பம் புகழ்ச்சி கண்டிப்பு போன்ற பல உணர்வுகள் வெளிப்படுகின்றன. எதையும் நன்னயத்துடன் பக்குவமாக பிரயோகித்தால் பிறருக்கு ஏற்படும் உணர்வுத் தாக்கங்களை குறைத்துக்கொள்ளலாம்.

"நான் இடும் பணிகளை மறுபேச்சின்றி நீ சென்று முடிக்க வேண்டும். மீறினால் நடவடிக்கை பாரதூரமானதாக இருக்கும். நான் நினைத்தால் உன்னை வேலையிலிருந்து தூக்கமுடியும்" என அதிகார மமதையுடன் கூறுவதும் "ஒவ்வொருவரும் தமது பணிகளை பொறுப்புடன் ஆற்ற வேண்டும். இறைவனுக்கும் சமூகத்துக்கும் உரிய முறையில் சேவை செய்வோருக்கும் பல உயர்வுகள் கிடைக்கும் எனவே கடமை உணர்வுடன் இந்தப் பணிகளை செய்யுங்கள்" எனக் கூறுவதும் ஒரே பொருள் கொண்டதாகும். கண்டிப்பும் கனிவும் சொல்லும் விதத்தில்தான் உள்ளன. கனிவான பேச்சு பெரிதான செயல்களை முடிக்க வல்லது. கெட்டவார்த்தைகள் எதுவும் உங்கள் வாயினின்று வரவேண்டாம். கேட்போர் பயனடையும் படி தேவைக்கு ஏற்றவாறு அருள்வளர்ச்சிக்கேற்ற நல்வார்த்தைகளையே பேசுங்கள்.


(எபே 4:29)

*எஸ்.யேசுதாஸ்,*
*கொழும்புத்துறை.*

---


வாசகர் திருமுகம்

## நல்லூர்ப் பகுதியில் மாடுகளால் தொல்லை



நல்லூர்ப் பகுதியிலுள்ள சில மாட்டுச் சொந்தக்காரர்கள் மிக இலகுவான முறையில் எவ்வித செலவுமின்றி மாட்டு வளர்ப்பை மேற்கொள்கிறார்கள். இவர்கள் அதிகாலையில் மாடுகளில் பாலைக் கறந்த பின்னர் கன்றுகளைக் கட்டி வைத்துவிட்டு மாடுகளை வெளியே விரட்டி விட்டு வாயில் கதவைப் பூட்டி வைக்கிறார்கள். இந்த மாடுகள் இந்தப் பகுதியில் ஒவ்வொரு ஒழுங்கையாகத் திரிந்து எல்லா வீடுகளுக்குள்ளும் புகுந்து நல்ல பயன் தரும் பயிர்கள், வாழைகள், பூக்கன்றுகள் என்பவற்றைத் தின்று தீர்க்கின்றன. இவை இரும்புக் கதவுகளையும் கச்சிதமாகத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே செல்கின்றன. இதேபோன்று கடைகளில் வைக்கப்பட்டுள்ள தானியங்கள், வாழைக் குலைகள், மரக்கறி வகைகள் என்பவற்றைக் கடை உரிமையாளர்கள் சற்று அசட்டையாக உள்ள நேரம் பார்த்து தின்று தீர்க்கின்றன. இதற்காகவே கடை உரிமையாளர்கள் மாடுகளை விரட்டுவதற்காக தானிய மூடை ஒன்றில் தடி ஒன்றை வைத்திருப்பதை எல்லோரும் அவதானிக்கலாம். எனது வீடு நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ளது. அன்றொரு நாள் வீட்டிலுள்ள அனைவரும் திருமண வீடு ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றோம். தபால்காரர் அல்லது மின் சாரசபை ஊழியர் வரக்கூடுமென நினைத்து வாயில் கதவைப் பூட்டாமல் சாத்திவிட்டுச் சென்றோம். நண்பகலில் வீட்டுக்கு வந்த பொழுது இரண்டு மாடுகள் வயிறு நிறைய உண்டு விட்டு முற்றத்தில் படுத்திருந்தன. உள்ளே சென்று பார்த்தபொழுது 10 நல்லினப் பூக்கன்றுகள், இரண்டு பெரிய வாழைக் குலைகள், வெளியே காய வைத்திருந்த இரண்டு கிலோ உழுந்து என்பவற்றை மாடுகள் தின்று தீர்த்திருந்தன. மாடுகள் எந்தவித பயமும் இல்லாமல் படுத்திருந்ததால் அவற்றை மிகவும் சிரமப்பட்டே விரட்டினேன். இதனால் எனக்கு ஏற்பட்ட நட்டம் சுமார் 3 ஆயிரம் ரூபா. இதே நிலை தொடர்ந்தால் பட்டினப் பகுதியில் எவரும் எந்தப் பயிரும் செய்கை பண்ண முடியாத நிலை ஏற்படும். ஒருவருடைய துன்பத்திலே இன்னொருவர் இன்பம் காண்பது தர்மமல்ல. இந்தக் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து தண்டம் அறவிடப்பட வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களைத் தயவாக வேண்டுகிறேன்.

*கே.எஸ்.நாதன்.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



மேடம்: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.



**இடபம்**: முடியாமறற்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.



**மிதுனம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப் போவீர்கள்.



**கடகம்**: சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. குடும்பத்தினரிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். அடுத்தவர்கள் மனசு காயப்படும்படி பேசாதீர்கள். யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் சிறுசிறு அவமானங்கள் வந்து நீங்கும்.



**சிங்கம்**: திட்டமிட்ட காரியங்களை அலைந்து, திரிந்து முடிப்பீர்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். வழக்கில் அலட்சியம் வேண்டாம். அரசு காரியங்கள் இழுபறியாகும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரக்கூடும்.



**கன்னி**: மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.



**துலாம்**: பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.



**விருச்சிகம்**: நீண்டநாள் ஆசைகளை பூர்த்தி செய்துக்கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.



**தனுசு**: சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும்.



**மகரம்**: எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் மிகுதிகளை விரைந்து பெறுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.



**கும்பம்**: வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.



**மீனம்**: புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரசுக் காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். இளவயது நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிடைக்கும்.

## நாளை

**மாசி-30 வெள்ளிக்கிழமை | 14.03.2014**

திதி: திரயோதசி மு.இ.08.49 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப.09.06 வரை

சுபநேரம்: 06.21-07.51 வரை
இராகுகாலம்:.10.51-12.21 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...

## சமயப் பயிற்சி



நாம் பல புத்தகங்களைப் படிக்கிறோம்; என்றாலும் அவை நமக்கு ஞானம் அளிப்பதில்லை. உலகிலுள்ள சமயப் புத்தகங்களையெல்லாம் நாம் படிக்கலாம். ஆனால், அவை நமக்குச் சமய உணர்வை அளிக்கமாட்டா. ஏட்டுப்படிப்பு எளிது; எவரும் அடையலாம். ஆனால் சமயத்தைச் செயல் முறையில் மேற்கொள்வதே நமக்குத் தேவை.

உலகத்துக்குப் பயன்தரவல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான் சமயப் பயிற்சி பற்றிய கிறிஸ்தவக் கொள்கை.

இதனல் என்ன பயன்? உலகத்துக்குப் பயனுள்ள செயல்கள் செய்யும் அடிப்படையில் பார்த்தால் சமயம் ஒரு தோல்வியே. ஒவ்வொரு மருத்துவமனையும், அதிகப்படியான மக்கள் அங்கு வரவேண்டும் என்று செய்யப்படும் பிரார்த்தனையின் விளைவே. தானம் என்றால் என்ன? அது அடிப்படையான பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதன்று. அது உண்மையில் உலகத்தின் துன்பத்தை அதிகப்படுத்த உதவுகிறதே தவிர, அதை ஒழித்துக் கட்டவில்லை. ஒருவன் பெயரும் புகழும் அடைய விரும்புகிறான். அவற்றைப் பெற அவன் மேற்கொள்ளும் முயற்சிக்கு , சில தானங்கள், சில நல்ல செயல்கள ஆகியவற்றைச் செய்து முலாம் பூசுகிறான். மற்றவர்களுக்காகப் பணியாற்றுவது போல் நடந்து கொண்டு தனக்குத் தானே உதவிக் கொள்கிறான். இவை எல்லாம், எந்தத் தீமையை எதிர்த்து நிற்பதாகக் கூறப்படுகிறதோ, அந்தத் தீமையையே ஊக்குவிப்பவைதான். சில ஆண்களும், பெண்களும் மருத்துவமனை அல்லது தருமச் சாலைகளின் நலனுக்காக இரவு முழுவதும் நடனமாடுகிறார்கள். பின்னர் தம் வீடுகளுக்குத் திரும்பிச் சென்று, விலங்குகள் போலச் செயற்பட்டுப் பிசாசுகளைப் பெற்றுச் சிறைச் சாலைகளையும், மருத்துவமனை களையும் நிரப்புகிறார்கள். இந்த முறை நடந்து கொண்டே இருக்கிறது.

இவ்வாறு மருத்துவமனை முதலியன கட்டுவதை , நல்ல செயல் என்று சொல்கிறார்கள். நல்ல வேலையின் நோக்கமே, உலகின் துன்பத்தைப் பூரணமாகப் போக்காவிடினும், குறைப்பது ஆகும். மனத்தைக் கட்டுப்படுத்த முடியாததனால்தான் எல்லாத் துன்பங்களும் வருகின்றன என்று யோகி கூறுகிறான். இயற்கையிலிருந்து விடுதலை பெறுவதே யோகியின் இலட்சியம். இயற்கையை வெற்றி கொள்வதே அவனது பணி. "எல்லாச் சக்தியுமே ஆன்மாவில்தான் இருக்கிறது. மனத்தையும் உடலையும் கட்டுப்படுத்தி ஆன்மாவின் சக்தியைக் கொண்டு இயற்கையை ஒருவன் வெல்லலாம்" என்று யோகி கூறுகிறான்.

# கடையில் வாங்கிய வாழைப்பழத்தில் கொடிய சிலந்திகள்

## பிரிட்டனில் அதிர்ச்சிச் சம்பவம்



பிரிட்டனின் ஸ்டாபோர்ட்ஷயர் நகரில் வசித்துவரும் குடும்பம் ஒன்று, அருகில் உள்ள சிறிய கடையில் வாழைப்பழங்கள் வாங்கியுள்ளனர். வீட்டுக்கு வந்ததும் அந்தக் குடும்பத்தினர் பழங்கள் இருந்த அட்டைப் பெட்டியை பிரித்தனர். அப்போது பழத்தின்மீது வெள்ளை நிறத் திட்டுகள் இருந்ததைக் கண்ட அவர்கள், அவை ஏதோ பாதிப்பில்லாத அச்சுகள்என்று எண்ணிவிட்டனர். சிறிது நேரம் கழித்து அவற்றை உன்னிப்பாகப் பார்த்த போதுதான் அந்த பழங்களைச் சுற்றிலும் சிலந்தி வலை பின்னப்பட்டிருப்பதையும், நூற்றுக் கணக்கான சிலந்திகள் அந்த வலையில் இருப்பதையும் கண்டு அதிர்ந்துபோயினர். திடீரென அவை அனைத்தும் ஒன்றாக அசையத் தொடங்கியதும் திகில் படம் ஒன்றைப் பார்ப்பதைப் போல் உணர்ந்த அவர்கள் பதறி வீட்டைவிட்டு வெளியே ஓடினர். அதனை அடுத்து மிர்ரா். கோ என்ற பூச்சிக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் ஆலோசனைப்படி வீட்டைவிட்டு வெளியேறினர்.

அதன்பின்னர் அங்கு வந்த அந்த நிறுவனத்தினர் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தச் சிலந்திகளை அழித்தனர்.

இவை பிரேஸில் நாட்டைச் சேர்ந்த கொடிய அலையும் சிலந்திகள் வகையைச் சேர்ந்தவையாக இருக்கும் என்று அவர்கள் சந்தேகித்தனர். மிகவும் நச்சுத் தன்மை கொண்ட அந்த சிலந்திகளின் விஷம் ஒரு பாம்பினுடைய விஷத்தைவிட 30 மடங்கு அதிகம் என்று கூறப்படுகின்றது.

இந்த சிலந்திகள் கடித்தால் ஒழுங்கற்ற இதயத்துடிப்பு, உயர் குருதி அழுத்தம், வாந்தி போன்றவற்றுடன் இறுதியில் இறப்பும் ஏற்படக்கூடும் என்று மருத்துவத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

வீடு முழுமையாக சுத்தம் செய்யப்பட்டு மூன்று நாட்கள் கழிந்த பின்னரே அந்தக் குடும்பத்தினர் தங்கள் வீட்டுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | | 4 | 2 | 6 |
| | 2 | | 1 | | | | | 5 |
| | 3 | | 6 | 5 | 2 | 1 | 7 | |
| | 6 | | 2 | 4 | | | | |
| | | 3 | 5 | | 9 | 7 | | |
| | | | | 6 | 3 | | 4 | |
| | 7 | 5 | 3 | 2 | 6 | | 9 | |
| 8 | | | | | 7 | | 5 | |
| 3 | 4 | 6 | | | | | 1 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 2 | 7 | 9 | 8 | 4 | 6 | 3 |
| 7 | 6 | 8 | 4 | 2 | 3 | 5 | 1 | 9 |
| 9 | 4 | 3 | 1 | 6 | 5 | 8 | 2 | 7 |
| 4 | 7 | 9 | 2 | 5 | 6 | 3 | 8 | 1 |
| 3 | 2 | 6 | 9 | 8 | 1 | 7 | 4 | 5 |
| 5 | 8 | 1 | 3 | 7 | 4 | 6 | 9 | 2 |
| 8 | 3 | 7 | 6 | 1 | 9 | 2 | 5 | 4 |
| 6 | 1 | 4 | 5 | 3 | 2 | 9 | 7 | 8 |
| 2 | 9 | 5 | 8 | 4 | 7 | 1 | 3 | 6 |

## வார்த்தை



கவனக் குறைவான
வார்த்தை, சர்ச்சையில் முடியும்.
கடுமையான வார்த்தை,
வாழ்க்கையை முறிக்கும்.
கசப்பான வார்த்தை,
வெறுப்பை வளர்க்கும்.
கொடுமையான வார்த்தை,
துடித்துச் சாகடிக்கும்.
இனிமையான வார்த்தை,
நல வாழ்வைக் கொடுக்கும்.
சந்தோசமான வார்த்தை,
ஒளியைக் கொடுக்கும்.
நேரமறிந்து கூறும்
வார்த்தை, கடுமையைத்
தணிக்கும்.
அன்பான வார்த்தை
பாசத்தை வளர்க்கும்.

### சமூகச் சீர்கேட்டுக்கான காரணம்

# தகவல் தொழில்நுட்பமே



இன்றைய நவீன யுகத்தில் சமூகச் சீர்கேட்டுக்குக் காரணம் தகவல் தொழில்நுட்பம் தான் என்று கூற முடியும்.

இன்றைய இளைஞர்கள், யுவதிகள் அனைவரினதும் கைகளிலும் எந்நேரமும் செல்பேசி ஒலித்துக் கொண்டிருக்கும். வீட்டுக்கு வீடு வாசல்படி என்பது போல் இங்கு வீட்டுக்கு வீடு தொலைபேசி உண்டு. சில மாணவர்கள் பாடசாலை, தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவிகளை அவர்களுக்குத் தெரியாமலே கமராவில் படம் எடுப்பது மட்டுமன்றி அதை இணையத்தில் போட்டு பெண் பிள்ளைகளின் எதிர் காலத்தையே சீரழிக்கின்றனர்.

காலம் செல்லச் செல்ல பலவித தொலைபேசிகளின் வருகையால் மதி மயங்கி தங்கள் படிப்புக்களையும் இழக்கின்றனர்.


சில மாணவர்கள் மற்றவர்களுக்கு தொலைபேசி அலறும் சத்தம் கேட்கா வண்ணம் பெற்றோர்களை ஏமாற்றுவது மட்டுமல்லாமல், தம்மை தாமே ஏமாற்றுகிறோம் என்று புரியாமல் sms அனுப்புகின்றனர்.

முகம் தெரியாத தொலைபேசி அழைப்பில் அவர்கள் யார் என்பதை அறியாமல் காதல் கொள்வதும், பின்பு அவர்களின் சுயரூபம் தெரிந்ததும் அதிர்ச்சிக்குள்ளாவதும், உயிரை மாய்க்கத் துணிவதும் இன்றைய கால கட்டத்தில் நடக்கின்றது.

வெளிநாட்டிலிருக்கும் ஆண்கள் ஊரில் பெண் பார்ப்பதற்காக போட்டோ வேணுமெண்டால் உடனே அவர்களுக்கு இணையத்துக்கு போட்டோ போட வேணும். அதை நூறு விதமாகப் பார்த்து ஒவ்வொரு கேள்வி கேட்பார்கள். தாங்கள் அழகில்லா விட்டாலும் அவர்களுக்கு அழகான பெண் தேவை என்பதற்காக அனுப்பப்படும் போட்டோக்களைப் பார்த்து குறை சொல்வதும் நக்கலாகவும் பேசுவார்கள். இதனால் பெண் பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள். இந்தத் தகவல் தொழில் நுட்பத்தினால் எத்தனையோ குடும்பங்களும் பிரிந்திருக்கின்றன. ஆகவே இன்றைய உலகில் சமூகச் சீர்கேட்டுக்குக் காரணம் தகவல் தொழில் நுட்பமேயாகும்.

*கு.த.மினி, இணுவிலூர்.*

## விமர்சனம்



## சிந்திக்க... சிந்திக்க...

★ புகழ்ச்சியையும், அவமதிப்பையும் கருதாது என்றும் உண்மையை மேற்கொண்டு செய்யும் தியாகமே, சிறந்த தியாகம்.

★ தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அவனே வாழத் தகுதியுள்ளவன்.

★ நம்மை நாமே வெறுக்காமல் இருப்பது முதற்கடமை. முன்னேற்றமடைவதற்கு முதலில் சுயநம்பிக்கை அவசியம்.

★ உலக நன்மைக்காக அவசியமாயின் உங்களிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்யுங்கள். தூய்மை உடையவன் தான், நல்ல சிந்தனையாளனாக, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக ஆகிறான்.

★ உங்களை ஓர் ஏழை என்று எப்போதும் நினைக்காதீர்கள். பணம் சக்தியல்ல. பணம் ஒன்றே வாழ்வின் இலட்சியம் என்றால் அது தவறான வழியிலேதான் தேடப்படும்.

★ பணத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக ஒழுக்கத்தை விற்று விடாதே.

★ வேலை செய்யாமல் பிறரிடம் பணம் பெறுவது பிச்சை எடுப்பதற்கு சமம். எவ்விதமான வேலையும் இல்லாமல் இருப்பவனைப் பார்ப்பது கூட, நமக்குத் தீமையை உண்டாக்கும்.

★ பழிக்குப்பழி வாங்கியாக வேண்டும் என்ற எண்ணத்துடன் தண்டனை தரும் அதிகாரம் மனிதர் யாருக்கும் கிடையாது.

★ பிறர் குற்றங்களை மன்னிக்கும் உயர்ந்த குணம், குற்றமற்ற நல்லவர்களிடம் மட்டுமே இருக்கும்.

★ அகங்காரத்தைக் களைந்தால் நல்ல சிந்தனையும் பகுத்தறிவும் , ஞானமும் ஏற்படும்.



## கனவு

என் எண்ணற்ற
கனவுகளின்
வண்ணமா நீ
தினமும் வருவாய்
என ஏங்கும் உன்
விழிகளுக்கு காலைச்
சூரியனா - உன்
பார்வை பட்டவுடன் மலர்வதற்கு
நான் செந்தாமரையா
கண்களால் நீ கேட்ட
கேள்விகளுக்கு
மௌனம் கலந்த
என் சிரிப்பால் நான்
சொன்ன பதில்களின்
அர்த்தம்தான் என்ன
விளங்கவில்லை

*பி.நீரஜா.*




## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................

முகவரி :-..............................................


..............................................

.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அரவணைப்பு

நடக்கத் துடிக்கும்
கால்களாய் -
அரவணைப்பின்றி
நான் தத்தளித்த வேளை
என் அன்னையின்
அரவணைப்பில்
பாடசாலை
சென்றிருந்தேன்...
கடல் அலைகளுக்குக்
கரைகள் ஒன்றும்
தடைகளல்ல... என்று
துணிந்து சென்றேன்
பாடசாலை... அங்கு
அரவணைக்க
யார் வருவார்....? என
நான் ஏங்கி நின்ற வேளை
எனை ஆனந்த
அரவணைப்பில்
உபசரித்த என் ஆசான்
அ என்ற எழுத்துக்கு நான்
அடியெடுத்த நாள் முதல்
இன்று வரை கண்டதில்லை
பட்ட மரத்துக்கு
துளிர் கொடுத்த
ஆசானை...!
உம் அன்பில் நான்
கவிஞனானேன் - இன்று
என் கவிப் பயிருக்கு
உம் புன்னகை நீர்
ஊற்றுகின்றீர்
செழிப்புடனே மிளிர்கின்றது
என் கவி வரிகள்
ஒவ்வொன்றும்
பெண்ணின் வடிவங்கள்
அத்தனையும் சேர்த்து
வைத்த அதிசயமா....! நீர்
பாடசாலை விட்டும்
என் விழி தவிர்த்தும்
செல்லும் போது - உம்
அரவணைப்பின்றி நான்
நிற்கின்ற அந்தக்
கடைசி நிமிடம் கூட
எனக்கு மனவலிதான்
என் ஆசானே...!



*பு.திருச்செல்வி*
*A/L (2015)*
*கலை.மு/பாண்டியன்குளம்*
*மகாவித்தியாலயம்.*

## கிளைப் பொதுச் சபைக் கூட்டம்

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 204 ஆம் இலக்கக் கிளையின் கிளைக் குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி வளர்மதி சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற இருப்பதாகக் கூட்டுறவுப் பரிசோதகர் பொ.மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (வ-288)

◆ ◆ ◆

மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ.சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் க.திருநாவுக்கரசு தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-100)

## மெய்வன்மைப் போட்டிகள்

மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு செம்பியன் பற்று அ.த.க.பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கரவெட்டி - மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வை. செல்வராஜாவும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும் கலந்து கொள்ள வுள்ளனர். வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியாரான திருமதி திலகவதி செல்வராஜா வழங்குவார். (வ-173)

◆ ◆ ◆

புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் பொ.வரதகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக புத்தூர் மெதடிஸ்த மிஷன் தேவாலய போதகர் டேவிட் அழகராஜா, புத்தூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கோ. அனுதர்சன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

## சமய சந்நிதிகளில்

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். வானொலி புகழ் பிரபல பாடகர் வர்ண இராமேஸ்வரன் பக்கவாத்தியங்கள் சகிதம் பக்திப் பாடல்களை இந்த நிகழ்வில் இசைக்கவுள்ளார். (வ-173)


# மானிப்பாய் அரச மருத்துவமனையில் புதிய பொது மண்டபத்துக்கு அடிக்கல்

நவாலி, மார்ச் 13

மானிப்பாய் அரசினர் மருத்துவமனையில் பொதுமண்டபம் ஒன்றை அமைக்கும் பொருட்டு அதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்தப்பொது மண்டபமொன்றை அமைப்பதற்கு, மானிப்பாயைச் சேர்ந்த பொறியியலாளரும், கொடை வள்ளலுமாகிய இரத்தினம் செல்வ நாயகம் ஒரு லட்சம் ரூபா நிதியை மருத்துவமனையின் நலன்புரி சங்கத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த மருத்துவமனையில் மாதாந்த மருத்துவ சோதனைக்காக வரும் கர்ப்பிணிப் பெண்களும், பாலூட்டும் தாய்மார்களும், குழந்தைகள் மற்றும் பெண்ணியல் நோயாளர்களும் அமர்வதற்கு இடமில்லாத நிலையில் நீண்ட காலமாகப் பெரும் இன்னல் களை நோயாளர் எதிர் கொண்டு வந்தனர்.



அடிக் கல் நடும் நிகழ்வின் போது.

இதனை அவதானித்த மருத்துவமனையின் நலன்புரி சங்கத்தினர் துண்டுப் பிரசுரம் மூலமாகப் பொது மக்களிடம் நிதி உதவி கோரியிருந்தனர். இதற்கமைய கடந்த வாரம் செல்வநாயகம் தாமாக முன் வந்து இந்த நிதியைக் கையளித்துள்ளார்.

இந்த நிதியைக் கொண்டு கட்டடம் அமைப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் அடிக்கல் நடப்பட்டது.

பொது மண்டபத்துக்கான அடிக்கல்லை நிதி அன்பளிப்புச் செய்தவர் நட்டு வைத்தார். இந்த நிகழ்வில் மருத்துவமனையின் பொறுப்பதிகாரி மருத்துவர் ஆ.காந்தநேசன் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலர்கலந்துகொண்டனர். (க-100)

## கட்டாக்காலிகளால் மீண்டும் தொல்லை

### ஆனைக்கோட்டை மக்கள் கவலை

ஆனைக்கோட்டை நவாலிப் பகுதிகளில் கட்டாக்காலி ஆடு மாடுகளின் தொல்லை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

பெரும்போக நெற் செய்கையையொட்டி கட்டி வைத்து வளர்க்கப்பட்ட ஆடு, மாடுகள் அறுவடை முடிந்ததால் மீண்டும் கட்டாக் காலிகளாக விடப்பட்டுள்ளன.

இவை அத்துமீறி காணிகளுக்குள் புகுந்து பயிர்களை அழித்து வருவதுடன் கடைகளில் தொங்கும் வாழைக் குலைகள், மரக்கறி வகைகள் என்பவற்றையும் நாசம் செய்கின்றன.

மேலும் வீதியோரங்களிலும் வீட்டு முற்றங்களிலும் வெய்யிலில் உலர விடப்படும் அறுவடை செய்த நெல் மணிகளையும் இவை உண்பதுடன் மட்டுமல்லாது சேதப்படுத்தி வருவதாகவும் மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க-100)

## இலவச கருத்தரங்கு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் கலைப் பிரிவு மாணவர்களுக்கான தமிழ்ப் பாடத்துக்குரிய கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை மீசாலை உயர்கலைக் கல்லூரியில் இடம்பெறும். இந்தக் கருத்தரங் கில் தகுதியான மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் இயக்குநர் சு.வீரசுதாகரன் அறிவித்துள்ளார். மீசாலை உயர் கலைக் கல்லூரியினர் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் கலை, வர்த்தக, விஞ்ஞான, கணிதப் பிரிவு மாணவர்களுக்கு மாதாந்தம் பௌர்ணமி தினத்தன்று இலவச கருத்தரங் குகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## பொது மண்டப திறப்பு விழா சனியன்று

நாவற்குழியில் சாவகச்சேரி பிரதேச சபை உப பணிமனை வளாகத்தில் பொது மண்டபம் ஒன்று நாளைமறுதினம் 15 ஆம்திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

நாவற்குழி மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றும் முகமாக அமரர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் ஞாபகார்த்தமாக அவர்களின் பிள்ளைகளால் இந்தமண்டபம்அமைக்கப்பட்டுள்ளது.

கந்தையா - கனகம்மா நினைவு நிதியத்தின் காப்பாளரான க.மயில்வாகனம் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் சி.துரைராஜா முதன்மைவிருந்தினராகக் கலந்து கொள்வார். (க)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

இராஜகுமார் ரவிராஜ்



அன்னையின் மடியில்
12★05★1989

ஆண்டவன் அடியில்
22★02★2013

கூடு கட்டி வாழ்ந்திருந்தோம் கூடு கலைந்ததல்லவோ- எம்
கூடு கலைந்ததினால்- எம் வாழ்வும் கலைந்ததையா-நீ
வருவாய் எனப் பார்த்திருந்தோம் வேரோடு விழ வைத்து
எங்குதான் சென்றாயோ! விடியாத விடியல்களாய்
தினமும் தேடுகின்றோம். பத்து மாதம் சுமந்து! வயிறு
பற்றி எரிய வைத்து! பாரினிலே எம்மை
பரதேசிகளாக அலைய வைத்து எங்குதான் சென்றாயோ- ஏன்
இந்த மௌனம் எழுந்தோடி வாராய் கண்ணே!
ஒன்றல்ல ஓராயிரம் ஆண்டுகளானாலும் மறந்திடுமோ
உன் நினைவு

சிறுவிளான்,
இளவாலை.

(45626)(3.6.4)

உன் பிரிவால் வாடும்
பாசமுள்ள அம்மா, அண்ணா, தம்பி.

## மரண அறிவித்தல்

திருமதி முத்துப்பிள்ளை சின்னத்துரை



ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துப்பிள்ளை சின்னத்துரை நேற்று (12.03.2014) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திருமதி கனகம்மா பரமசாமி, சுப்பிர மணியம், நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரி யும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், நித்தியானந்த ராஜா, ஞானாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயும், ஜடேந்திர தேவன், நகுலேஸ்வரி ஆகியோரின் மாமியும், ஜெயராம், கஜனி, சரணியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஞானநிதி'
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

(45680)(45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 1948.08.17 — மறைவு 2014.02.20

கடந்த 20.02.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை(14.03.2014) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்லத்துரை
அழகராசா

குடும்பத்தினர்.
சத்தியதாசன் — றஞ்சனா,
சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். 077 711 1088

(45500)(12.3.6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

பொன்னுத்தம்பையா

[விசுவலிங்கம்]


கடந்த 11.02.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (13.03.2014) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்தும் மற்றும் உடன் வந்து உதவிகள் புரிந்து ஆறுதல்கள் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இல.706, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.


குடும்பத்தினர்.
த. செல்வநாயகம் (மகன்).

(45669)(12.6.3)



உதயன் குழுமத் தலைவர் ஈ. சரவணபவன் வெற்றியாளரான விநோதன் சுகந்தனுக்குப் பரிசுக் கூப்பனை வழங்குகிறார்.







ஸ்ரீதரன் நிலோஜினி, ஜோதிராசா பிரதீப் ஆகியோருக்கு உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் பரிசுக் கூப்பனை வழங்கிய போது...



கோகில் பேபி நீட்ஸ் உரிமையாளர் செல்லத்துரை அருந்தவ நாதனிடம் இருந்து வெற்றியாளர் ஒருவர் பரிசு பெறுகிறார்.







ரகுநாதன் தீபா, பரநிருபசிங்கம் அருள்தாசன், சிவமணி நாகமுத்து ஆகியோருக்கு கிறீன் கிராஸ் பிரதிநிதி பு.பிரசாந்தன் பரிசில்களை வழங்கினார்.



தி.அஜந்தனா உதயன் நிறுவனத் தின் கணக்காளர் எ.கனகசபை யிடம் இருந்து பரிசுக்கூப் பனை பெற்றுக் கொண்டார்.





சுதாகர் தனுசியா, க.புனிதவதி ஆகியோருக்கு உதயன் பணிமனையின் பொதுத் தொடர்பு முகாமையாளர் திருமதி. என்.தங்கராசா பரிசுக் கூப்பனை வழங்கியபோது.





நாகரத்தினம் சுகிதா, வளர்மதி மகவதாஸ் ஆகியோர் லலிதா ஜுவல்லரி முகாமையாளர் பொ.சுரேஸ்குமாரிடம் பரிசுக் கூப்பன்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

# மூன்றாவது வாரப் பரிசு மழையில் நேற்று நனைந்த வெற்றியாளர்கள்

யாழ்ப்பாணம், மார்ச், 13
சூரியகாந்தியின் கொண்டாட்டங்கள் குதூகலியுங்கள் பரிசு மழையில் 02.03.2014 ஆம் திகதி வெற்றியாளர்களுக்கான பரிசுக் கூப்பன் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை உதயன் பணி மனையில்நடைபெற்றது.
உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐம்பது வெற்றியாளர்களுக்கு பரிசுக் கூப்பன்கள் வழங்கப்பட்டன.
வெற்றி பெற்றவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;
எப்படியாவது பரிசை வெல்ல வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாக இந்தப் போட்டி அமைகின்றது.
மாணவர்களுக்கு இது ஒரு அரிய சந்தர்ப்பமாகக் கருதினாலும் மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து வயதினரையும் இந்தப்போட்டி ஈர்த்துள்ளது.
இணையத்தளத்தை விட்டு பத்திரிகைக்குள் நுழைவதற்கு சூரியகாந்தி வழி வகுக்கின்றது.
இவ்வாறான போட்டிகள் இனி வரும்காலங்களிலும் நடைபெற வேண்டும் என்றனர். பரிசுக் கூப்பனில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் பொருள்களை கொள்வனவு செய்ய முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 13
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கு நிலவும் பற்றாக் குறையால் அங்குள்ள மருத் துவ மனைகள் மூடப்பட்டுவரு கின்றன.
ஆனால் உள்ளகப் பயிற்சிகளை முடித்துள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்களுக்கு அரசு நியமனங்களை வழங்கவில்லை என்று அரச வைத்திய அதிகாரி களின் சங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.
உள்ளகப் பயிற்சிகளை பூர்த்தி செய்த 1,100 மருத்துவர்களுக்கு அரச சேவைகள் ஆணைக்குழு இதுவரை நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நவீன் டி சொய்சா தெரிவித்தார். ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் பயின்ற மாணவர்கள் உள்ளகப் பயிற்சிகளை பூர்த்தி செய்யவில்லை என்று அரச சேவைகள் ஆணைக்குழு தெரிவித்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

**1,100 மருத்துவர்களுக்கு அரச சேவைகள் ஆணைக்குழு இதுவரை நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை.**

இந்த மருத்துவர்கள் கடந்த டிசெம்பர் மாதம் உள்ளகப் பயிற்சிகளை பூர்த்தி செய்துள்ளனர். எனினும் அரச சேவைகள் ஆணைக்குழு நியமனங்களை வழங்காதுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
1,100 மருத்துவர்களில் 400 பேரை வடக்கு, கிழக்கில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நியமிக்க முடியும். இடமாற்றங்களால் ஏற்படும் வெற்றிடங்களையும் நிரப்ப முடியும் என்று அவர் தெரிவித்தார்.
இந்த விடயத்தில் சட்டமா அதிபர் தலையிட்டு பயிற்சிகளை முடித்த மருத்துவர்களுக்கு நியமனங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

# போலி விசா தயாரித்த பெண் மாட்டினார்

கொழும்பு,மார்ச் 13
இந்தியாவைச் சேர்ந்த 6 பேருக்கு, இலங்கையில் தொழில் புரிவதற்கான போலி விசாக்களைத் தயாரித்து வழங்கிய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 6 இந்தியர்களும், செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்க் விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர்என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து அவர்கள் இலங்கையில் தொழில் புரிவதற்காகவே போலி விசாக்கள் தயாரிக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.
அதனையடுத்து அவர்களுக்கு போலி விசாக்களைத் தயாரித்து வழங்கியபெண்ணை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ச)

**உப ஒப்பந்தகாரர் தேவை**

உப ஒப்பந்தகாரர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

- அலுமினிய பொருத்து வேலை
- மின் இணைப்பு வேலை
- கூரை வேலை, சீலிங் வேலை
- அத்திபார மண் விநியோகஸ்தர்கள்

தகுதியுள்ளவர்கள் 18.03.2014ஆம் திகதிக்கு முன்னதாக நேரில் தொடர்புகொள்ளவும்.

**RBL**
**கரந்தன் வீதி, ஊரெழு.**
**தொ.இல: 021 222 6239**

(சி12678)(12.3.6)



**மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தானம்**
**விஜய வருஷ பங்குனித் திங்கள்**
**உற்சவகால கடைகள் பற்றிய அறிவித்தல்**

மேற்படி ஆலயத்தில் 15.03.2014 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கடைகள் ஏலத்தில் வழங்கப்படும். கடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் முழுப்பணத்தையும் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

சிவ.பஞ்சாட்சரம்
தர்மகர்த்தா

(45687)(7.6.3)

# தமிழ் என்ற சொல்லை அகற்றுவதை ஏற்றுக் கொள்ள மாட்டோம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு.மார்ச் 13

கொழும்பு தமிழ்ச் சங்க ஒழுங்கை என்ற வீதிப் பெயரில் உள்ள தமிழ் என்ற சொற் பதத்தை அகற்றுவதை ஏற் றுக்கொள்ள மாட்டோம். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித் தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கி யப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று செவ்வாய்க் கிழமை கொழும்பில் இடம் பெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற் றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.



மனோ கணேசன்

**தமிழ் பேசும் மக் களை பிரதி நிதித் துவம் செய்யும் கட்சிகள் தமது மக்கள் தொடர் பாக சுயாதீனமாக செயற்படு வதை அரசு விரும்புவதில்லை.**

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மொழி இந்த நாட்டு தமிழ் பேசும் மக்களின் தாய் மொழி. எங்கள் இன அடை யாளமும் அதுதான். கொழும்பில் 70 வருட கலாசார பெருமை கொண்ட தமிழ்ச் சங் கத்தை கௌரவிக்கும் முகமா கவே மாநகர சபையில் தமிழ்ச் சங்க ஒழுங்கை எனப் பெய ரிடும் பிரேரணையை, எனது ஒப்புதலுடன் நமது சிரேஷ்ட உப தலைவர் வேலணை வேணியன் கொண்டு வந்தார்.

முறைப்படி ஏகமன தாக நிறைவேற்றப் பட்டு, அரச வர்த்த மானியில் பிரசுரிக்கப் பட்ட இந்த பிரேரணை யில் இப்போது தமிழ் என்ற சொல்லை அகற்றி திருத்தம் கொண்ட வர அரசு எத்தனிக்கின்றது.

பௌத்தம் என்ற பெயர் வேண்டாம் என்று சொல்ல நாங் கள் இன, மதவாதிகள் அல்ல.

இந்த அரசு ஒரு இன, மதவாத அரசு. அர சின் இனவாத-மத வாத முகத்தை முக மூடி அணிவித்து காப் பாற்ற முயல வேண் டாம் என்று அரசில் உள்ள இடதுசாரி, தமிழ், முஸ்லிம் கட்சி களைக் கேட்டுக்கொள் கிறேன்.

தமிழ் பேசும் மக் களைப் பிரதிநிதித்து வம் செய்யும் கட்சிகள் தமது மக்கள் தொடர் பாக சுயாதீனமாக செயற்படுவதை அரசு விரும்புவதில்லை.

சிறுபான்மைக் கட்சி களை, அரசின் அர சியல் நோக்கங்களை நிறை வேற்ற மட் டுமே பயன்படுத்த மஹிந்த அரசு முயற் சிக்கிறது.

அதனால்தான் தேர் தல்களில் அரசின் பங் காளிகளான சிறுபான் மைக்கட்சிகளை தமது சொந்தச் சின்னங் களில் போட்டியிட வைத்து தமிழ், முஸ் லிம் வாக்குகளை சித றடிக்க அரசு முயலு கிறது-என்றார். (ச)




‘சாயியே சரணம்’

(பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர்)



இந்த வார இதழில்...

‘சுடர்ஒளி’

- நிறம் மாறாத முட்கள்
- நீதியின் பிள்ளை
- நிராகரிக்கப்படும் ஆலோசனைகள்
- மலேசியா விமான மாயம் என்ன?
- காதல் பேசுவோம்



மலையின் நகர்வு



சுதந்திர வேட்கை (தொடர்)

இன்னும் பல.....


22 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்



தோற்றம் 10.05.1926

மறைவு 15.03.1992

திதி:- 13.03.2014

எம்மை விட்டுப் பிரிந்து
இருபத்திரண்டு ஆண்டுகள்
சென்றாலும் பப்பா!
உங்கள் நினைவுகளோ
எங்களை வாட்டுகிறது.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (45684)(2.6.3)

# ரணில் ஓர் அப்பாவி நாமல் தெரிவிப்பு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஓர் அப்பாவி, அவர் மீது எப் போது தாக்குதல் நடத்துவார்கள் என்பது தெரியாது. அதனால் நாடாளு மன் றத்திலும் அவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். இலங்கையில் தினமும் குண்டு வெடிக்க இடமளித்து அழிவுகளுக்கு இடம் கொடுத்திருந்தால், அமெரிக்காவும் பிரிட்டனும் இலங்கைக்கு எதிராக செயற்படாது என்று அவர் கூறினார்.

நாட்டை அபிவிருத்தி செய்ததே ஜனாதிபதி செய்த தவறாகக் கருதி அவரை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல முயற்சித்து வருகின்றனர் என்று அவர் தெரிவித்தார். (ச)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேசசபை ஊழியர்

மருசலீன் மனோகரன் அவர்களின் தந்தை

மனுவல் மருசலீன்

நேற்று 12.03.2014 இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி12676) (12.3.6)

ஊர்காவற்றுறைப் பிரதேசசபை ஊழியர் நலன்புரி சங்கம்.

## மரண அறிவித்தல்

மனுவல் மருசலீன்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் ஊர் காவற்றுறை, மண்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவல் மருசலீன் நேற்று (12.03.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சந்தன மேரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சூசைநாயகம் மற் றும் மனோகரன் (ரவி-ஊர்காவற்றுறை பிரதேச சபை), சகாயமேரி (சறோ-ஊர்காவற்றுறை பல.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அல்போன்ஸியம்மா, ஜெயமலர், அன்ரன் (அல்லைப்பிட்டி அஞ்சல் அலுவல கம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.03.2014) வியாழக் கிழமை ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்குழி வீதி,
ஊர்காவற்றுறை. (45683)(7.6.3)

தகவல் :
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி பராசக்தி கந்தசாமி

தோற்றம்: 04.10.1935 மறைவு: 22.02.2013

திதி: 13.03.2014

அம்மா இன்று இல்லை எம்மோடு
நினைக்கையிலே நெஞ்சு பதைக்கிறதே
இறைவன் படைத்த உறவுகளுள் இணையற்றது
அம்மா எனும் உறவு
ஆண்டொன்று ஆனதம்மா, ஆறிடுமோ எம் துயரம்
ஜென்மங்கள் என்பது உண்டானால்
மீண்டும் எம் அம்மாவே எமக்கு வேண்டும்

சாமியன் அரசடி,
மில்லியன் தோட்டம்,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

(33401)(10.6.3)

## தவறிவிட்டது

அண்ணாசிலையடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி யைச் சேர்ந்த தெய்வேந்திரம் சுகுமார் என்பவருடைய கறுத்த பேசுடன் அடையாள அட்டை (822014216V), இன்சூரன்ஸ் அட்டை, ரக்ஸ்அட்டை, வாகன வரிப்பதிரம் ATM காட் (Bank of Ceylon) இவற்றுடன் கறுத்த பாக்குக்குள் உள்ள உடுப்பு, மேசன் கரண்டி என்பன மாலிசந்தியி லிருந்து அல்வாய் போகும் பாதையில் 1km இக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப் பிட்ட முகவரிக்கு கடிதம் மூலமோ அல்லது இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்திடமோ ஒப்படைக்கவும். தொடர்பு: (18)

077 400 6316, 077 605 7040

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பாதுகாப்பு ஊழியர்

**நவரட்ணம் இராஜமோகன்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டுப் பேரதிர்ச்சியடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி காசிப்பிள்ளை



பத்தமேனி, வைரவர்கோயிலடி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி காசிப்பிள்ளை நேற்று (12.03.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு-சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், தம்பு காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், தணிகாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராசலட்சுமி, தர்மராணி ஆகியோரின் மைத்துனியும், விஜயகுமாரி, விஜயகுமார் (கனடா), காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சாந்தகுமாரி, சாந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும், மகேஸ்வரன், தவராஜினி, தர்மபாஸ் கரன், றஜித்தா ஆகியோரின் அன்புமாமியும், பகீரதன், சர்வின், பர்மிலா, டைஷிகா, கோகுலன், தர்ஷனா, கஜாழினி, சாருஜன், மிசாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கவினாஷ், விபிஷன், கபிஷா, கிஷாந், யதுஷா, கீதப்பிரியா, அருட்குமார் (லண்டன்), கபிலன் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2014) வெள்ளிக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குள இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.
T.P: 077 615 4668
(45703) (10)
தகவல்: குடும்பத்தினர்.


## 29 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்

**துரைசிங்கம் சரவணன்துரை**

(அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன்)





தாயின் மடியில்
27*04*1971

ஆண்டவன் அடியில்
13*03*1985

பால் வடியும் முகம் பார்வையிலே பாசம்
இனிமையான பேச்சு ஏன் எமக்கு கேட்பதில்லை
அன்பு மகனே! ஆசையுடன் காத்திருப்போம்
காட்டுமலைக் கந்தன் கழலினை சேர்ந்தனையோ
ஆண்டு இருபத்தொன்பதென்ன நெஞ்சிருக்குவரை.....

.... நினைவுடனே
அப்பா, அம்மா,
பெரியம்மா குடும்பத்தினர்.

(C/12679)(2.6)

திருச்செந்தூர்,
நாவற்காடு, அச்சுவேலி.

# 18 ஆண்டுகள் ஆயுள் தண்டனை

*ஈழத் தமிழ்ப் பெண்ணைக் கொன்றவருக்கு*

லண்டன், மார்ச் 13

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரிய இலங்கைப் பெண்ணை குத்திக் கொலை செய்த இந்திய தமிழ் இளைஞருக்குப் பிரிட்டன் நீதிமன்றம் 18 ஆண்டுகால ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியிருந்த மயூரதி பேரின்பமூர்த்தி (வயது - 32) என்ற இளம் குடும்பப் பெண் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார். அந்தக் கொலையுடன் தொடர்புடைய வேலுச் சாமி கோபிநாத் என்ற குறித்த இளைஞர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தார். அவர் மீதான வழக்கு விசாரணையில் கோபிநாத்தை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் அவருக்கு 18 ஆண்டுகால ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது.

கோபிநாத் பொலிஸ் விசாரணையில், "இந்தப் பூமியில் வாழ்வதற்கு சில மனிதர்களுக்கு தகுதி இல்லை" என்று தெரிவித்திருந்தார். அத்துடன் உறவு தொடர்பான பிறழ்வே இந்தக் கொலைக்கு காரணம் என்று விசாரணையில் தெரிய வந்ததாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

ஆனால் அவ்வாறு தவறான உறவு எதுவுமில்லை என்றும், தனது மகளின் குடியிருப்பில் வசித்து வந்தவரும் மகளின் நண்பருமான ராஜ் என்பவரின் நண்பரே கொலையாளி கோபிநாத் என்றும் உயிரிழந்த மயூரதியின் தந்தை என்று அறிமுகப்படுத்திக் கொண்டவர் தெரிவித்ததாகவும் மயூரதி இறுதிப் போரின் போது காணாமற் போயிருந்தார் என்றும் பின்னர் திடீரென லண்டனில் இருந்து தம்மைத் தொடர்பு கொண்டார் என்றும் அவர் மேலும் கூறினார். (வ-5)

## கிளிநொச்சியின் கிராமங்கள் குடிதண்ணீர் தட்டுப்பாட்டில்

*மழை பொய்த்ததால் அவலநிலை*

கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் வறட்சி காரணமாகக் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அக்கராயன், கோணாவில் ஆகிய கிராமங்களில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பூநகரியின் கறுக்காய்த் தீவு, செட்டியகுறிச்சி, ஞானிமடம், சித்தன்குறிச்சி, மட்டுவில் நாடு கிழக்கு, தம்பிராய் உட்படப் பல கிராமங்களிலும் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு காணப்படுகின்றது.

கண்டாவளையில் உள்ள ஊரியான், உமையாள்புரம், தட்டு வன்கொட்டி, கல்லாறு ஆகிய கிராமங்களும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுத்து வருகின்றன.

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள சிறிய குளங்களின் நீர் முற்றாக வற்றியுள்ளதால் கிணறுகளிலும் நீர் இல்லாத நிலை காணப்படுவதால் தண்ணீருக்கு மக்கள் அலைந்து திரிவதைக் காண முடிகின்றது. (கு-18)

## அதிபர்களுக்கான கூட்டம் இன்று

தென்மராட்சி, மார்ச் 13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வலய கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார். (வ-9)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

**மகேஸ்வரி இராஜலிங்கம்**

தோற்றம்
14.12.1948

மறைவு
11.02.2014

நாள்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
மறைந்திடுமோ உன் நினைவு பரிதவிக்கும் எம் நெஞ்சம்
உன் புன் சிரிப்பைக்காண விழியோரக் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

குடும்பத்தினர்.
சகோதரி-
த.பரமேஸ்வரி (தயா)

47, மணிக்கூட்டு ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம். (45689) (5.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சிவஸ்ரீ

**பஞ்சாட்சர ஐயர் சோமசேகரசர்மா**

(இளைப்பாறிய அரச அலுவலகர், கச்சேரி, யாழ்ப்பாணம்)



தோற்றம் : 13.09.1935
மறைவு : 22.02.2013

அன்பின் திருவுருவாய்,
வாழ்க்கையில் பல சவால்களை
தைரியத்துடன் எதிர்கொண்டு
எம் அனைவருக்கும்
முன்மாதிரியாக வாழ்ந்த அப்பாவே!
வருடங்கள் ஒன்றானால் என்ன,
நூறானால் என்ன,-அவனியிலே
நாமிருக்கும் வரை
உங்கள் நினைவோடு வாழ்வோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நீங்கா நினைவுடன்,


(C/12677)(10.6.3)

தாவடி, கொக்குவில்.
021 222 5970

மனைவி, மகன்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா அமிர்தலிங்கம்



எழுவைதீவைப் பிறப்பிடமாகவும், நயினாதீவு யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமாகிய செல்லப்பா அமிர்தலிங்கம் நேற்று (11.03.2014) கனடாவில் காலமானார்.

அன்னார் முருகேசுவின் மருமகனும் தில்லைநாயகியின் அன்புக் கணவரும் வசி (கனடா), கரன், சிவா (கனடா), தர்சினி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
கரன் (மகன்). 077 7479004

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நடராஜா



அளவெட்டி, பெத்தாவளையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி, மாரியிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராஜா நேற்று முன்தினம் (11.03.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பையா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், நாகம்மாவின் அருமைக் கணவரும், ரம்ஜா, ரஜீத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவகரனின் அன்பு மாமனும், இராசம்மா, காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் சிந்தாமணி (பிரான்ஸ்), மகேந்திரராசா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் நல்லசேகரம்பிள்ளை (கனடா), மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தில்லைநாதன் (பிரான்ஸ்), குகதாசன் (பிரான்ஸ்), பாலச்ச்ந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், பரண்யா, தேனுஜன், பாசுரபா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.
(45690) (10.6)
தகவல்: குடும்பத்தினர்.

# வேண்டுதலை முன்வைக்க கதிர்காமத்தில் வேட்பாளர்கள்

கொழும்பு,மார்ச் 12

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்நோக்கியுள்ள இந்த நாள்களில் மக்கள் விடுதலை முன்னணியைத் தவிர்ந்த ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளையும் சேர்ந்த வேட்பாளர்களை கதிர்காமம் முருகன் ஆலயத்தில் காண முடிகிறது.



கதிர்காமம் முருகன் ஆலயம்

தமது ஆதரவாளர்களுடன் அங்கு வரும் அவர்கள் காவடி எடுத்தும், காணிக்கை செலுத்தியும் கதிர்காமக்கந்தனுக்கு தமது தேர்தல் வெற்றிக்கான வேண்டுதல்களை நிறைவேற்றுவதைக் காணமுடிகிறது.

தினமும் அதிகாலை பூசை நேரத்தில் யாராவது அரசியல்வாதி ஒருவராவது கதிர்காமம் ஆலயத்துக்கு வருவது இந்த நாள்களில் வழமையான காட்சியாகவுள்ளது. (ச-22)

# பாணின் நிறையை குறைக்க முடிவு

## அரசிடம் அனுமதி கேட்டு நிற்கிறது பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

கொழும்பு,மார்ச் 13

450 கிராம் நிறை கொண்ட பாண் ஒன்றின் நிறையை 400 கிராம்களாகக் குறைப்பதென அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஒரு பாணின் அங்கீகரிக்கப்பட்ட நிறை 450 கிராம். எனினும் முன்னணியிலுள்ள பேக்கரிகளைத் தவிர்ந்த நடுத்தர மற்றும் சிறுதர பேக்கரிகள் அனைத்திலும் உற்பத்தி செய்யப்படும் ஒரு பாணின் சாதாரண நிறை 450 கிராமுக்குக் குறைந்தே காணப்படுகிறது.

அதனையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் தலைவர் எம்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

பாண் ஒன்றின் அங்கீகரிக்கப்பட்ட நிறையை 400 கிராம் என்று நிர்ணயித்துவிட்டால் அத்தகைய பாணை 50 ரூபாவாக விற்பனை செய்ய முடியும் என்று அவர் கூறினார்.

எமது சங்கத்தின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அரசின் அனுமதியைக் கோரியுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்சன் பெர்னாண்டோவுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளோம் என்று அவர் குறிப்பிட்டார். (ச-22)



அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குறித்த கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் வீரசிங்க பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான பி. தயாரட்ன, ஏ. எல். எம். அதாவுல்லா, பிரதி அமைச்சர் சரத் வீரசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரிஸ், கிழக்கு மாகாண ஆளுநர் ரியர்அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம, மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# தங்கவேலி 16 ஆம் திகதி திறப்பு

சிவனொளிபாத மலையில் புனித திருப்பாதங்கள் அமைந்துள்ள இடத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் தங்கவேலி எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட வுள்ளது.

தங்கவேலியை நிர்மாணிக்க தங்கமுலாம் பூசப்பட்ட தூண்கள் மற்றும் ஏனைய மூலப்பொருள்களை நல்ல தண்ணி என்ற இடத்தில் உள்ள பௌத்த விகாரையில் இருந்து சிவனொளிபாத மலைக்கு எடுத்துச் செல்வதற்கு யாத்திரிகர்கள், பொலிஸார் ஆகியோர் பங்களிப்பு வழங்கியுள்ளனர். (ச-22)

# இரு மார்க்கங்களுக்கும் ஒரே கட்டணம் அறவிடத் தீர்மானம்

கொழும்பு,மார்ச் 13

அதிவேக வீதிகளின் பஸ் போக்குவரத்துக் கட்டணத்தை ஓர் ஒழுங்கு முறையில் செயற்படுத்த இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

அதற்கமைய மஹரகம - காலி மற்றும் கடுவலை - காலி ஆகிய பயண மார்க்கங்களுக்கு 420 ரூபாவை கட்டணமாக அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சபையின் உப தலைவர் எல்.ஏ. விமலரத்ன குறிப்பிட்டார்.

கடுவலை அதிவேக வீதி திறக்கப்பட்ட பின் மஹரகம - மாத்தறை, கடுவலை - மாத்தறைக்கு 500 ரூபா அறவிட போக்குவரத்து சபை தீர்மானித்திருந்தது.

எனினும் வீதியின் தூரத்தைக் கருத்தில் கொண்டு முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை அடுத்து, இரு பயண மார்க்கங்களுக்கும் ஒரே அளவான கட்டணத்தை அறவிடுவதெனத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

# மேல் மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரின் மகன் மீது கத்திக்குத்து

கொழும்பு,மார்ச் 13

மேல் மாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரது மகன் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாணசபை வேட்பாளருமான கித்சிறி கஹட்டபிட்டியவின் மகன் மீதே இவ்விதம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் ஹொரணை, அங்குருவாதொட்டவில் நடைபெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காயமடைந்த குறித்த நபர் ஹொரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# அடையாளப் பணி நிறுத்தத்துக்கு மாவட்ட வைத்தியர்கள் அறிவிப்பு

## மாகாண சுகாதார அமைச்சருக்கு அது பற்றித் தகவல் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச், 13

யாழ். குடாநாட்டில் உள்ள ஆதார வைத்தியசாலைகள் மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் நாளை அரை நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யப்போகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தப் போராட்டம் குறித்துத் தனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்கிறார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் சத்தியலிங்கம்.

வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை பணிப்புறக்கணிப்பு நடக்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். பிராந்திய கிளையைச் சேர்ந்த மருத்துவர்களால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகின்றது.

சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் சுகாதாரப் பரிசோதகரால் மிரட்டப்பட்டார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரியே மருத்துவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடப் போகிறார்கள் என்று கூறியுள்ளனர்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமாரை மிரட்டியமை மற்றும் முறைகேடான நடத்தை போன்றவற்றுக்காக வலி. வடக்கு சுகாதாரப் பரிசோதகர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் பிரதேச சபைகளின் கீழ் உள்ள பொது சுகாதாரப் பரிசோதகர்களை சுகாதாரத் திணைக்களத்துக்கு உள்வாங்க வேண்டும் என்பதுமே தமது போராட்டத்துக்கான கோரிக்கை என்று மருத்துவ அதிகாரிகளின் சங்க அறிக்கை கூறுகின்றது.

பொதுச் சுகாதார அதிகாரியால் மிரட்டப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மருத்துவர் நந்தகுமார் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். பின்னர் பொலிஸார் முன்னிலையில் இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்கின்றனர் என்று இருவரும் கையெழுத்திட்டு இணங்கிச் சென்றுள்ளனர். ஆனால் அதன் பின்னர் வடக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக, இந்தப் பிரச்சினை - பொலிஸ் நிலையத்தில் இணங்கிச் சென்ற பின்னரும் - நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப் பட்டபோது மருத்துவர் நந்தகுமார் முன்னிலையாகி இருக்கவில்லை. வழக்காளி இல்லாத நிலையில் வழக்கை எப்படி நடத்துவது என்று கேள்வி எழுப்பிய நீதிவான், பொதுச் சுகாதார அதிகாரியைப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் வழக்காளியை அடுத்த தவணைக்கு நீதிமன்றில் முன்னிலையாகக் கட்டளையிட்டார்.

மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கவனம் ஈர்க்கப்பட்டதை அடுத்தே தாம் இந்த வழக்கை நீதிமன்றத்தின் முன் கொண்டு வந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையே, இருவருக்கும் இடைப்பட்ட இந்தத் தனிப்பட்ட விவகாரம் நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கத் தக்கதாக, பொதுச் சுகாதார அதிகாரியின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச சபைகளின் கீழ் உள்ள பொதுச் சுகாதார அதிகாரிகளை சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வருமாறும் கோரி தாம் பணி நிறுத்தம் செய்கிறார்கள் என்று யாழ். மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரிகளாக இருக்கும் 12 பேர் அறிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாகவே தற்போது ஆதார மற்றும் மாவட்ட வைத்திய சாலை மருத்துவர்களும் அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, பொதுசுகாதார பரிசோதகர்களை சுகாதாரத் திணைக்களத்தினுள் விடுவிக்குமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது- என்றார்.

"பொதுசுகாதார பரிசோதகர்களை பிரதேச சபையிலிருந்து விடுவிக்குமாறு கூறியுள்ளதோடு பொது சுகாதாரப் பரிசோதகர் மீதான ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ள குழுவும் அமைக்கப்பட்டுவிட்டது. அது தன் பணியைச் செய்யும் என்று கருதுகிறேன். மருத்துவர்களின் போராட்டம் தொடர்பில் தனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை" என்றார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். மாவட்டக் கிளை நேற்று விடுத்த அறிக்கையில், மருத்துவர் நந்தகுமார் மிரட்டப்பட்டதான தனிப்பட்ட பிரச்சினைக்கும் பொது சுகாதார அதிகாரிகளை பிரதேச சபைகளில் இருந்து விடுவிக்க வேண்டிய தேவைக்குமான தொடர்பு குறித்தும் எதுவித விளக்கங்களும் அளிக்கப் பட்டிருக்கவில்லை. (உ-4)

# அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தேர்தலுக்கும் தொடர்பில்லை

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 13

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தேர்தலுக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

தென் மாகாண சபைத் தேர்தலும், மேல் மாகாண சபைத் தேர்தலும் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அதிவேக நெடுஞ்சாலைகள் திறந்து வைக்கப்படுகின்றன. இவை தேர்தலை இலக்காகக் கொண்டுதான் திறந்து வைக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சிகள் சுமத்துகின்றன. இது தொடர்பாக அரசு என்ன கூறுகிறது என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அபிவிருத்திக்கென அரசு ஒரு கால அட்டவணையின் படி செயற்படுகிறது. காலத்துக்குக் காலம், அபிவிருத்தித் திட்டப் பணிகளைப் பூர்த்தி செய்வது.



சுசில் பிரேமஜயந்த

அவற்றை மக்களிடம் கையளிப்பதையும் தாமதப்படுத்தாமல் செய்து வருகிறது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் தேர்தல் ஒன்றை இலக்கு வைத்து அரசு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவில்லை. அப்படியானால் மேல் மாகாண சபைத் தேர்தல் வருகிறது என்பதற்காக கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை தாமதித்துத் திறந்திருக்கலாம்.

நாம் அப்படி செய்யவில்லை. வேலைகள் பூர்த்தியடைந்ததும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கு முன்னதாக திறக்க வேண்டும் என்ற இலக்கு வைத்து திறந்து வைத்தோம். தேர்தலுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

நாம் அதிவேக நெடுஞ்சாலையை திறந்து விடவில்லை என்பதற்காக எவரும் எங்களுக்கு வாக்களிக்காமல் விடப்போவதுமில்லை-என்றார். (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இன்று

யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 148 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவித்தால் மாத்திரமே பேச்சில் தமிழக மீனவர்கள் பங்கெடுப்பார்கள் என்று தமிழக அரசினால் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் 116 மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர். எனினும் இன்று நடைபெறுவதாக இருந்த பேச்சுக்காக நேற்று வந்திருக்க வேண்டிய இந்தியப் பிரதிநிதிகள் வரவில்லை.

**பின்னணி**

இலங்கை எல்லைக்குள்நுழைந்து மீன்பிடிப்பது தொடர்பான பிரச்சினை தொடர்பில் இரு நாடுகளின் அதிகாரிகளும் மீனவர்களும் நேரடியாகப் பேசி ஒரு தீர்வுக்கு வருவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு இரு நாட்டு அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சு, டில்லியில் கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையிலான முதற் கட்ட பேச்சு ஜனவரி 27ஆம் திகதி சென்னையில் இடம்பெற்றது.

இரண்டாம் கட்டப் பேச்சை இன்று கொழும்பில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய வடபகுதியிலிருந்து 16 மீனவர் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் நேற்று கொழும்புக்குச் சென்றிருந்தனர். இந்தியாவிலிருந்து 17 மீனவர்களும், 10 அதிகாரிகளும் வருவதாக இருந் தது. எனினும் கடைசி நேரத் தில் அவர்கள் வரவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று மாலை 4 மணியளவில் இலங்கையை வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்தியத் தரப்பினர் வருகை தரவில்லை. இந்திய மத்திய அரசின் அதிகாரிகள் சிலர் தவிர்க்க முடியாத காரணங்களால் இந்தப் பேச்சில் பங்கெடுக்க முடியவில்லை என்று அதற்குக் காரணம் காட்டப்பட்டுள்ளது. தமது குழுவினர் வருகை தரமாட்டார்கள் என்று இந்திய தரப்பால் இலங்கைக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் இன்று நடைபெறவிருந்த பேச்சு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வடக்கில் இருந்து சென்ற மீனவர் பிரதிநிதிகள் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தனர்.

பெரும்பாலும் இந்த மாதம் 25ஆம் திகதிக்குப் பின்னர் பேச்சு இடம்பெறலாம் என்று இந்திய தரப்புத் தெரிவித்தாக, பேச்சுக்குச் சென்ற வடபகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, முதலாம் கட்டப் பேச்சு முடிவடைந்த பின்னர் 5 கட்டங்களாக 148 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களை விடுதலை செய்தால் மாத்திரமே இரண்டாம் கட்டப் பேச்சு நடை பெறும் என்று தமிழக அரசு தெரிவித்திருந்தது.

**தமிழக அரசு காரணமல்ல**

இந்த நிலையில் நேற்று நான்கு கட்டங்களில் கைது செய்யப்பட்ட 116 மீனவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆனாலும் இந்திய தரப்பினர் பங்கெடுக்கவில்லை.

தமிழக அரசின் நிலைப்பாட்டுக்கும் பேச்சு நிறுத்தப்பட்டதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கடற்றொழில் நீரியல்வள அமைச்சின் ஊடகச் செயலாளர் நரேந்திர ராஜபக்ஷ பி.பி.சி. செய்திச் சேவையிடம் தெரிவித்துள்ளார்.

"முதல் கட்டப் பேச்சில் எட்டப்பட்ட இணக்கத்தை இந்திய மீனவர்கள் மதிக்கத் தவறிய காரணத்தால் கொழும்புப் பேச்சுக்கு முன்னர் தமிழக மீனவர்களை விடுவிக்கக் கூடாதென்று நாம் தெரிவித்திருந்தோம். ஆனாலும் பேச்சைக் குழம்பக் கூடாதென்பதற்காக நல்லெண்ண அடிப்படையில் அவர்களை அரசு விடுவித்தது. இருந்தாலும் அவர்கள் பேச்சுக்கு வராமல் விட்டுவிட்டார்கள். அவர்கள் அங்கு தேர்தல் முடிவடைவதற்கு முன்பாக மீண்டும் பேச்சுக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கில்லை" என்றார் வடபகுதி மீனவர்களுக்கு தலைமை தாங்கி இங்கிருந்து சென்ற ஜஸ்ரின் சொய்ச. (உ-5)

### மாங்குளத்தில்

யைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டவர்களே இந்த எலும்புக்கூட்டை முதலில் கண்டனர். அதையடுத்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலர், மாங்குளம் பொலிஸார் மற்றும் அந்தப் பகுதி இராணுவத்தினருக்கு அவர்கள் தகவல் வழங்கினர்.

கறுப்பு நிற நீளக் காற்சட்டையும், வெள்ளை நிறச் சேட்டும் அணிந்த நிலையில் காணப்பட்ட எலும்புக் கூட்டுடன், 'கிற்பாக்' ஒன்றும், ஒன்றரை லீற்றர் சோடா வெற்றுப் போத்தல், ஒரு சோடி கிற்றோ செருப்பு, மோட்டார் சைக்கிள் திறப்பு (அம்மா பகவான் கீற்றெக்குடன்), நொக்கியா வகை கைத்தொலைபேசி ஒன்று மற்றும் காவு கம்புகள் இரண்டு ஆகியவை காணப்பட்டன என்று கூறப்படுகின்றது.

சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி கணேசராசா தடயப் பொருள்களைப் பார்வையிட்டார். அவை தற்போது மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூட்டின் பாகங்கள் அந்தப் பகுதியில் இருந்து இரண்டு கிலோமீற்றருக்கும் அப்பால் சிதறிக் காணப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

(ற-422-18-400)

### திருத்தப்பட்ட

றும் விசாரணை என்ற விடயத்தில் சொல் மயக்கம் காணப்படுகின்றமையை சுட்டிக்காட்டிய நாடுகள், தெளிவான வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தன.

சகல தரப்புக்களது கருத்துக்களையும் உள்வாங்கிய அமெரிக்க இராஜதந்திரிகள் தீர்மான வரைவில் மாற்றங்களை மேற்கொண்டுள்ளனர். அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளினால், ஜெனிவாவிலுள்ள அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்கள் அனுப்பப்பட்டு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரண்டாவது வரைபுவு எதிர் வரும் சனிக்கிழமை ஐ.நா. மனித உரிமைகளின் உறுப்பு நாடுகளுக்கு விநியோகிக்கப்படும் என்று அறிய முடிகின்றது. இந்தத் தீர்மான வரைவு நிச்சயம் முதலாவது வரைவிலும் பார்க்க வலிமைப்படுத்தப்பட்டதாகவே இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தொடர்ந்து தீர்மானத்தின் இறுதி வரைவைத் தயாரிப்பதற்கு முன்பாக எதிர்வரும் 18ஆம் திகதி ஜெனிவாவில் இணை மாநாடு ஒன்றை நடத்துவதற்கும் அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இதில் வெள்ளை மாளிகையின் உயர் மட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டு தீர்மானத்தின் அவசியம் பற்றி உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-5)

### இன்றும்

கம் தெரிவித்தது. மேல் மாகாணத்தில் 63 ஆயிரத்து 834 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுள், கொழும்பு மாவட்டத்தில் 15 ஆயிரத்து 812 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 27 ஆயிரத்து 275 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 20 ஆயிரத்து 747 பேரும் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

தென் மாகாணத்தில் 62 ஆயிரத்து 962 பேர் வாக்களிக் கத் தகுதி பெற் றுள்ளனர். இவர்களுள், காலி மாவட் டத்தில் 28 ஆயிரத்து 521 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 19 ஆயிரத்து 293 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 15 ஆயிரத்து 148 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

தபால்மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்று இன்றும், நாளையும் வாக்களிக்கத் தவறுவோர், எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை வாக்க ளிக்க முடியும் என்றும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால்மூலம் வாக்களிக்கச் செல்பவர்கள், தேசிய அடையாள அட்டை யையோ அல்லது செல்லுபடியாகும் அடையாள அட்டையையோ அல்லது தேர்தல்கள் திணைக்களத்தினால் அங் கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையை எடுத்துவருவது அவசியமானதாகும்.

அத்துடன், வாக்களிப்பின்போது, புகைப்படம் எடுத்தல், ஒளிப்பதிவு செய்தல் என்பன சட்டவிரோதமான தாகும் என்றும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (சி)

### தமிழருக்கு

இவ்வாறு தெரிவித்தார் இனவாதம் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேச அமைப்பின் கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத் தொடரின் பக்க அமர்வு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இனவாதம் மற்றும் பாரபட்சத்திற்கு எதிரான சர்வதேச அமைப்பின் சார்பில் 'இலங்கையில் ஜனநாயகமும் மனித உரிமை மீறல்களும்' என்ற தலைப்பில் உரையாற்றும் போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று எங்கள் முன்னால் தோன்றியிருக்கும் சவால் இலங்கைக்கு மனித உரிமை மேம்பாட்டுக்காக மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமா என்ற கேள்விக்குப் பதில் தேடுவதே.

இலங்கையில் மனித உரிமைகள் குறித்து பேசுவோர் மீது அரசுக்கு எதிரான கைக்கூலிகள் என குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அதாவது நாம் அல்லது எம்மைப் போன்றவர்கள் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றோம் என்றே அரசு எம்மீது குற்றச்சாட்டுக்களை முன் வைக்கிறது. இவ்வாறே மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீது இலங்கையில் அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் விடுக்கப்படுகின்றன.

உண்மையில் நாம் எவரது கூலிக்காவும் குரல் கொடுக்கவில்லை. அப்படியொரு சந்தர்ப்பத்தை இலங்கை அரசு நிரூபிக்கவும் முடியாது. இலங்கைப் பிரஜைகளாக நாம் நியாயத்துக்காக குரல் கொடுத்து வருகிறோம். என்னைப் பொறுத்தவரை கடந்த 35 வருடங்களாக களத்தில் ஒரு மாணவ செயற்பாட்டாளராக, தொழிற்சங்க வாதியாக, ஒரு சமூகச் செயற்பாட்டாளராக செயற்பட்டு வருவதுடன் இலங்கையின் ஜனநாயகத்துக்காகவும் மனித உரிமைகளுக்காகவும், அனைத்து மக்களின் சம உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்து வருகிறேன்.

இலங்கையில் இராணுவக் கண்காணிப்பு காரணமாகவும், இராணுவக் கலாசாரம் காரணமாகவும் எமக்கான ஜனநாயக இடைவெளி சுருங்கியுள்ளது. விசேடமாக இந்த நிலையை வடக்கிலேயே அவதானிக்க முடிகிறது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மனித உரிமைகள் விடயம் குறித்து ஐ.நாவில் மூன்றாவது தடவையாக அமெரிக்கா பிரேரணை ஒன்றை கொண்டு வருகிறது. அந்தப் பிரேரணையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படுவது குறித்து திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

உண்மையில் கால அவகாசம் வழங்குவது பற்றி பேசுபவர்கள், எங்கள் நாட்டில் பாதிக்கப்படக் கூடிய மக்களைக் கருத்தில் எடுக்காமல் ஒரு தொகை குற்றவாளிகளுக்கு - ஒரு தொகை ஊழல் நிர்வாகிகளுக்கு- ஒரு தொகை அரசியல் வாதிகளுக்கு கால அவகாசம் வழங்குவது பற்றி பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. மக்கள் பாதிக்கப்பட்டார்கள் அவர்களுக்கு நிரந்தர தீர்வு வேண்டும் என்ற அடிப்படையிலேயே நாம் வாதிடுகிறோம் - என்றார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனும் பங்கு கொண்டு கருத்துக்களை முன்வைத்தார். (ஐ)

### பிரேரணை

பாட்டில் தமிழகத்தின் அழுத்தமும் தாக்கத்தைச் செலுத்தும்" என்று இலங்கை அரசு நேற்று தெரி வித்தது.

அத்துடன், நல்லிணக்கத்தை நோக்கித் தாம் நீண்டதூரம் பயணித் திருப்பதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பிரச்சினை களை மட்டும் மையமாகக் கொண்ட அரசியலையே நடத்தி வருகிறது எனவும் அரசு குறிப்பிட்டது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று பிற்பகல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடை பெற்றது.

அமைச்சர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, டிலான் பெரேரா, பிரதியமைச்சர் பைஸல் முஸ்தபா ஆகியோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

கேள்விநேரத்தின்போது ஊடகவிய லாளர்கள் ஜெனிவா விவகாரம் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக் குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் டிலான் பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளரின் அறிக்கையை வரவேற்ப தாகக் குறிப்பிட்ட பின்னரே, விசாரணை என்ற சொற்பதம் பிரேரணையில் பாவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கை சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது. அதை குறித்த பிரே ரணை வரைவு வரவேற்றிருப்பதன் மூலம் நோக்கம் என்னவென்பது தெளிவாகின்றது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் இதை நன்கு வாசித்து உணர்ந்திருப்பார்கள்.

மேலும், வடக்கு, கிழக்கில் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தேர்தல் காலங்களில் அப்பகுதிகளுக்குச் சென்று வாக்கு கோரமுடியாத நிலை ஏற்படும். இதனால்தான் விவகாரங்களை மட்டும் மையமாகக்கொண்ட அரசியலை அது நடத்தி வருகின்றது. இதர எதிர்க்கட்சிகளும் இதே கொள்கையைத்தான் கடைப்பிடித்து வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அடிப்படைவாதக் கொள்கையுடையோரும், நடுநிலையாக செயற்படக்கூடியோருமென இருதரப்பினர்கள் இருக்கின்றனர். தற்போது அக்கட்சியின் உறுப்பினர்களுக்கிடையே ஜெனிவா விவகாரம் குறித்து கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. ஜெனிவாவில் தம்மைப் பேசவிடவில்லை என உறுப்பினரொருவர் மற்றுமொரு உறுப்பினர் மீது விமர்சனம் வெளியிட்டுள்ளார் - என்றார்.

அதேவேளை, ஜெனிவாவில் இலங்கை மீதான பிரேரணை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு இம்முறை எவ்வாறு அமையுமென எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

"இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அங்கு ஆட்சியமைப்பதற்கு கூட்டணியொன்று அவசியம். இதற்குத் தமிழக கட்சியொன்றின் ஆதரவும் தேவை. எனவே, அரசியல் நிலைவரத்தைக் கருத்திற்கொண்டு சில வேளை, தமிழ்நாட்டின் தாளத்திற்கேற்ப இந்திய மத்திய அரசு ஆடலாம். ஆனால், இலங்கைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் இந்தியா செயற்படாது என அவர்கள் தெரிவித்திருக்கும் கருத்துகளையும் நாம் மறந்துவிடமுடியாது" - என்றார்.

இதன்போது, கருத்து வெளியிட்ட அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, போர் முடிவடைந்து குறுகிய காலப்பகுதிக்குள் அரசு நல்லிணக்கத்தை நோக்கி நீண்டதூரம் பயணித்துள்ளது - என்றார். (சி)

### பிரிட்டன்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டன் சென்றிருந்தபோது அவருக்கு எதிராக அங்குள்ள தமிழர்கள் பெரும் போராட்டங்களை நடத்தியிருந்தனர். அதனால் மஹிந்த ராஜபக்ஷ தனது உரையையே நிறுத்திவிட்டு நாடு திரும்பும் நிலையும் ஏற்பட்டிருந்தது.

தற்போது ஐ.நா. மனித உரிமைகள் அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் பிரிட்டன், இலங்கைக்கு எதிரான தீர்மான வரைபுக்கு இணை அனுசரணை வழங்கியுள்ளது. அத்துடன் சர்வதேச விசாரணை கொண்டு வரப்பட வேண்டும் என்பதில் விடாப்பிடியாக உள்ளது. இவ்வாறான தொரு நிலையில் பிரிட்டனுக்குச் செல்வது பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதியே, ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ பயணத்தை தவிர்த்துக் கொண்டுள்ளதாக விடய மறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. (ற-5)

### பாலியல்

வடமராட்சிப் பொதுமக்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு வடமராட்சி பிரதேச செயலகங்கள். பிரதேச சபைகள், வர்த்தக சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆதரவளித்துள்ளன.

பாலியல் துஷ்பிரயோகங்கள், தற்கொலைகள், மதுபோதை பாவனைகள், சட்டவிரோத பணக்கொடுங்கல் வாங்கல், வன் முறைகள் போன்றவற்றுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்த அனைவ ரையும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-422)

### 116 இந்திய

பட்ட 19 மீனவர்களும், கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 30 மீனவர்களும், கடந்த பெப்ரவரி 12 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 29 மீனவர்களுமே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இவர்கள் முற்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். எனினும் இம்மாதம் கைது செய்யப்பட்ட 32 மீனவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட 116 பேரும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தினரிடம் நீதிமன்றத்தால் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் இலங்கைக் கடற்படையினர் ஊடாக இந்திய கடலோரக் காவற்படையினரிடம் இன்று ஒப்படைக்கப்படுவர்.

இருநாட்டு மீனவர்களுக் கிடையேயான பேச்சு இன்று இடம் பெறவுள்ளது என்று முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது. இந்த நிலையிலேயே அதிரடியாக 116 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தமிழ்நாட்டின் இராமநாதபுரம், நாகப்பட்டினம், தஞ்சை மற்றும் தங்கச்சிமடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்தமை மற்றும் மீன்பிடியில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளில் இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன், யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு ,நீதிமன்றினூடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.


அதேவேளை, கடந்த 3 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 32 பேருக்கும் விளக்கமறியலில் நீடிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 14, 16 மற்றும் 17 வயதுடைய மூன்று சிறார்களும் உள்ளடங்குகின்றனர். நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சான்று பெற்ற பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனைய 29 பேரும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக் களத்திலிருந்து அறிவுறுத்தல் கிடைக்காததை அடுத்தே அவர்களுக்கு விளக்கமறியல் நீடிக் கப்பட்டுள்ளது. (ற-4-101)


# வடக்கின் பெரும் போர் இன்று


யாழ்ப்பாணம், மார்ச் 13
'வடக்கின் மாபெரும் போர்' என வர்ணிக்கப்படும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான 108 ஆவது மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.
வருடாந்தம் வடக்கில் இடம்பெறும் கிரிக்கெட் போட்டிகளில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் போட்டியாக இது விளங்குகின்றது.
இன்று ஆரம்பமாகும் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை வரை மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.
இந்தப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி துவாரகசீலனின் தலைமையிலும், யாழ். மத்திய கல்லூரி அணி யூலியஸ் கனிஸ்ரன் தலைமையிலும் களம் இறங்கவுள்ளன.
இரு அணிகளும் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு என்பவற்றில் பலம் வாய்ந்த அணிகளாக உள்ளமையால் பரபரப்பான ஆட்டத்துக்குப் பஞ்சம் இருக்காது.
கடந்த வருடம் நடைபெற்ற வடக்கின் பெரும் போரின் 107 ஆவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
இந்த வருடமாவது கிண்ணத்தை வென்றுவிட வேண்டும் என்ற ஆர்வத்துடன் இரு பாடசாலைகளின் அணிகளும் களத்தில் குதிக்கவுள்ளன.
(உ-22)


## யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் விவரம்



யூலியஸ் கலிஸ்ரன்
அணித் தலைவர்


சௌமிதரன்
உப தலைவர்



நிருபன்
வலது கை
துடுப்பாட்ட வீரன்



செந்தூரன்
இடது கை
துடுப்பாட்ட வீரன்



நிதர்சன்
இடது கை
துடுப்பாட்ட வீரன்



சன்சஜன்
இடது கை ஆரம்ப
துடுப்பாட்ட வீரன்


டேவிட்
இடது கை
துடுப்பாட்ட வீரன்


டினோஜன்
இடது கை
துடுப்பாட்ட வீரன்


அலன்ராஜ்
இடது கை
துடுப்பாட்ட வீரன்


தனுசன்
இடது கை
துடுப்பாட்ட வீரன்



ரசிரூபன்
இடது கை
துடுப்பாட்ட வீரன்


பிரியலக்ஸன்
இடது கை
துடுப்பாட்ட வீரன்


நிரோஜன்
வலது கை
துடுப்பாட்ட வீரர்



கிஷாந்
வலது கை
துடுப்பாட்ட வீரர்



மதுஷன்
வலது கை
துடுப்பாட்ட வீரர்


பிரியந்தன்
வலது கை
துடுப்பாட்ட வீரர்



ஜெயந்திரன்
வலது கை
துடுப்பாட்ட வீரர்

## யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் விவரம்



துவாரகசீலன்
அணித் தலைவர்


ஏபிரகாம்
அனோஷன்
உப தலைவர்


கபில்ராஜ்
இலக்குக்
காப்பாளர்


காணாமிர்தன்
வலக்கை
துடுப்பாட்ட வீரர்


லோகதீஸ்வர்
இடது கை
துப்பாட்ட வீரர்



லதுர்ஷன்
வலது கை
துடுப்பாட்ட வீரர்


கிஷாந்துயன்
இடது கை
வீரர்


துவாரகன்
வலது கை
துடுப்பாட்ட வீரர்


நிலோஜன்
இடது கை
துடுப்பாட்ட வீரர்


தேவபிரசாந்
வலது கை
துடுப்பாட்ட வீரர்



பிரிசங்கர்
வலது கை
துடுப்பாட்ட வீரர்


பிரவின்சன்
வலது கை
துடுப்பாட்ட வீரர்


செலுமிக்
வலது கை
துடுப்பாட்ட வீரர்


சிந்துர்ஜன்
வலது கை
துடுப்பாட்ட வீரர்



சிவதர்சன்
வலது கை
துடுப்பாட்ட வீரர்


கபில்ராஜ்
வலது கை
துடுப்பாட்ட வீரர்


கஜீபன்
இடது கை
துடுப்பாட்ட வீரர்


ஜெனிப்பிளமிங்
இடது கை
துடுப்பாட்ட வீரர்


யதுர்சன்
இடது கை
துடுப்பாட்ட வீரர்


கரோல் லக்ஸி
வலது கை
துடுப்பாட்ட வீரர்

# வடக்கின் போர் பாடல் இறுவெட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்று வருகின்ற வடக்கின் பெரும் போர் 108 ஆவது துடுப்பாட்டப் போட்டியில் கலந்துகொள்ளும் மத்திய கல்லூரி வீரர்களை உற்சாகமூட்டும் வடக்கின் போர் இசைப்பாடல் - 3 இறுவெட்டு மத்திய கல்லூரியின் நாடக மன்றத்தின் அனுசரணையில் வெளியிடப்பட்டுள்ளது.
கல்லூரியின் றொமைன் குக் மண்டபத்தில் கல்லூரி முதல்வர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெற்ற வெளியீட்டு நிகழ்வில் பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத் தலைவர் க.முத்துக்குமார் இறுவெட்டை வெளியிட்டு வைக்க கல்லூரி முதல்வர் எஸ்.கே.எழில்வேந்தன் பெற்றுக்கொண்டார்.
வெளியீட்டுரையினை நாடக மன்ற சிரேஸ்ட பொறுப்பாசிரியர் எஸ்.ரி.குமரன் நிகழ்த்தினார். வடக்கின் போர் வீரர்களை உற்சாக மூட்டும் இசைப் பாடல் வெளியீடானது கல்லூரியின் நாடக மன்றத்தின் அனுசரணையில் 3ஆவது வருடமாக வெளியீடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.
'போலப்போட்டு மச்சி நீயும் விக்கெட்டை தூக்கு ...' பாடலுக்கான கவி வரிகள் - பி.கவிராஜ், பாடல் - நிலக்ஸன், இசையினை அ.ஜெகதீஸ், அருணா ஆகியோரும் உதவிகளை ரி.அருண்குமார், என்.சண்முகராஜா, ரி.லஜீவன், யதுர்சன் ஆகியோரும் வழங்கியுள்ளார்.
'யாழ் மண்ணின் வரலாற்றுப்போர் ....' பாடலுக்கான ஒளிப்பதிவு - பத்மயன், இசை -சாரங்கா இசைக்குழு, பாடல் வரிகள் - பி.நிசாந்தன், தயாரிப்பு - கே.கலிஸ்ரன், பாடலை எஸ்.சங்கீர்த்தன், எஸ்.வாசன், பி.ரஜீவன்,வி.அனோஜன்,ஆர். நிசாந்தன், ஆர்.சலுசன் ஆகியோர் வழங்கியுள்ளார்கள்.
'தாரை தப்பை கிழிப்பது சென்றல் பிக் மச்....' பாடலுக்கான தயாரிப்பினை கோபி, பாடலை யாழ் நிலவன்,சாிமசன் ஆகியோரும் இசையை ஜெகதீஸும் வழங்கியுள்ளார்கள். (கு)


மத்திய கல்லூரி வீரர்களை உற்சாக மூட்டும் வடக்கின் போர் இசைப்பாடல் - 3 இறுவெட்டு மத்திய கல்லூரியின் நாடக மன்றத்தின் அனுசரனையுடன் வெளியிடப்பட்டது.

## கிரிக்கெட் போட்டி

வலி. வடக்கு, மார்ச் 13
உடுவில் பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மென்பந்து கிரிக்கெட் போட்டியை நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
07 பேர் பங்குபற்றும் 05 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியாக இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. பங்குபற்ற விரும்பும் கழகங்கள் நாளை மறுதினத்துக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (கு-86)

# தொடரை வென்றது மேற்கிந்தியத் தீவுகள்



மேற்கிந்திய வீரர்கள்

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது 20/20 போட்டியில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றுத் தொடரைக் கைப்பற்றியது.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி மூன்று 20/20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டி பிரிட்ஜ்டவுனில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணியின் அணித் தலைவர் இயான் மார்கன் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

இங்கிலாந்து அணிக்கு லம்ப் (4), மொயின் அலி(5) ஏமாற்றினர், ஹேல்ஸ்(40) நம்பிக்கை தந்தார், பட்லர் அரைச் சதம்(67) கடந்தார்.

மற்றவர்கள் சொதப்ப இங்கிலாந்து அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குக்கு 152 ஓட்டங்கள் எடுத்தது.

எளிய இலக்கை விரட்டிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு டுவைன் ஸ்மித்(30), கெய்ல் (36) சிறப்பான ஆரம்பம் தந்தனர்.

கடைசிக் கட்டத்தில் அணித் தலைவர் சமியின் அதிரடியில் 18.5 பந்துப்பரிமாற்றத்தில், 5 இலக்குகள் இழப்புக்கு 155 ஓட்டங்கள் எடுத்து 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. (த)

## தீவிர பயிற்சியில் புஜாரா



புஜாரா

ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணியில் நிரந்தர இடம்பிடிப்பதற்காகத் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளார் புஜாரா.

டெஸ்ட் நிபுணர் எனப் பெயர் பெற்ற புஜாரா, சமீபத்தில் பங்களாதேஷில் நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பெற்றிருந்தார். நடுவரிசையில் பலம் சேர்ப்பார் என்பதற்காகப் புஜாராவை அணி நிர்வாகம் தெரிவு செய்திருந்தது.

ஆனால் ஆடும் 11 பேர் கொண்ட அணியில் புஜாரா சேர்க்கப்படவில்லை. புஜாரா மற்றும் ஸ்டூவர்ட் பின்னிக்கு வாய்ப்பு வழங்காததை முன்னாள் அணித் தலைவர் கவாஸ்கர் கண்டித்திருந்தார்.

இருப்பினும், புஜாரா மனம் தளராமல் ஒருநாள் அணியில் தனக்கென நிரந்தர இடத்தைப் பிடிக்க முயற்சித்து வருகிறார்.


இது குறித்து அவர் அளித்துள்ள பேட்டியில், பகுதி நேரப் பந்து வீச்சாளராகச் செயல்படுவதற்காகத் தீவிரமாகப் பந்து வீச்சு பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன்.

அணித் தலைவர் விரும்பினால் பகுதிநேரப் பந்து வீச்சாளராக அணிக்கு உதவுவேன். எனது ஆட்டத்தை நாளுக்கு நாள் மெருகேற்ற முயற்சித்து வருகிறேன். எந்த இடத்தில் தவறு செய்கிறேன் என்பதை ஆராய்ந்து அதைத் திருத்தி வருகிறேன்.

ஏழாவது ஐ.பி.எல் தொடரில் எனது திறமையை நிரூபிக்கும் பட்சத்தில் அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள உலக கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியில் இடம் பெற முடியும் என நம்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஐ.பி.எல் போட்டிகளை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும், அதன் மூலம் நல்ல அனுபவம் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (த)

> அணித் தலைவர் விரும்பினால் பகுதிநேரப் பந்து வீச்சாளராக அணிக்கு உதவுவேன். என் ஆட்டத்தை நாளுக்கு நாள் மெருகேற்ற முயற்சித்து வருகிறேன். எந்த இடத்தில் தவறு செய்கிறேன் என்பதை ஆராய்ந்து அதைத் திருத்தி வருகிறேன்.



உதைபந்தாட்ட வீரர் பலோ டெல்லி

## காணாமல்போன மலேசிய விமானத்தில் பிரபல வீரரின் உருவத்தில் தீவிரவாதியா?

காணாமற்போன மலேசிய விமானத்தில் போலி கடவுச்சீட்டில் பயணம் செய்ததாகக் கருதப்படும் நபரின் உருவம் உதைபந்தாட்ட வீரர் பலோ டெல்லியுடன் ஒத்துப்போவதாகத் தகவல்கள் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

மலேசியன் எயார்லைன்ஸ் எம்.எச்.,370 என்ற விமானம், கோலாலம்பூரிலிருந்து கடந்த 7ஆம் திகதி நள்ளிரவு சீனத் தலைநகர் பீஜிங்குக்குப் புறப்பட்டது. 227 பயணிகள், 12 ஊழியர்களுடன் புறப்பட்ட இந்த விமானம் சிறிது நேரத்தில் விமானக் கட்டுப்பாட்டை இழந்தது. தற்போதுவரை எங்கு சென்றது, என்ன ஆனது என்பது தெரியவில்லை.

இதில் இருவர் திருட்டுக் கடவுச்சீட்டு மூலம் பயணம் செய்துள்ளனர். இவர்கள் பயங்கரவாதிகளாக இருக்கலாம் எனச் சந்தேகம் எழுந்துள்ளது.

ஒருவர் இத்தாலி உதைபந்தாட்ட வீரரான மரியோ பலோடெல்லி மாதிரி இருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இது குறித்து மலேசிய விமானத்துறை அமைச்சர் அசாருதின் அப்துல் கூறுகையில், உங்களுக்கு பலோடெல்லியைத் தெரியுமா? இவரின் உருவம் எப்படி இருக்கும்? இதைப் போலத்தான் ஒருவர் இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

இவர் கறுப்பினத்தைச் சேர்ந்தவர் என்பதால், அமைச்சர் கூறிய கருத்து இனவெறியைத் தூண்டுவதாக உள்ளது எனச் சமூக வலைத்தளங் களில் பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். (த)

# மூன்று கட்டங்களாக ஐ.பி.எல் போட்டிகள்

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகள் ஏப்ரல் 16 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் 1ஆம் திகதி வரை 3 கட்டங்களாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளுக்கான அட்டவணை நேற்று வெளியிடப்பட்டது. முதற்கட்டப் போட்டி, ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஏப்ரல் 16 இல் தொடங்குகிறது.

ஏப்ரல் 30 வரை நடைபெறும் முதல் கட்டப் போட்டியில் மொத்தம் 16 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இரண்டாவது கட்டப் போட்டி மே 1 இல் தொடங்கி மே 12 வரை நடைபெறவுள்ளது.

இந்தியாவில் தேர்தல் நடைபெறுவதை ஒட்டி ஐ.பி.எல் போட்டிகளுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க முடியாது என உள்துறை அமைச்சரின் அலு வலகம் தெரிவித்துள்ளதால், 2 ஆம் கட்டப் போட்டிகள் பங்களாதேஷில் நடைபெறவுள்ளன. இல்லாவிட்டால் இரண்டாம் கட்டப் போட்டிகள் இந்தியாவிலேயே நடைபெறும் என ஐ.பி.எல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், மே 1 இல் தொடங்கி மே 12 வரையிலான காலகட்டத்தில் தேர்தல் நடைபெறாத மாநிலங்களில் போட்டிகளை நடத்த அனுமதி கோரப்பட்டுள்ளது.

மே 13 ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகும் மூன்றாம் மற்றும் இறுதிக்கட்டப் போட்டிகள் ஜூன் 1 இல் நிறைவுபெறுகின்றன. (த)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதும்.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொழும்புத்துறை ஜெட்லைனர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 13

95 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு மின்னொளியில் நடைபெறும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை அருணோதய சன சமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்களில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சாவகச்சேரி சீமா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன்மார்க் கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 13

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின் றன.

இதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டத் தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★


யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட் டுக் கழகம் நடத்தும் 'வடக்கின் சூப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# 20/20 உலகக் கிண்ணத்தை இந்தியா வெல்ல வாய்ப்பு



ஜோகிந்தர் ஷர்மா

2007ஆம் ஆண்டு நடந்த முதலாவது 20/20 உலகக் கிண்ணத்தை இந்தியா வெல்வதில் முக்கிய பங்காற்றியவர் வேகப்பந்து வீச்சாளர் ஜோகிந்தர் ஷர்மா. இதன் இறுதி ஆட்டத்தில் கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் பாகிஸ்தானின் வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவைப் பட்டபோது, 20 ஆவது பந்துப்பரிமாற்றத்தை வீசிய ஜோகிந்தர் ஷர்மா 7 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து எஞ்சிய ஒரு இலக்கையும் வீழ்த்தி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவுக்கு வெற்றியைத் தேடித் தந்தார்.

அரியானாவைச் சேர்ந்த 30 வயதான ஜோகிந்தர் ஷர்மாவுக்கு அதன் பிறகு தேசிய அணியில் இடம் கிடைக்கவில்லை. 2011ஆம் ஆண்டு வீதி விபத்தில் சிக்கிய அவர் காயத்தில் இருந்து குணமடைந்து, மறுபடியும் கிரிக்கெட்டில் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்த நிலையில் வர இருக்கும் 20/20 உலகக் கிண்ணம் குறித்து அவர் அளித்த பேட்டியில், 20/20 கிரிக்கெட்டில் முடிவைக் கணிக்க முடியாது. நாம் அனுபவம் வாய்ந்த அணியாக இருக்கிறோம். துடுப்பாட்ட வரிசை வலுவாக இருக்கிறது. களத்தடுப்பும் நன்றாக உள் ளது. பங்களாதேஷில் போட்டிகள் நடக்க இருப்பதால், எமது சுழற்பந்து வீச்சாளர்களால் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். நம்மிடம் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்கள் இருப்பதால், இந்த முறை கிண்ணம் வெல்ல இந்தியாவுக்கு வாய்ப்புள்ளது-என்றார். (த-400)

# சவாலை சந்திக்கத் தயார்


டரன் சமி

20/20 உலகக் கிண்ணத்தைத் தக்கவைப்பது மிகவும் சவாலானது. ஆனாலும்அதைத்தக்கவைப்பதற்குக் கடுமையாகப் போராடும் வகையில் நாங்கள் தயாராகியிருக்கிறோம் என மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் டரன் சமி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற கடந்த 20/20 உலகக் கிண்ணத்தில் டரன் சமி தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி இலங்கையைத் தோற்கடித்துச் சம்பியன் ஆனது. இந்த நிலையில் அடுத்த உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் ஏப்ரல் 6 ஆம் திகதி வரை பங்களாதேஷில் நடைபெறவுள்ளது.

அது தொடர்பாக டரன் சமி கூறியிருப்பதாவது:


20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நடப்புச் சம்பியனாகப் பங்கேற்பது அற்புதமான உணர்வாகும். எனினும் அது முடிந்துபோன கதை. பங்களாதேஷுக்குச் சென்ற பிறகு கடந்த உலகக் கிண்ணம் பற்றிய நினைவுகளை மறந்துவிட்டு, புதிய எண்ணத்துடன் விளையாடத் தொடங்குவோம்.

கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் எப்படி விளையாடினோமோ அதேபோன்று விளையாடுவோம். ஓர் அணியாக இணைந்து விளையாடுவோம். மீண்டும் கிண்ணத்தை வெல்வதே எங்களின் இலக்கு. இந்த் முறை கிண்ணத்தைத் தக்கவைக்க முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கையோடு இருக்கிறோம். எங்கள் வீரர்கள் அதற்காகக் கடுமையாக உழைத்திருக்கிறார்கள்.

எங்கள் அணியின் அனுபவமிக்க வீரர்களில் ஒருவரான கிரண் போலார்ட் காயம் காரணமாக இடம்பெறவில்லை. அதனால் அவரின் பங்களிப்பை இழக்கிறோம். எனினும் தற்போதைய அணியில் உள்ள வீரர்கள் உலகம் முழுவதிலும் விளையாடிய அனுபவம் பெற்றவர்கள். இவர்களில் 12 பேர் ஐ.பி.எல் போட்டியில் விளையாடியவர்கள். ஐ.பி.எல் போட்டி எனக்கும் நல்ல அனுபவத்தைத் தந்திருக்கிறது.

கெய்ல், பிராவோ, சுனில் நரைன் ஆகியோர் ஐ.பி.எல் போட்டிகளில் கலக்கியவர்கள். அவர்கள் அனைவரும் இடம்பெற்றுள்ள அணிக்கு நான் அணித் தலைவராக இருப்பது மிகப்பெரிய அதிர்ஷ்டம். நடப்புச் சம்பியனாகக் களமிறங்கி, கிண்ணத்தைத் தக்கவைப்பது கடினம் தான். ஆனால் அதைச் செய்வதற்கான தகுதி எங்கள் அணியிடம் இருப்பதாக நினைக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (த)

# சச்சினின் உருவம் பொறித்த 15,921 வெள்ளி நாணயங்கள்


சச்சின் டெண்டுல்கர்

இந்திய அணியின் வீரர் சச்சினின் முகம், பெயர் மற்றும் கையெழுத்து அடங்கிய 15,921 வெள்ளி நாணயங்கள் வெளியிடப்படவுள்ளன.

சதத்தில் சதம் அடித்துச் சாதனை படைத்த சச்சின், கடந்த ஆண்டு சர்வதேசக் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

200 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளவர். மொத்தம் 15,921 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இதனை நினைவுபடுத்தும் வகையில் தனியார் நகைக்கடை ஒன்று வெள்ளி நாணயங்களை நாளை வெள்ளிக்கிழமை வெளியிடவுள்ளது. இந்த நாணயத்தின் மேற்புறத்தில் சச்சின் பெயர், கீழே 200ஆவது டெஸ்ட்- 2013 என எழுதி, நடுவில் இவரது முகம் பதிக்கப்பட்டு இருக்கும். ஏற்கனவே 10, 20 கிராம் எடையில் நாணயங்கள் உள்ளதால், இது 200 கிராம் எடையில் விற்பனைக்கு வரவுள்ளது. (த)

# சர்வதேச மகளிருக்கான 20/20 உலகக் கிண்ணம் பங்களாதேஷில்

சர்வதேச மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண 20/20 போட்டித் தொடர் இந்த மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது.

பங்களாதேஷில் நடைபெறும் உலகக் கிண்ண 20/20 கிரிக்கெட் போட்டிகளுக்கு சமாந்தரமாகப் பெண்களுக்கான உலகக் கிண்ண 20/20 போட்டிகளும் நடைபெறுகின்றன.

இந்த இரண்டு போட்டித் தொடர்களினதும் முதலாம் மற்றும் இரண்டாம் அரையிறுதிப் போட்டிகளும், இறுதிப் போட்டியும் ஒரே தினங்களில் ஒரே மைதானத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இதற்கிடையில் 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடருக்கான பெண்கள் அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

இதன்படி 'ஏ' குழுவில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

'பி' குழுவில், இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள், இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் இணைக் கப்பட்டுள்ளன. (த)

ICC WORLD TWENTY20 Bangladesh 2014

**Sky Computers (Pvt) Ltd**
**சிங்களம்** (E.S.பியதாஸ SLTS Grl)
புதிய பிரிவுகள் ஆரம்பம் TP:0212221417
(14-03-2014 திங், வெள் - 4:30 pm)
**ஆங்கிலம்** (By:S.J.Suthan)
Spoken English With Grammar
(14-03-2014 திங், வெள் - 3:30 pm)
89, கண்டி றோட், யாழ்ப்பாணம். (கச்சேரிக்கு அருகாமையில்)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
**Only Official FRENCH Centre**
Alliance Française de Jaffna
பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு
**French** அரசாங்கம் மற்றும் **French Embassy** ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் **AF** மட்டுமே. திருமணம் மூலம் **France, Canada, Switzerland, Belgium** செல்பவர்கள், **French** கற்க விரும்புவோர் எமது அங்கிகரிக்கப்பட்ட **Certificates** பெறுங்கள்.
புதிய வகுப்புகள்; விரைவில்...உடன் பதிவுசெய்யுங்கள்...
61, Kachcheri-Nallur Road, Jaffna 021 222 8093
(கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் உள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்.
**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
**Diploma in English** 2 1/2 Months
- எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teacher's Panel & Individual Attention.

Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550
Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel : 024 324 5287
Hotlines : 0777585913, 0777222422, 0714299935, 0777730074
Batch 1 : 15.03.2014
Batch 2 : 17.03.2014
Batch 3 : 22.03.2014
Batch 4 : 24.03.2014
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

**ஆசிரியர்கள் தேவை**
திசைகாட்டியின் துன்னாலை இலவச அறநெறிப்பாடசாலைக்கு
1) பண்ணிசைப் போதனாசிரியர்கள்:
முறைப்படி பண்ணிசை பயின்ற பட்டதாரிகள் விரும்பப் படுகின்றனர்.
2) அறநெறி ஆசிரியர்கள்:
இந்து மத அறநெறிக்கருத்துகளைப் போதிக்கக் கூடிய கணினி அறிவு உடைய ஆசிரியர்கள் தேவை.
**கவர்ச்சியான வேதனம்.**
நேர்முகத்தேர்வு :
16.03.2014 மு.ப. 10 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம்பெறும்.
Ms. V. இந்துஜா - பொதுமுகாமையாளர்
(கௌரவ இயக்குநர்சபைக்கட்டளைப்படி)
திசைகாட்டி (பிறை) லிமிற்
175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 2219016

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**
அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், தொழில் தேடுவோர் வெளிநாடு செல்வோர், இளைஞர், யுவதிகள் இணையமுடியும்.
"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 15.03.2014 சனிக்கிழமை
பிரிவு : 4 03.00-05.00
வாரநாள் பிரிவுகள் ஆரம்பம் 13.03.2014 வியாழன்
1. காலை 9.00-11.00 2. காலை 11.00-01.00
குறிப்பு - பயிற்சியில் இணைந்துகொள்ள அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.